
# இலங்கையில் தொலைக்காட்சி

## வரலாற்றுச் சுவடி

அருணா செல்லத்துரை



# Television in Sri Lanka

by
Aruna Selladurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொலைக்காட்சி
## வரலாற்றுச் சுவடி

அருணா செல்லத்துரை

# Television in Sri Lanka

by

**Aruna Selladurai**

***Aruna Publications***
A 15/1/1, Manning Town Housing Complex
Mangala Road, Colombo 8
Sri Lanka
☎ : 688466

*அருணா வெளியீட்டகம்*
*A 15/1/1*, மனிங் ரவுண் வீடமைப்புத் தொகுதி
மங்கள வீதி, கொழும்பு 8
இலங்கை
☎ : 688466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தொலைக்காட்சி / Television in Sri Lanka
முதற் பதிப்பு : டிசம்பர் 1997

© அருணா செல்லத்துரை

பதிப்பாசிரியர் : அருணா செல்லத்துரை

ஆசிரியரின் ஏனைய பங்களிப்புகள்
CONTRIBUTION BY AUTHOR

"வீடு" தொலைக்காட்சி நாடகமும் / வானொலி நாடகங்களும்
"VEEDU" TELE DRAMA/ RADIO DRAMAS

"வேழம்படுத்த வீராங்கனை" முல்லை மோடி வட்டக்களரி நாட்டுக்கூத்து / ஒளிப்பேழை
"VEZAMPADUTHA VEERANKANAI" MULLAI MOODY VADDAKKALARY
TRADITIONAL FOLK DRAMA VIDEO CASSETTE

"ஒலித்தென்றல் – 1" மெல்லிசைப் பாடல்கள் / ஒலிப்பேழை
"OLITHENRAL -1" LIGHT SONGS AUDIO CASSETTE

அருணா செல்லத்துரையின் மெல்லிசைப் பாடல்கள்
(வானொலி / தொலைக்காட்சியில் ஒளி / ஒலிபரப்பாகியவை)
ARUNA SELLADURAIYIN MELLIYSAI PADALKAL
(LIGHT SONGS)

"ஒலித்தென்றல் – 2" மெல்லிசைப் பாடல்கள் ஒலிப்பேழை
"OLITHENRAL - 2" LIGHT SONGS AUDIO CASSETTE

"நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம்
(1996ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)
"NANTHI UDAIYAR" VANNI HISTORICAL & TRADITIONAL DRAMA
*[WON 1996 SAHITHIYA AWARD]*

"நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம் / ஒலிப்பேழை
"NANTHI UDAIYAR" VANNI HISTORICAL & TRADITIONAL
DRAMA AUDIO CASSETTE

"நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம் / சிடி [CD] இசைத்தட்டு
"NANTHI UDAIYAR" VANNI HISTORICAL & TRADITIONAL
DRAMA / *COMPACT DISC (CD)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணா செல்லத்துரை

முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், முள்ளியவளை சைவப் பாடசாலை, வற்றாப்பளை ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை, வித்தியானந்தாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். 1960க்குப் பின்னர் முள்ளியவளை இயல், இசை, நாடகக் கலாமன்றம், பாரதி இளைஞர் இலக்கிய மன்றம் போன்றவற்றில் பொறுப்பான பதவிகளை வகித்து பல மேடை நாடகங்களை எழுதியும் தயாரித்தும் நடித்தும் இயக்கியும் அனுபவம் பெற்றவர்.

1970ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளராகச் சேர்ந்து நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றவர். வானொலியில் நாடகங்கள், உரைச்சித்திரங்கள், விளம்பர நிகழ்ச்சிகள் போன்றவற்றை எழுதியும் தயாரித்துமுள்ளார். கடந்த 27 வருடங்களாக வானொலி நடிகராகவும், பகுதி நேர அறிவிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். 1974 ல் இலங்கைக் கலைக்கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் முல்லைத்தீவுப் பிரதேச மரபுவழி வட்டக்களரி நாட்டுக்கூத்தான 'கோவலன் கூத்தை' மேடைக்காகத் தயாரித்து மேடையேற்றி முதல் பரிசைப் பெற்று, பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பாராட்டைப் பெற்றவர்.

1981ல் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சிக்காக மேற்கு ஜேர்மனி சென்று பயிற்சி பெற்றவர். பின்னர் 1984ல் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தொலைக்காட்சி செய்திப் பரிவர்த்தனை பயிற்சி பெற்றவர். தொலைக்காட்சியில் 'ஆயகலைகள்' என்ற நிகழ்ச்சியை ஆரம்பித்துப் பல நுண்கலைகளைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாகத் தயாரித்தவர். 'ஒளித்தென்றல்' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியைத் தொடங்கி பல மெல்லிசைக் கலைஞர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்தவர். இந்த நிகழ்ச்சிக்கென 55 மெல்லிசைப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து அவற்றைத் தொலைக்காட்சிப் பாடல்களாக நெறிப்படுத்தியவர். அத்துடன் தொலைக்காட்சியில் 'உதயகீதம்' மெல்லிசைக் கலைஞர் அறிமுக நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தவர்.

தொலைக்காட்சி போன்றவற்றிற்குப் பல மெல்லிசைப் பாடல்களும் எழுதியுள்ள இவர் 'திருப்பங்கள்' என்ற தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரித்து தொலைக்காட்சி நாடக வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியவர். 'வீடு' என்ற மூன்று அங்கங்களைக் கொண்ட நாடகத்தினை எழுதி ரூபவாஹினிக் கலையகத்தில் தயாரித்து நெறிப்படுத்தியவர். தொலைக்காட்சித் துறையில் புதிதாக பிரவேசிப்பவர்களுக்கு உதவும் வகையில் அந்த சாதனம் தொடர்பாகக் கட்டாயமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருக்க வேண்டிய பிரதி தயாரிப்பு, தயாரிப்பு நுட்பங்கள் போன்றவை பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள உதவும் வகையில் 'வீடு' நாடகத்தை நூல் வடிவில் வெளியிட்டவர்.

தொடர்புச் சாதனத்துறையில் ஈடுபட்டு, தான் பெற்ற அனுபவங்கள் மூலம் ஒரு சில விடயங்களை விளக்க எடுக்கப்பட்ட இந்த முயற்சி பலரது பாராட்டைப் பெற்றதாகும். இந்த நூல் பற்றி கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் குறிப்பிடுகையில் "எழுத்தாளர், தயாரிப்பாளர், நடிகர், தொழில்நுட்பவல்லுனர் என்ற நான்கின் இணைவு அபூர்வமானது. இந்த நான்கு அம்சங்களும் அருணாவில் இருப்பது அவரது பிளஸ் பொயின்டாகும் இதுவே அவரது முதலீடாகும். இம் முதலீட்டை ஆதாரமாகக் கொண்டு இவர் பெருலாபமீட்ட வேண்டும். சிறந்த நாடக எழுத்தாளராக, இயக்குனராக வளர்வதற்குரிய நல்ல குணாம்சங்கள் இவரிடம் உள்ளன. 'வீடு' நாடகம் அதற்கு மிகச் சிறந்த உதாரணம்" என்று கூறியிருந்தார்.

இந்த நூல் பற்றிப் பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராஜன் அவர்கள் குறிப்பிடுகையில் "தமிழிலே வெளிவந்த ஒரு தொலைக்காட்சி வாத்தியார்" என்று பாராட்டியிருந்தார். இந்த நூல் 1993ம் ஆண்டு ஈழத்தில் வெளிவந்த ஆக்கவிலக்கியங்களில் நாடகஞ் சார்ந்த சிறந்த நூல்களில் ஒன்றாக யாழ். இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவையின் இலக்கியச் சான்றிதழ் பெற்றதாகும்.

இலங்கையின் வன்னி வள நாட்டிலே மங்கி மறையும் புராண சரித்திரங்கள் பல உண்டு. அவற்றில் ஒன்றான வேலப்பணிக்கன் ஒப்பாரியில் இருந்து நாட்டுக்கூத்து வடிவமாக்கப்பட்ட "வேழம்படுத்த வீராங்கனை" என்ற நாட்டுக் கூத்தை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்குப் பழக்கி மேடையேற்றி பல பரிசில்களைப் பெறச் செய்தவர். அந்தக் கூத்தை 1993ம் ஆண்டு நடைபெற்ற வவுனியா பிரதேச தமிழ் சாகித்திய விழாவில் மேடையேற்றியவர். பின்னர் கொழும்பில் நடைபெற்ற சாகித்திய விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியாக மேடையேற்றி அறிஞர்கள் பலரின் பாராட்டைப் பெற்றவர். இதன் பின்னர் இந்த முல்லைமோடி நாட்டுக்கூத்தை 1994ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒளிப்பேழையாக வெளியிட்டார். இதன் மூலம் இலங்கையின் வன்னிக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் முதலாவது நாட்டுக்கூத்து ஒளிப்பேழை என்ற பெருமையையும் "வேழம்படுத்த வீராங்கனை" பெற்றுக் கொண்டது.

1995ல் அவரால் எழுதப்பட்ட மெல்லிசைப் பாடல்கள் நூலும், பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழையும் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்தப் பாடல்கள் அனைத்தும் ஒலிப்பதிவாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிசைப் பாடல்களாக வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளிபரப்பாகியவை என்பது குறிப்பிடத்தக்கது. வானொலி – தொலைக்காட்சி மெல்லிசைப் பாடல்கள் வரிசையில் நூலுருப் பெற்ற முதலாவது வெளியீடு என்ற பெருமையை "அருணா செல்லத்துரையின் மெல்லிசைப் பாடல்கள்" என்ற நூல் பெற்றுக் கொள்கிறது. அதே போல மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய முதலாவது ஒலிப்பேழையை 'ஒலித்தென்றல் – 1' என்ற பெயரில் வெளியிட்ட பெருமையையும் அருணா செல்லத்துரை அவர்களையே சாரும்.

கொழும்பு அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தினால் 1992ம் ஆண்டு "கலா விநோதன்" என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டு, முன்னாள் அதி உத்தம ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டவர்.

1993ம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற வவுனியாப் பிரதேச தமிழ் சாகித்திய விழாவில் இந்து சமயக் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ பி.பி. தேவராஜ் அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

1994ம் ஆண்டு கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய தமிழ்க் கலைவிழாவில் தொடர்பியல் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியினைப் பாராட்டி "தொடர்பியல் வித்தகர்" எனும் பட்டம் வழங்கப்பட்டு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். 1996ம் ஆண்டு "ஒலித்தென்றல் – 2" என்ற ஒலிப்பேழையில் மா.சத்தியமூர்த்தி அவர்கள் பாடிய மெல்லிசைப் பாடல்களை வெளியிட்டுள்ளார்.

1996ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதன் முதலாக 'நந்தி உடையார்' எனும் வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகத்தை எழுதி நூல் வடிவில் வெளியிட்டார். இந்த நூலுக்கு 1996ம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது.

1997ம் ஆண்டு நந்தி உடையார் வன்னிப்பாரம்பரிய வரலாற்று நாடகத்தை 'ஒலிப்பேழையாகவும்' 'சி/டி இசைத்தட்டாகவும்' வெளியிட்டார். இது இலங்கையின் நாடக வரலாற்றில் முதன் முதலாக வெளியிடப்பட்ட ஒலிப்பேழையும் சி/டி இசைத்தட்டுமாகும். 1997ம் ஆண்டு டிசம்பர் மாதம் "இலங்கையில் தொலைக்காட்சி" எனும் வரலாற்றுச் சுவடி வெளிவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உட்புகு முன் உங்களுடன் சில நிமிடங்கள்

இந்த நூல் ஒரு மொழிபெயர்ப்பல்ல. தொலைக்காட்சிச் சேவையின் ஆரம்பத்தில் இருந்து கடமையாற்றுவதால் சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் முயற்சியே இது. அத்தோடு இனிமேல் தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாக வர இருப்பவர்களுக்குச் சில அடிப்படை விளக்கங்களைத் தருவதும் என்னுடைய நோக்கமாகும். தொலைக்காட்சி ஆரம்பித்து பல ஆண்டுகளானாலும் இத்துறையில் பாண்டித்தியம் பெறாமல் இருக்கும் வரை எம்மால் நல்ல நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முடியாது. தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு அல்லது அதைப்பற்றி ஏதாவது பேச வேண்டுமானால் அதில் ஓரளவேனும் நிபுணத்துவமும், நடைமுறை அனுபவமும் வேண்டும். இதற்கு மேலோட்டமாகத் தொலைக் காட்சியைப்பற்றித் தெரிந்து வைத்திருப்பதால் பிரயோசனமில்லை. அந்தத் துறையைத் தொழில்சார் ரீதியாக நாம் படிக்க வேண்டும். முறைப்படி கற்றுத் தெளிய வேண்டும். நுனிப்புல் மேய்பவர்களுக்கு இத்துறையில் முன்னேற்றமடைய முடியாது.

இலங்கையில் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நடந்ததை ஆதார பூர்வமாக குறித்து வைத்துள்ளேன். தகவல் தொடர்பு ஊடகங்களில் நாம் எதற்கெல்லாமோ கோபப்படுகிறோம். எரிச்சலபடுகிறோம். எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோம். பிழையான வழிகளில் பதவி உயர்வுகளைப் பெறுகிறோம். இதனால் சமூகத்தில் குழப்பங்களும் எல்லாத் துறைகளிலும் ஒரு தேக்க நிலையுமே ஏற்படுகிறது. முடிவில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒவ்வொரு திக்கில் போய்விடுகிறது.

வியாபார நோக்கத்திற்காகவோ பதவிகளைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திற் காகவோ இத்துறைகளில் ஈடுபடுபவர்களின் நிலை என்னவாயிற்று. அரைவாசியில் இத்துறையை விட்டு ஒதுங்கி விட்டார்கள். தங்களது சொந்தத் தேவைகளுக்குப் பயன் படுத்தியவர்கள் இத்துறையிலே பிரச்சினைகளை உருவாக்கி தீர்வுகளைக் காணமுடியாமல் தவிக்கிறார்கள். தமிழ்க் கலைத்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களிடையே புனிதத்தன்மை நிலவ வேண்டியது அவசியம். ஏற்றத் தாழ்வுகள் இன்றி இத்துறையில் ஈடுபடவிருக்கும் எதிர்காலச் சந்ததியினருக்குத் தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிய வரலாற்று தகவல்களையும் எனது அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலேயே இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

இனி வாசியுங்கள்................

– அன்புடன் அருணா செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....


| | |
|---|---|
| தொலைக்காட்சி ஓர் அறிமுகம் | 09–10 |
| இலங்கையில் தொலைக்காட்சி | 10–33 |
| தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் | 33–37 |
| ரூபவாஹினிச் செய்திகள் | 37–44 |
| தொலைக்காட்சி செய்திச் சேகரிப்பு | 44–52 |
| தொலைக்காட்சிச் செய்தித் தயாரிப்பு | 52–61 |
| தொலைக்காட்சி நாடகங்கள் | 61–67 |
| தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பு | 67–78 |
| தொலைக்காட்சியில் இசை நிகழ்ச்சிகள் | 78–84 |
| தொலைக்காட்சி – மெல்லிசைத் தயாரிப்பு | 84–89 |
| கல்விச் சேவை நிகழ்ச்சிகள் | 90–91 |
| விவரண நிகழ்ச்சித் தயாரிப்பு / ஆயகலைகள் | 92–93 |
| முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவு – விசேட நிகழ்ச்சிப் பிரிவு | 93 |
| நிகழ்ச்சித் தயாரிப்பில் பங்காற்றுவோர் | 94 |
| ரூபவாஹினியில் பதவி வகித்தோர் | 95–96 |
| தொலைக்காட்சிச் சொற்களஞ்சியம் | 97–100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொலைக்காட்சி

## தொலைக்காட்சி: ஓர் அறிமுகம்

தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைக்கான காட்சிகளை [VISUALS படங்களை] ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குக் காற்றின் ஊடாக அனுப்ப முடியும் என்ற தத்துவத்தை 1883ம் ஆண்டு ஜேர்மனிய மாணவனான போல் நிப்கொவ் [ PAUL NIPKOW] வெளியிட்டார். ஜோன் லொகிபேர்ட் [ JOHN LOGIEBIRD ] என்பவர் 1928ம் ஆண்டு இங்கிலாந்தில் பி.பி.சி.யின் [BRITISH BROADCASTING CORPORATION] மத்திய அலைவரிசையைப் பயன்படுத்தி உலகின் முதலாவது கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பித்திருந்தார். 1936ல் பி.பி.சி நிலையம் தினசரி நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப ஆரம்பித்தது. என்.ரி.எஸ்.சி [ NTSC] என்ற வர்ணத் தொலைக்காட்சி 1954ல் அமெரிக்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதுவே உலகின் முதலாவது வர்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவையாகும். 1970களில் உலகின் பல நாடுகளிலும் தொலைக்காட்சி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைகள் உலகில் ஆரம்பிக்கப்பட்டு 69 ஆண்டுகளானாலும், இலங்கையில் முழுமையான தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகள் ஆகின்றன. உலக நாடுகள் பலவற்றிலும் தற்போது கம்பியில்லாத் தொலைக்காட்சிச் சேவை, கேபிள் தொலைக்காட்சிச் சேவை, செய்மதித் தொலைக் காட்சி மீள் ஒளிபரப்புச் சேவை என பலவகையான ஒளிபரப்புச் சேவைகள் நடாத்தப்படுகின்றன. ஒளிபரப்புக்குத் தேவையான அன்ரெனாக்களைப் [ANTENNA] பொருத்தி ஒளிபரப்பு செய்வது ஒரு வகையாகும். செய்மதிகள் [SATELLITE] மூலமும் ஒளிபரப்புச் சேவைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தொலைக்காட்சிச் சேவைகள் நவீன முறைகளில் அபிவிருத்தியடைந்து காணப்படுவதால் இந்த ஊடகம் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது எனலாம். தற்போது இன்ரநெற் [INTERNET] மூலம் தகவல் பரிமாற்றமும், செய்மதிகள் ஊடாக மகாநாடுகளும் நடைபெறுவதால் தகவல் தொடர்பு ஊடகம் ஒரு வளர்ச்சியடைந்த நிலையை எய்தியுள்ளது என்று கூறலாம்.

அண்மைக் காலங்களில் தொலைபேசியில் பேசுபவரைக் கூட நேரடியாகப் பார்த்துப் பேசக் கூடிய வகையில் தொழில் நுட்பச் சேவைகள் வளர்ச்சியடைந்துள்ளன. தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து பார்க்கக் கூடியதாகவும் தொலைக்காட்சிச் சேவைகள் அமைந்துள்ளன. நாம் பார்க்கும் நிகழ்ச்சிகளில் எமது உருவத்தைப் புகுத்தி அந்த நிகழ்ச்சியைத்



*தகவல் தொடர்புச் செய்மதி Satellite*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியில் பார்க்கக் கூடியதாகவும் நவீன முறைகள் அமைந்துள்ளன. இந்த முறை இன்ரக்ரிவ் ரி.வி [INTERACTIVE TV] முறையென அழைக்கப்படுகிறது.

இவையெல்லாம் கம்பியூட்டரின் அறிமுகத்தால் தொலைக்காட்சியில் ஏற்பட்டுள்ள வியத்தகு அபிவிருத்திகளாகும். ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள தொழில்நுட்ப நிறுவனங்கள் ஒன்றிணைந்து இதுபோன்ற நவீன உபகரணங்களைத் தயாரித்து விநியோகிக்க முன்வந்துள்ளன. இவை அதி நவீன தொழில்நுட்ப உபகரணங்களானபடியால் அவற்றுக்கான உற்பத்திச் செலவுகள் அதிகமாகும். இந்த நவீன தொழில் நுட்பங்களினால் தொலைக்காட்சிக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள உறவு மிகவும் நெருங்கி விட்டது. ஆகவே இந்த யுகத்தில் வாழும் ஒவ்வொருவரும் மிகவும் பாக்கியம் செய்தவர்களாவோம்.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் 65க்கும் மேற்பட்ட அலைவரிசைகளில் தொலைக்காட்சிச் சேவைகள் நடைபெறுகின்றன. அமெரிக்காவில் மட்டும் கேபிள் தொலைக்காட்சிச் சேவைகளோடு சேர்த்து 500க்கும் மேற்பட்ட தொலைக்காட்சிச் சேவைகள் நடைபெறுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கூடுதலான அலைவரிசைகளில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதால் நிகழ்ச்சிகளைத் தரம் பிரித்துத் தெரிவு செய்து பார்ப்பதற்கும் இன்ரக்ரிவ் ரி.வி. முறை [INTERACTIVE TV] துணைபுரிகிறது.

தற்போது இலங்கையில் ரூபவாஹினி, சுயாதீனத் தொலைக்காட்சி, எம்.ரி.வி, ரி.என்.எல், சுவர்ணவாஹினி, டயான விசன், சி.என்.என்., ஈ.ரி.வி போன்ற தொலைக்காட்சிச் சேவைகளைப் பார்க்கக்கூடிய வசதிகள் இருக்கின்றன. அதே வேளை பலர் நவீன அன்ரெனாக்களைப் பொருத்தி உலக தொலைக்காட்சிச் சேவைகள் பலவற்றையும் பார்த்து வருகிறார்கள்.

## இலங்கையில் தொலைக்காட்சி

இலங்கை வரலாற்றிலே தொலைக்காட்சி என்றதும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் எல்லோர் மனதிலும் நினைவுக்கு வரும். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் இந்தப் பெயரைப் பெறுவதற்கு முன்னர், தேசிய தொலைக்காட்சி நிலையம், தேசிய ரூபவாஹினி நிலையம், இலங்கை ரூபவாஹினி சேவை என்ற பெயர்களிலே சொற்ப காலம் இயங்கி வந்தது.

### 1979ம் ஆண்டு

1979ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் தொலைக்காட்சிச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான எண்ணக்கருக்கள் ஆரம்பிக்கத் தொடங்கின. அக் காலத்தில் தகவல்தொடர்பு ஊடகங்கள், இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கி வந்தன. இராஜாங்க அமைச்சின் செயலாளராக இருந்தவர் திரு. சரத் அமுனுகம ஆவார். திரு. சரத் அமுனுகம இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த தேவிஸ் குருகே அவர்களையும் உள்ளடக்கி குழு ஒன்றை அமைத்தார். அந்தக் குழுவிடம் தொலைக்காட்சி நிலையம் அமைப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிஸ் குருகே அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதம பொறியியலாளராக இருந்த டேவிட் புவல் அவர்களின் தொழில்நுட்ப ஆலோசனைகளுடன் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை ஆரம்பித்தார். தொலைக்காட்சிச் சேவைக்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் தலைமையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபைக் கூடத்திலே ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொழில் நுட்பத் தேவைகளையும், இலங்கை அரச திரைப்படப் பிரிவு, படப்பிடிப்புப் சேவைகளையும் வழங்குவதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது. தொலைக்காட்சி என்பது ஒலி ஒளி இரண்டையும் உள்ளடக்கிய ஊடகம் என்பதனால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் குழுவிற்குத் தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் குழு [NATIONAL TELEVISION PLANNING COMMITTEE] என பெயரிடப்பட்டது. இந்தக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்களிலே தமிழ்ப் பிரதிநிதிகளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி பொன்மணி குலசிங்கமும், மேலதிகப் பணிப்பாளராக இருந்த திருமதி. ஞானம் இரத்தினமும் பங்குபற்றினர்.

தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் குழுவிற்கான முதல் இரண்டு கூட்டங்களின் அறிக்கைகள் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் 26.02.79ல் இடம்பெற்ற மூன்றாவது கூட்டத்தின் அறிக்கை எமக்குக் கிடைத்துள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டங்களிலே திரு. சான் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டுள்ளார். திரு. சான் விக்ரமசிங்க தனியார் சுயாதீன தொலைக்காட்சியொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த காரணத்தினால் அவரும் இந்தக் கூட்டங்களிலே பங்குபற்ற அழைக்கப்பட்டிருந்தார். 26.02.1979 கூட்ட அறிக்கை இது.

N.T.P.C. Meeting with the SEcretary State held on 26.2.79. at
6.30 p.m. at the SLBC Board Room. - (3)

Present: S/S (Chairman), S.A.S., Chairman SLBC, DG, H.M. Gunasekera, I. Gunaratne, Chitra Ranawaka, Chandra Moonesinghe, Sanath Liyanage, Wimal Perera, G. Rathinam, Dayananda Gunawardena.

3.1 S/S stated that the objectives of the N.T.P.C. should now be to prepare for the National T.V. System, expected to go into operation by the end of 1980. The ITN (of Mr. Shantilal Wickramasinghe) has indicated that they would start transmissions by the Sinhala New Year 1979.

3.2 S/S suggested that licence money could be set apart temporarily to finance the N.T.P.C. activities.

3.3 Work connected with the N.T.P.C. building at the C.F.U. premises is now nearing completion, the place could be declared open on 9th March 1979.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்ட அறிக்கையிலே சுயாதீன தொலைக்காட்சி நிலையம் 1979ம் ஆண்டு சித்திரை மாத தமிழ்-சிங்கள புத்தாண்டு தினத்திலே தனது ஒளிபரப்பை ஆரம்பிக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.

கிருலப்பனையில் இயங்கிய அரச திரைப்படப் பிரிவிலே தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் நிலையத்திற்காக அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன்படி அரச திரைப்படப் பிரிவின் ஒரு பகுதியிலே இந்த நிலையம் அமைக்கப்பட்டது. இந்த நிலையத்தை வைபவ ரீதியாக ஆரம்பிப்பதற்கான கூட்டம் 08.03.1979ல் அரச திரைப்படப் பிரிவிலே நடைபெற்றது. அந்தக் கூட்ட அறிக்கை இது.

<u>NTPC Meeting with the S/S held on 8.3.79. at the G.F.U. - (5)</u>

<u>Present</u>: S/S.(Chairman), DI, D/GFU, Mrs. Chitra Ranawake, Mrs. C. Rathinam, Mrs. I. Gunaratne, H.M. Gunasekera, Chandra Munasinghe, Dayananda Gunawardena.

This meeting was held to finalize all arrangements made for the opening of the NTPC on 9.3.79.. At the Editorial Meeting held on 8.3.79. the D.G. entrusted the handling of arrangements, which had been endorsed by the S/S to a committee comprising of Dayananda Gunawardene, Mrs. Indrani Gunaratne, Mrs. C. Rathinam, Mrs. C. Ranawake, and H.M. Gunasekera. This Committee to work in consultation with the D/GFU and Sanatha Liyanage.

5.1 <u>Invitations</u>: 200 cards printed at the Govt. Press. Mr. Dujeac Gunaratne (SLBC) wrote out the invitations and he was assisted by Mr. K. Loganathan of the Education Service (SLBC). Mr. S.M.D.Michael and Mr. K. Loganathan (SLBC) attended to the despatching of the invitations, to the following:
Hon. Cabinet Ministers, Secretaries to the Ministries, Cultural Attaches of Embassies or the First Secretaries, Newspapers, P.M.G., Cultural Centres, UNDP, I.T.N., T.V. Firms, State Ministry Officials, Information Dept. and GFU, SLBC Board Members and Directors, Special Invitees.

5.2 <u>Meeting Hall</u>: 150 chairs ordered.[redacted]

5.3 <u>P.A. System and recording</u> - By Mr. S.M. Somaratne.

5.4 <u>Kavum, Kiribath</u>: From SLBC Canteen. Tea from the G.F.U..

5.5 <u>Auspicious time</u>: 10.26 a.m.. To light the lamp facing north given by Mr. Lolimbavansa.

தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் நிலையத் திறப்பு விழாவிற்கு விண்வெளி ஆய்வாளர் திரு. ஆர்தர் சி கிளார்க்கும் அழைக்கப்பட்டிருந்தார். இராஜாங்க அமைச்சின் செயலாளர் சரத் அமுனுகமவின் அழைப்பின்பேரில் இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அவர்கள் 1979ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் திகதி காலை 10.26க்கு தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்த சிரேஷ்ட அதிகாரிகள் சிலரும், அரச திரைப்படப் பிரிவில் இருந்த சில சிரேஷ்ட உழியர்களும் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். 1982ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்படவிருக்கும், தொலைக்காட்சி நிலையத்திற்கான முன்னோடி நடவடிக்கைகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இவர்களுள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதம பொறியியலாளர் திரு.டேவிட் புவல், பொறியியலாளர்களான திரு.எம்.குணதாச, திரு.சாந்தி பொன்சேகா, திரு. கே.என்.குணவர்தன, திரு.ருக்மன் விஜயமான்ன ஆகியோரும், அரச திரைப்படப் பிரிவைச் சேர்ந்த திரு. சனத் லியனகே, திரு.விமல் பெரேரா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயாதீன தொலைக்காட்சி
## [INDEPENDENT TELEVISION NETWORK]

திரு.சான் விக்கிரமசிங்க, திரு.அனில் விஜயவர்தன ஆகிய இருவரும் இணைந்து 1979ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி புதுவருடத் தினத்தன்று சுயாதீன தொலைக்காட்சியை ஆரம்பித்தார்கள். சுயாதீன தொலைக்காட்சி கொழும்புப் பிரதேசத்தில் பன்னிப்பிட்டியவில் இருந்து ஒளிபரப்பை ஆரம்பித்தது. இது இலங்கையின் தொலைக்காட்சி வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.இந்த நிலையம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில நிகழ்ச்சிகளையே கூடுதலாக ஒளிபரப்பி வந்தது. 1979ம் ஆண்டு தேசிய தொலைக்காட்சி நிலையத்தை அமைத்துக் கொடுப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் முன்வந்தது. இதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளப் ஜப்பானிய பொறியியலாளர்களுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பொறியியலாளர்களும் ஈடுபட்டனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிரதம பொறியியலாளரான திரு டேவிட் புவல் [BSc, MSc, FIEE (LON) பொறியியலாளரான எம். குணதாச சகிதம் ஒளிபரப்பி நிலையத்திற்கான கோபுரம் அமைய வேண்டிய இடத்தைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டார். இதற்குப் பொருத்தமான இடமாக பீதுறுதாலகால மலை தெரிவு செய்யப்பட்டது.

போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தினால் பொறியியலாளர்கள் பல முறை பீதுறுதாலகால மலையிலே ஏறி இறங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதம பொறியியலாளரான திரு. டேவிட் புவல் திரு. எம். குணதாசவோடு பல முறை இந்த மலையிலே ஏறி இறங்கியிருக்கிறார். 10.06.1979ல் திரு.டேவிட் புவல் பொறியியலாளர் எம். குணதாசவோடு இந்த மலையில் ஏறியபோது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவருடன் சென்றவர்கள் அவரைச் சிகிச்சைக்காகத் தூக்கிச் சென்ற போதும் அவருடைய உயிர் பிரிந்து விட்டது. அவரின் சிரார்த்த தினத்தன்று முழு இரவு பிரித் ஓதும் வைபவம் இடம்பெறுவது வழக்கம். திரு.டேவிட் புவல் அவர்கள் யாழ்ப்பாணம் அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முதன் முதல் தொலைக்காட்சி ஊடக வளர்ச்சிக்காகத் தனது உயிரை அர்ப்பணம் செய்தவர் ஒரு தமிழ்ப் பொறியியலாளர் என நினைக்கும் போது பெருமை ஏற்படத்தான் செய்கிறது.

## சுயாதீன தொலைக்காட்சி நிலையம்
## [INDEPENDENT TELEVISION NETWORK]

சுயாதீன தொலைக்காட்சி நிலையத்தில் ஏற்பட்ட நிர்வாக மாற்றங்களினாலும், நிலையத்திற்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினாலும் அந்த ஒளிபரப்பு நிலையத்தை அரசு பொறுப்பெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இராஜாங்க அமைச்சின் செயலாளராக இருந்த திரு. சரத் அமுனுகம இதற்கான நடவடிக்கைகளை எடுத்தார். அரசு பொறுப்பேற்கும் வர்த்தக சுவீகரிப்புச் சட்டத்திற்கு இணங்க [GOVERNMENT - OWNED BUSINESS UNDERTAKING] இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி தனியாரிடமிருந்து அரசு பொறுப்பேற்ற முதலாவது வர்த்தக நிலையமாகச் சுயாதீன தொலைக்காட்சி நிலையம் விளங்குகிறது. அரசு பொறுப்பேற்றதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த திரு.தேவிஸ் குருகே சுயாதீன தொலைக்காட்சி நிலையத்தின் தகுதி வாய்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். அதன் ஒளிபரப்பி நிலையம் தொடர்ந்தும் பன்னிப் பிட்டியவிலேயே இயங்கி வந்தது. 1979ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அரசு பொறுப்பிலுள்ள முதலாவது தொலைக்காட்சி நிலையமாக இருந்ததினால் தொலைக்காட்சி அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணத்தை அறவிடுவதற்கான அனுமதி இராஜாங்க அமைச்சினால் வழங்கப்பட்டது. ஆனால் இந்தத் தொலைக்காட்சி அனுமதிப்பத்திரக் கட்டண்த்தில் இருந்து மூன்றில் இரண்டு பங்கு தொகைப்பணம் இலங்கை தேசிய தொலைக்காட்சி அமைப்பு நிதியத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடப்பட்டது.

## 1980 ஆண்டு

தொலைக்காட்சி நிலையக் கட்டடங்கள் அமைப்பதற்குப் பொருத்தமான இடமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு எதிரில் இருந்த பெண்கள் ஹொக்கி கிளப் மைதானம் தெரிவு செய்யப்பட்டது. 1980ம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் திகதி தொலைக்காட்சி நிலைய கட்டடங் களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ரோடா [TODA] மற்றும் மிற்சுயி [MITSUI] ஆகிய ஜப்பானிய நிறுவனங்கள், இலங்கை வோர்க்கர்ஸ் சிவில் என்ஜினியர்ஸ் நிறுவனத்துடன் [WALKERS CIVIL ENGINEERS] இணைந்து கட்டட வேலைகளை ஆரம்பித்தன. கட்டட அமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக ஜப்பானியப் பொறியியலாளரான திரு.ஜிரோ ஒனோ நியமிக்கப்பட்டார். அவர் பல வருடங்களாக தொலைக்காட்சி நிலையத்தோடு இணைந்து கடமையாற்றினார்.

சுயாதீனத் தொலைக்காட்சி நிலையத்திற்கு திரு. தேவிஸ் குருகே அவர்கள் தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்ட காரணத்தினால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும் தொலைக்காட்சி நிகழ்ச்சி அமைப்பிற்காக ஈடுபடுத்தினார். அதேபோல அரச திரைப்படப் பிரிவின் படப்பிடிப்பாளர்கள் படப் பிடிப்புத் தேவைகளுக்கான சேவைகளை வழங்க வேண்டியும் ஏற்பட்டது. அரச திரைப்படப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் திரு. சனத் லியனகே தலைமையில் தமது பங்களிப்பைச் செய்ய ஆரம்பித்தனர்.

தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் நிலையத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றிலே தேவிஸ் குருகே அவர்கள் உள்நாட்டிலே தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார். இந்த நிகழ்ச்சித் தயாரிப்புப் பொறுப்பும் அரச திரைப்படப் பிரிவைச் சேர்ந்த சனத் லியனகே அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. இந்தத் தயாரிப்புக்களுக்குத் தொழில்நுட்ப வசதிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பொறியியலாளர்களாக இருந்த திரு. கே.என். குணவர்த்தன, திரு. சாந்தி பொன்சேகா ஆகியோர் வழங்கினர்.

இலங்கையின் முதலாவது உள்நாட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சியாக ஜனாதிபதி திரைப்பட விருது வழங்கும் நிகழ்ச்சி அமைந்தது. இந்த நிகழ்ச்சி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விருது வழங்கும் நிகழ்ச்சித் தொடர் யாவும் அகாய் தயாரிப்பான வி.எச்.எஸ் [AKAI - VHS/VIDEO HOME SERVICE] கமெராவினால் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இந்தக் கமெரா வீட்டுத் தேவைகளுக்கு மட்டும் உபயோகப்படுத்தும் தரமானபடியினால் அதன் ஒளிப்பதிவுத் தரம் மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி நிகழ்ச்சி வி.எச்.எஸ். கமெராவைப் பயன்படுத்தியே ஒளிப்பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது என்பது முக்கிய அம்சமாகும். விருது வழங்கும் நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்யப்பட்டு பன்னிப்பிட்டியவில் உள்ள ஒளிபரப்பி நிலையத்தின் ஊடாகவே ஒளிபரப்பு செய்யப்பட்டது. இங்கிலாந்து இளவரசரான சார்ள்ஸ், இளவரசி டயானா ஆகியோரின் திருமண வைபவம் உலக நாடுகளில் உள்ள அனேக தொலைக்காட்சி நிலையங்களினால் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்ட வைபவமாகும். இந்த வைபவம் பாதுக்கையில் உள்ள செய்மதித் தொடர்பு நிலையத்தில் (EARTH STATION) ஒளிப்பதிவு செய்யப்பட்டு அன்றிரவே சுயாதீன தொலைக் காட்சியூடாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியை கொழும்பு ரசிகர்கள்முண்டியடித்துப் பார்த்துப் பரவசப்பட்டமை இன்றும் மறக்க முடியாத நிகழ்வாக இருக்கிறது.



*செய்மதித் தொடர்பு நிலையம் Earth Station*

தேசிய தொலைக்காட்சித் திட்டமிடல் நிலையத்தின் திட்டமிடல் கடமைகள் நிறைவு பெற்றபடியால் அதன் பெயரை மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டது. அதன்படி 1980ம் ஆண்டு "தொலைக்காட்சி ஆலோசனைச் சபை" [TELEVISION ADVISORY BOARD] எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த ஆலோசனைச் சபையே தேசிய தொலைக்காட்சி நிலையத்தை அமைப்பதற்குப் பொறுப்பாக இருந்தது. இந்த ஆலோசனைச் சபையிலே திருவாளர்கள் சரத் அமுனுகம, எம்.ஜே. பெரேரா, தேவிஸ் குருகே, காமினி பேத்ரிஸ், சந்திரா விஜயவர்தன, எச்.எம். குணசேகர, ஷேர்லி பெரேரா, சாந்திலால் நாணயக்கார, கிறிஸ் அல்மெயிடா, கே.என். குணவர்தன, ஜோர்ஜ் விக்ரமசிங்க, சுனில் அபயசுந்தர, ருக்மின் விஜயமான்ன, சுனில்சாந்த, ஏ.எம். உப்பதுல்லா, சனத் லியனகே, விமல் பெரேரா, திருமதி ஞானம் இரத்தினம், திருமதி இந்திராணி குணரத்ன, திருமதி நேசி நல்லையா ஆகியோர் அங்கம் வகித்தனர். இந்த ஆலோசனைச் சபை ஒவ்வொரு கிழமையும் இராஜாங்க அமைச்சிலே தனது கூட்டங்களை நடத்தி வந்தது. இதன் செயலாளராக திரு. நரெயின் சிட்டி கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கி வந்த தகவல் திணைக்களத்திற்கு ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஜனத்தொகை நடவடிக்கை நிதியம் [UNFPA] தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக்கான ஒரு தொகுதி உபகரணங்களை வழங்கியது. இந்த உபகரணத் தொகுதியிலே யூ மற்றிக் [U-MATIC] லோ பான்ட் ஒளிப்பதிவுக் கருவி [LOW BAND RECORDING MACHINE] கமெரா [CAMERA], படத்தொகுப்பு உபகரணம் (EDITING UNIT) ஆகியன அடங்கும். இவை அனைத்தும் கிருலப்பனை அரச திரைப்படப் பிரிவிலே படத் தொகுப்புக் கலையகம் ஒன்றை [EDITING STUDIO] அமைப்பதற்கு உதவியாக இருந்தன. இந்தப் படத்தொகுப்பு நிலையத்தில் இருந்துதான் நிகழ்ச்சிகள் படத்தொகுப்புச் செய்யப்பட்டு சுயாதீன தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. 1980ம் ஆண்டு கொழும்பு ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற றோயல் – தோமியன் கிரிக்கற் போட்டியே முதலாவது விளம்பர நிகழ்ச்சியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

போதிய தொழில் நுட்ப உபகரணங்கள் இன்றி அறிவிப்பாளர்களுக்குக் கைகளினால் சைகை காட்டி வர்ணனை செய்யச் சொல்லி கிரிக்கெற் போட்டி ஒளிப்பதிவு செய்யப்பட்டது. ஒளிப் பதிவு செய்யப்பட்ட நாடா கிருலப்பனையில் உள்ள படத்தொகுப்புக் கலையகத்தில் படத்தொகுப்பு செய்யப்பட்டு அன்றிரவே சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டதை அந்த நிகழ்ச்சிக்குப் படப்பிடிப்பாளராகக் கடமையாற்றிய திரு. விமல் பெரேரா மறக்க முடியாத நிகழ்வாகத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து இவ்வாறான பல நிகழ்ச்சிகள் சுயாதீன தொலைக்காட்சியில் ஒளி பரப்பாகிய வண்ணம் இருந்தன.

## 1981ம் ஆண்டு

1981ம் ஆண்டு தொலைக்காட்சிப் பயிற்சி பெறுவதற்காகச் செய்தித் தயாரிப்பாளர்களையும், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையும் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. கனேடிய தொலைக்காட்சி வல்லுனரான திரு. வோர்ணர் ரோயர் [WARNOR TROYER] தொலைக்காட்சி ஆலோசனை நிலையத்தின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். முதலில் செய்தித் தயாரிப்பாளர்களை ஜப்பானுக்குப் பயிற்சி பெற அனுப்புவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இந்த நேர்முகப் பரீட்சையின் இறுதித் தேர்வு திரு. வோர்ணர் ரோயரினாலும் நடத்தப்பட்டது. இந்தத் தேர்விலே என்னையும் தெரிவு செய்திருந்தார்கள்.

ஜப்பானிய தொலைக்காட்சி நிறுவனம் [N.H.K] தொழில்நுட்பவியலாளர்களுக்கே முதலில் பயிற்சி அளிக்க விரும்பிய காரணத்தால் முதலாவது தொகுதி தொழில்நுட்பவியலாளர்கள் 1981ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து ஏழு தொழில்நுட்பவியலாளர்களும், அரச திரைப்படப் பிரிவில் இருந்து ஏழு தொழில் நுட்பவியலாளர்களும் தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். இதனால் செய்தித் தயாரிப்புப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட குழுவினரின் பயணம் பின்போடப்பட்டது.

கிருலப்பனை அரச திரைப்படப் பிரிவில் இயங்கிய சிறிய படத்தொகுப்பு நிலையம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி நிலையத்திற்காக கட்டப்பட்ட இரண்டு கலையகங்கள் [TR I, TR II] ஒளிப்பதிவுத் தேவைக்கும் படத் தொகுப்பு தேவைக்கும் உபயோகப்படுத்தப்படத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதி வாய்ந்த அதிகாரியாக இருந்த தேவிஸ் குருகேயின் அறிவுறுத்தலின்படி ஆங்கில, சிங்கள மொழிகளில் ஒளிபரப்பான செய்தி மஞ்சரி 1981 ஜனவரி மாதக் கடைசி வாரத்தில் தமிழ் மொழியிலும் ஆரம்பிக்கப்பட்டது. வாரத்திற்கு ஒரு செய்தி மஞ்சரி ஒளிபரப்பாகியது. இதில் கூடுதலாக வெளிநாட்டுச் செய்திப் படங்கள் சேர்க்கப்பட்டன. அந்த வாரத்தினுள் இடம்பெறும் சில உள்நாட்டுச் செய்திகளும் இணைக்கப்பட்டன. இந்தச் செய்தி மஞ்சரி தயாரிப்புகளில் நானும், சில்வெஸ்ரர் எம். பாலசுப்பிரமணியம் அவர்களும் ஈடுபட்டோம். எனக்குத் தொலைக்காட்சி உபகரணங்களில் பரிச்சயம் கிடைப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. செல்வி கமலா தம்பிராஜா, செல்வி மனோகரி சதாசிவம், திரு.வி.என். மதியழகன் ஆகியோர் தமிழ் செய்தி மஞ்சரி அறிவிப்பாளர்களாகக் கடமையாற்றினர். ஆங்கிலச் செய்தி மஞ்சரி அறிவிப்பாளர்களாக திரு.எரிக் பெர்னாண்டோ, திருமதி நொயிலின் ஹொன்ரர் ஆகியோரும் சிங்கள மொழி அறிவிப்பாளர்களாக திரு.டி.எஸ். தயாரத்ன, திருமதி சுமணா நெல்லம்பிட்டிய ஆகியோர் விளங்கினர்.

1981ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ந் திகதி முதலாவது செய்தித் தயாரிப்பாளர் குழுவினர் பயிற்சிக்காக மேற்கு ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டார்கள். இந்தக்குழுவிலே திரு.சந்திரா முனசிங்க, திரு. அருணா செல்லத்துரை (கட்டுரை ஆசிரியர்), கே.டி.கே. தர்மவர்தன, திரு. எல்மோ பெர்னாண்டோ, திரு.வின்சி பெரேரா ஆகியோர் அடங்குவர். இந்தக் குழுவினருக்கு ஏப்ரல் மாதம் 04ம் திகதியிலிருந்து ஜூன்மாதம் 26ந் திகதி வரை சென்ட்ர் விறைஸ் பேர்லின் [SENDER FREIES BERLIN] எனும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் தொலைக்காட்சி சம்பந்தமான பலவித பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்த மூன்று மாத காலப் பயிற்சிக்கு ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சு அனுசரணை வழங்கியது. இலங்கையில் முழுமையாகத் தொலைக்காட்சிச்சேவை ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டதனால் பயிற்சியின் போது எடுக்கப்பட்ட படங்களையும் பயிற்சி முடிந்த பின் எமக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதியையும் சான்றிதழ் வழங்கிய பின் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் தருகிறேன்.



ஜேர்மனியில் தொலைக்காட்சிப்பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மன் கலையகத்தில் தொலைக்காட்சி செய்தித் தயாரிப்புப் பயிற்சி



பயிற்சி நிலைய அதிபர் சான்றிதழ் வழங்குகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிச் சான்றிதழ்

# SENDER FREIES BERLIN
# Berlin Television Training Centre

SFB

**We hereby certify that**

**Mr. ARUNAASALAM SELLADURAI**

**has successfully completed**
**the Television Course for**
**News and Current Affairs Programme Personnel**

**at the Berlin Television Training Centre**

**6.4.1981–26.6.1981**

**Berlin, 24.6.1981**

**Director General** ____________

**Principal** ____________

**Masurenallee 8-14 · 1000 Berlin 19 · Federal Republic of Germany**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மன் அரசின் சான்றிதழ்

# Bundesrepublik Deutschland

## Berufliche Aus- und Fortbildung

Mr. Arunaasalam Selladurai

geb. 9.9.1947 in Mulliyawalai / SRI LANKA

hat vom 6.4.1981 bis 26.6.1981 auf Einladung

der Regierung der Bundesrepublik Deutschland

eine berufliche Aus- und Fortbildung auf dem Gebiet

TV-Kurs for News and Current Affairs
Programme Personnel
erhalten.

Hiermit wird bestätigt, daß die Aus- und Fortbildung erfolgreich abgeschlossen wurde. Über die Leistungen auf den verschiedenen Fachgebieten wurden Einzelzeugnisse ausgestellt.

DER BUNDESMINISTER
FÜR WIRTSCHAFTLICHE
ZUSAMMENARBEIT

Im Auftrag

Bonn, den 26.6.1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TRANSLATION

# Federal Republic of Germany

## Professional education and advanced training

Mr. Arunaasalam Selladurai

born 9.9.1947 in Mulliyawalai / SRI LANKA
has, from 6.4.1981 until 26.6.1981 upon invitation

of the Federal Republic of Germany
received a professional education and advanced training in the field of

TV-course for News and Current Affairs Programme Personnel

It is hereby certified that the education and advanced training have been concluded with success. Individual certificates have been issued in respect of the results achieved in the various specialized fields.

//The Federal Minister for
Economic Cooperation
by order
stamp, signature
Bonn, date//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1981ல் ஜேர்மனியில் தொலைக்காட்சிப் பயிற்சி பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ம் ஆண்டு மே மாதம் 04ந் திகதி பீதுறுதாலகால மலையில் அமைக்கப்பட்ட ஒளிபரப்பிக் கோபுர வேலைகள் யாவும் பூர்த்தியடைந்தன. போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையினால் தேவையான உபகரணங்களை மலைமேல் கொண்டு செல்வதற்கு ஹெலிக்கொப்ரர்கள் உபயோகப்படுத்தப்பட்டன. இந்த ஹெலிக்கொப்ரர்கள் இலங்கைக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் ஏழாவது கப்பற் படையில் இருந்து பெறப்பட்டவையாகும்.

இதன் பின்னர் தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பி நிலைய அமைப்பு வேலைகள் முடிவடைந்ததினால் அதன் பரீட்சார்த்த ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் சுயாதீன தொலைக்காட்சி நிலையம் தொடர்ந்தும் ஒளிபரப்பை நடத்திய வண்ணம் இருந்தது. 1981ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இரண்டாவது எலிசபெத் மகாராணியார் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவருடைய விஜயத்தை செய்தி ஒளிபரப்பிற்காகச் சுயாதீன தொலைக்காட்சி ஒளிப்பதிவு செய்தது. மகாராணியார் பங்குபற்றும் ஒரு வைபவம் காலிமுகத் திடலில் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சியை நேரடியாக ஒளிபரப்புவதற்குத் தேசிய தொலைக்காட்சி நிலையம் நடவடிக்கைகளை எடுத்தது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் இருந்த இரண்டு கமராக்கள் இதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டன. அங்கு உபகரணங்களுக்குப் பொறுப்பாக பொறியியலாளர் திரு.கே.என். குணவர்தன இருந்தார். இந்த நேரடி ஒளிபரப்பிற்குத் திரு. சனத் லியனகே தயாரிப்பாளராகக் கடமையாற்றினார். பொறியியலாளர் திரு. ருக்மன் விஜயமான தொழில் நுட்பவியலாளர்களுக்குப் பொறுப்பாக இருந்தார். இரண்டு கமராக்கள் மட்டுமே இந்த நேரடி ஒளிபரப்பிற்கு உபயாகப்படுத்தப்பட்டன. இதில் ஒரு கமெராவைப் படப்பிடிப்பாளரான விமல் பெரேராவும் அடுத்த கமெராவை தொழில்நுட்பவியலாளரான துசித முனிந்திரதாசவும் கையாண்டு படங்களைப் பிடித்தனர். இந்தக் காலங்களிலும் செய்தி மஞ்சரி நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கலையகங்களில் ஒளிப்பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பாகி வந்தன.

கட்டட வேலைகள் நிறைவு பெறும் தறுவாயில் தொலைக்காட்சி என்ற பதத்திற்கு பொருத்தமான சிங்கள மொழிப் பதத்திற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாகத் தொலைக்காட்சி என்ற பதத்திற்கு ஒரு குறியீட்டுச் சொல்லாக வடமொழிச் சொல்லான ரூபவாஹினி என்ற பதம் தெரிவு செய்யப்பட்டது.

இந்தத் தெரிவு தமிழர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்தது. ஆனால் 'ரூபம்' என்றால் உருவம், 'வாஹினி' என்றால் வாகனம், உருவத்தை தாங்கிச் செல்லும் ஒரு வாகனம் என்று அர்த்தத்தில் எம் மனதை திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

1981ம் ஆண்டு நவம்பர் மாதம் 02ந் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து மேலும் பல தொழில்நுட்பவியலாளர்களும், செய்தித் தயாரிப் பாளர்களும், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் தேசிய ரூபவாஹினி நிலையத்திற்கு மாற்றம் செய்யப் பட்டனர். அவர்களில் திருமதி ஞானம் இரத்தினம், திரு. சில்வெஸ்ரர் எம் பாலசுப்பிரமணியம், திரு. அருணா செல்லத்துரை, திரு. பி. விக்கினேஸ்வரன் ஆகியோரும் அடங்குவர். அப்பொழுது என்னை மாற்றுவதாக தெரிவித்த மாற்றல் கடிதத்தின் பிரதி தரப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අංකය: පා/පුහු.1726../මා2

.අරුණා.දෙවිඳු.සේ..මයින්,

නිෂ්පාදක,........,

.ශ්‍රී.සෙල්ලදුරෙයි.......මහතා/මිය/මෙනවිය

1981 නොවැම්බර් මස 02 දින සිට ඔබ ජාතික රූපවාහිනී මධ්‍යස්ථානයේ සේවය සඳහා ශ්‍රී ලංකා ගුවන් විදුලි සංස්ථා සේවයෙන් මුදාහැරීමට සංස්ථාව තීරණය කර ඇති බව මෙයින් දන්වමි.

පාලන අධ්‍යක්ෂ

අ/ස.ඩී.වී.එල්.ගුරුගේ
අධ්‍යක්ෂ ජනරාල්.

1981..10.......මස..30.වැනි දින,
ශ්‍රී ලංකා ගුවන් විදුලි සංස්ථාව,
කොළඹ 7.

நாம் மாற்றம் பெற்று வந்த போது ரூபவாஹினி நிலையத்தில் மேசை, கதிரைகள் ஒன்றும் இருக்கவில்லை. காகிதாதிகள் கூட இல்லை. இவற்றையெல்லாம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கொண்டு வந்து செய்தித் தயாரிப்புக்களை ஆரம்பித்தோம். சில ஊழியர்களின் சம்பளத்தைக் கூட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமே வழங்கி வந்தது.

1981ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ந் திகதி ரொறிங்டன் சதுக்கத்தில் கட்டப்பட்ட பிரதான ரூபவாஹினி நிலையத்தின் கட்டட வேலைகள் யாவும் முடிவடைந்து வைபவ ரீதியாகக் கையளிக்கப்பட்டது. "தேசிய ரூபவாஹிணி நிலையம் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் நேச உறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றைக் குறிக்குமுகமாக ஜப்பானிய அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது 1981' என அன்று திறந்துவைக்கப்பட்ட பெயர்ப்படிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பெயர்ப் படிகத்திலே தேசிய ரூபவாஹிணி என மூன்று சுழி 'ண' போடப்பட்டே எழுதப்பட்டிருந்தது. இதனால் எதுவித தமிழ் அர்த்தமும் இல்லாமல் போய்விட்டதாகக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இதே தவறு சிங்கள மொழியில் எழுதப்பட்ட வாசகத்திலும் இருப்பதை நீங்கள் இப்போதும் காணலாம். அடுத்த படிகத்தில் இந்தப் பிழை திருத்தப்பட்டு ரூபவாஹினி என எழுதப்பட்டது.


ஆரம்பத்தில் தொலைக்காட்சிச் சேவைக்கு மாற்றப்பட்டவர்களில் சிலர் முறையாகத் தொலைக்காட்சிப் பயிற்சியைப் பெற்றவர்களல்லர். இதனால் ஒரு சிலர் ரூபவாஹினி சேவைக்கு மாற்றம் செய்யப்பட்ட பின்னர் பயிற்சிக்காக மலேசியா அனுப்பப்பட்டார்கள். அவர்களில் திருமதி ஞானம் இரத்தினமும், திரு.பி. விக்கினேஸ்வரனும் ஒரு மாத காலப் பயிற்சிக்காக மலேசியாவிற்கு அனுப்பப்பட்டவர்களாவர்.

தொலைக்காட்சி நிலையத்திலே இரண்டு கலையகங்கள் கட்டப்பட்டிருந்தன. அதில் சிறிய கலையகம் செய்தி ஒளிபரப்புச் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது. முதலாம் இலக்க கலையகம் பெரியது. இதில் நிகழ்ச்சிகளைத் தயாரிக்க பலர் திரு. தேவிஸ் குருகேயை அணுகினார்கள். அவரால் அனுமதி வழங்கப்பட்டாலும் ஜப்பானிய பொறியியலாளர்களாலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றப்பட்ட பொறியியலாளர்களாலும் நிகழ்ச்சித் தயாரிப்புப் பற்றிய அட்டவணைகள் கோரப்பட்டன. அதிகமானவர்களால் போதிய நிகழ்ச்சித் தயாரிப்பு அட்டவணையைக் கொடுக்க முடியாமல் போகவே வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டன. சில நிகழ்ச்சிகள் முழுமையாகத் தயாரிக்க முடியாமல் அரைவாசியில் நிறுத்தப்பட்டதும் உண்டு.

கலையகங்கள் கையளிக்கப்பட்ட பின்னர் மெல்லிசை நிகழ்ச்சியொன்றைத் தயாரிப்பதற்கான அட்டவணைகள் என்னால் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த நேரத்தில் எதுவித வசதிகளும் இல்லாத காரணத்தினால் வெற்றுத்தாளில் கைகளினால் அட்டவணைப் படங்களை வரைந்து கொடுக்க வேண்டியிருந்தது. செய்திப் பிரிவில் கடமையாற்றிய வண்ணமே முதலாவது தமிழ்த் தொலைக்காட்சி மெல்லிசை நிகழ்ச்சியைத் தயாரிப்பதற்கான அட்டவணைகளைச் சமர்ப்பித்தேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்ட, கலையகங்களில் கமெரா வைப்பதற்கான இடங்களை குறித்துக் கொடுத்த பிரதியையும், படப்பிடிப்புக்கும், படத்தொகுப்புக்கும் தேவையான பிரதியையும், கீழே காணலாம்.



LIGHT SONG RECORDING 18-11-81.

SONG I ARTIST: S.K. Pararajasingam.
Kohila Sivarajah.

ORCHESTRA:- VIOLIN 3
FLUTE 1
SITAR 1
VEENA 1
TABLA 1
PIANO 1
GUITAR 1

SONG II ARTIST: M.A. KULASEELANATHAN


SONG III ARTIST:- S. K. PARARAJASINGAM.

SONG IV ARTIST: S.K. PARARAJASINGAM.
M.A. KULASEELANATHAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I + II




(9) SONG :- GANGAIYALEY
DURATION :- 3 MTS.


ARTIST :- S. K. PARARAJASINGAM.
KOHILA SIVARAJAH.
MUSIC. M. K. ROCKSAMY.

| CAMERA. | DURATION | SONG — MUSIC. |
|---|---|---|
| CAMERA II + CAMERA III | 05"<br>25"<br>44" | silhouette of group — light down<br>~~ESTABLISHING SHOT~~ [illegible] up<br>CLOSE UP SITAR.<br>(FLUTE) CLOSE UP.<br>Mix on to the music group<br>Key Mahaveli Visual. VCR |
| CAMERA I ZOOM IN (SINGERS) | 45" | [illegible] } II |
| CAMERA II + CAMERA III | 102" | CLOSE UP — FLUTE<br>CLOSE UP. — VIOLIN.<br>CLOSE UP — SITAR. FLUTE. |
| CAMERA I | 120" | [illegible] II |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையகங்கள் கையளிக்கப்பட்ட எட்டு நாட்களின் பின்னர் முதலாவது தொலைக்காட்சி நிகழ்ச்சியைத் தயாரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இந்த மெல்லிசை நிகழ்ச்சியிலே திரு.எஸ்.கே. பரராஜசிங்கம், திரு. எம். ஏ. குலசீலநாதன், திருமதி கோகிலா சிவராஜா ஆகியோர் பாடிய மெல்லிசைப் பாடல்கள் ஒளிப்பதிவு செய்யப்பட்டன. 18.11.1982ல் இடம்பெற்ற இந்த மெல்லிசை நிகழ்ச்சிக்கான பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. இந்தப் பாடல் ஒன்றுக்கு திருமதி லீலாவதி இரத்தினசிங்கம் வீணை வாசித்தார். திரு. எம்.கே.றொக்சாமி அவர்கள் இசையமைத்தார். அவர் எழுதிச் சமர்ப்பித்த இசைச் சுரங்களுக்கான பிரதி.




எல்லோருக்கும் அனுபவம் குறைவாக இருந்ததினால் அந்த மெல்லிசை நிகழ்ச்சியை மன நிறைவாகத் தயாரிக்க முடியவில்லை. இதற்கு நேரம் போதாமை ஒரு முக்கிய காரணமாக இருந்தது. இருந்தாலும் முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி முழுமையாகத் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படுவதற்கென தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்த திருமதி ஞானம் இரத்தினம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரிடம் கொடுக்கப்பட்ட ஒளி நாடா இலக்கம் ஐ.ரி.என். எச்.ஏ.60/53 ஆகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்ச்சித் தயாரிப்பில் தொழில்நுட்பவியலாளராகக் கடமையாற்றிய குமார் கனகரத்தினம் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சிக்குப் பல சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர்கள் தங்களது பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். படப்பிடிப்பு (கமரா) திருவாளர்கள் வின்சி பெரேரா, துசித முனிந்திரதாச, அன்ரன் பொலன்னே ஆகியோரும் ஒலியமைப்பை திருமதி சுமதி ரணசிங்க, அனுர முனசிங்க ஆகியோரும் படத்தொகுப்பை திரு. லீலாரட்ண ரணசிங்கவும் ஒளியமைப்பை திரு.வின்சி பெரேரா, திரு. துசித முனிந்திரதாச, திரு. அன்ரன் பொலன்னே ஆகியோரும் பொறியியல் உதவிகளை திரு. செனரத் ஜயவர்தன, திரு. சங்கர் செனவிரத்ன ஆகியோரும் ஒளிப்பதிவுப் பொறியியலாளராக திரு. ரி. சிறிஸ்கந்தராஜாவும் தமது பங்களிப்புக்களைச் செய்தனர்.

இந்த நிகழ்ச்சித் தயாரிப்பில் தொழில்நுட்பவியலாளர்கள் தங்கள் கடமைகளை எல்லாத் துறைகளிலும் மாறிமாறி செய்திருப்பது முக்கிய அம்சமாகும். இதற்கு ஆதாரமாக தொழில் நுட்பவியலாளர்களால் எழுதப்பட்ட பெயர் அட்டவணைப் பிரதி.


Camera
Vincy Perera
Thusitha Munindradasa
Anton ~~B.A.V.G.~~ Bolonne.

Sound
Sumathi Ranasinghe
Anura Munasinghe

Vision Mixer
Leelaratne Ranasinghe

Lighting
Vincy Perera
Thusitha Munindradasa
Anton Bolonne.

1981ம் ஆண்டு நவம்பர் மாதம் ஒளிபரப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட மெல்லிசை நிகழ்ச்சி உடனடியாக ஒளிபரப்பப்படவில்லை. நிகழ்ச்சிகள் ஒளிபரப்புக்காக நிர்வாகத்தினரால் கோரப்பட்ட போதிலும் தமிழ் நிகழ்ச்சிகள் எதுவும் தயாராக இல்லை என்றே தெரிவிக்கப்பட்டது. பின்னர் பி.விக்கினேஸ்வரன் அவர்கள் தைப்பொங்கல் நிகழ்ச்சியைத் தயாரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ம் ஆண்டு நவம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட தமிழ் மெல்லிசை நிகழ்ச்சி 1982ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சிச் சேவை ஆகியவற்றில் ஒளிபரப்பாகியது. இந்த நிகழ்ச்சி விக்கினேஸ்வரன் அவர்கள் தயாரித்த தைப்பொங்கல் நிகழ்ச்சியோடு சேர்த்தே ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சி பற்றி 24.01.1982ல் சிந்தாமணிப் பத்திரிகையில் வெளிவந்த விமர்சனம்.

---

*சிந்தாமணி 24—1—1982 ஞாயிற்றுக்கிழமை*

சிந்தாமணி

# இலக்கியபீடம்

## டெலிவிஷனில் தைப்பொங்கல்

தைப் பொங்கல் தினத்தன்று இரவு-ரூபவாஹினியிலும், சுயாதீன தொலைக்காட்சியிலும் தைப் பொங்கல் நிகழ்ச்சி ஒன்றினை ஒளிபரப்பினார்கள். முதல் முறையாக இப்படி ஒரு சமய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தமைக்கு டெலிவிஷன் தமிழ்ப் பகுதியினரைப் பாராட்டுகிறோம்.

"மார்கழிப் பெண்ணுக்கு விடை கொடுத்து – இந்த, தை மகள் வந்தாள் நடை போட்டு" என்ற பாடல் நன்றாக இருந்தது. பாடலில் கருத்தும் இனிமையும் இருந்தன. இப் பாடலைப் பாடிய ஜெயதேவி விக்னேஸ்வரன் நன்றாகப் பாடினார்.

அப்போது பொங்கல் இடும் காட்சி இடம் பெற்றது. இதில் சில குறைபாடுகள் இருந்தன – அடுத்த முறை தவறுகளைத் திருத்துவதற்காகச் சுட்டிக் காட்டுகிறோம். மற்றப்படி யாரையும் குறை கூறுவதற்காக அல்ல.

பொங்கல் பானை என்று கேள்விப்பட்டிருக்கிறோமே தவிர "பொங்கல் முட்டி" என்று கேள்விப்பட்டதில்லை. படத்தில் வந்தது ஒரு மண்குடத்தின் மினியேச்சர் மொடலாக இருந்தது. "நிறைவான" பானை ஒன்றை வைத்திருக்கலாம்.

பொங்கல் பானையில் அரிசி போடுவதற்கு விதிமுறையுண்டு. சுமங்கலியான வீட்டின் தலைவி அல்லது வீட்டின் தலைவர்தான் அரிசி போட வேண்டும். அதுவும் இரண்டு கையினாலும் அரிசியை அள்ளி நேரே கிழக்கு முகமாக ஆகாயத்துக்கு உயர்த்தி சூரியனுக்கு அர்ப்பணித்து பின்னர் பொங்கல் பானையை மூன்று முறை வலமாகச் சுற்றி நுங்கும் நுரையுமாகப் பொங்கி நிற்கும் [illegible]

## சந்தனமேடையும் சலங்கை நாதமும்

நடன நிகழ்ச்சியின் பின்னர் திருவாளர்கள் குலசீலநாதனும், பரராஜசிங்கமும் சேர்ந்து மெல்லிசை பாடினார்கள். "சந்தன மேடையின் இதயத்திலே சலங்கையின் நாதம்தான் கேட்குதடி" என்ற பாடலையும், "என் இதய வாணியடி, உன் இதய வீணையிலே, என் இசையை மீட்டு கிறாய்..." என்ற பாடலையும் பாடினார்கள். இரு பாடல்களுமே நன்றாக இருந்தன. பாடிய தரமும் உயர்வாக இருந்தது.

ஒரு பாடல் ஆரம்பிக்கும் முன்னர் சலங்கை கட்டிய இரண்டு மொத்தக் கால்களை நீண்ட நேரம் காட்டி, அவற்றின் மேல் வாத்தியக்காரர்களை "சுப்பர் – இம்போஸ் ஷாட்"டாக எடுத்தது ரசக் குறைவான கொம்பனிஷன் ஆகும். சிறிது நேரம் வேண்டுமானால் கால்களையும் கலைஞர்களையும் பக்கம் பக்கமாகவோ, அல்லது "ஆல்டனேட் – ஷொட்"களாகவோ அமைத்திருக்கலாம்.

மற்றப் பாடல் ஆரம்பிக்கு முன்னர் வீணை வாசிக்கும் பெண் ஒருவர், Silhouette இல் காட்டப்பட்டார். நல்ல உத்தி. ஆனால் படிப்படியாக ஒளிபாய்ச்சி அவர் முகத்தையும் கரத்தையும், யாழ் நரம்புகளையும் காட்டிப் பின்னர் பாடகர்களை "விஷன்" உள்ளே கொண்டு வந்திருக்கலாம்.

இந்தப் பாட்டு நிகழ்ச்சிப் படப்பிடிப்பிலும் டெலிவிஷன் கமரா சரியாகக் கையாளப்படவில்லை. எங்கோ பொது மேடையில் பாடகர் பாடும் போது [illegible] கமராவை வைத்து ஒரே ஒரு கோணத்தில் படமாக்குவது போல ஸ்டுடியோ நிகழ்ச்சிகளையும் படமாக்கக் கூடாது. குறைந்த பட்சம் மூன்று கமராக்களாவது வைத்துப் படமாக்கி "எடிற்" செய்து பின்னர் ஒரு டேப்பில் "ட்ரான்பர்" செய்து ஒளிபரப்பவேண்டும். அப்போது தான் வெவ்வேறு "போஸ்"களை ரசிகர்கள் கண்டு களிக்க முடியும். மொனோட்டனஸ்ஸாக போர் அடிக்காமல் – அதாவது சலிப்படையாமல் காட்சிகளைப் பார்க்க முடியும்.

எதிர்காலத்தில் இத்தகைய அபிவிருத்திகள் ஏற்படும் என்று எதிர்பார்ப்போம்.

குலசீலநாதனுக்கு ஒன்று சொல்ல வேண்டும்: அவர் தோற்றமும், குரலும் ஜேசுதாஸை "இமிட்டேஷன்" செய்வனவாக இருக்கின்றன. அவற்றில் குறையில்லை. ஆனால் அவருடைய அங்க அசைவுகள் அலுப்பைத் தந்தன. வலது கை பலகை போல் விறைத்துக் கிடந்தது. இடது கை நாட்டு வைத்தியரைப் போல சதா குளிகை உருட்டியது.

பாடகர்களுக்கு ஜனரஞ்சமான அங்க அசைவுகள் அவசியம்.

அந்த அசைவுகளில் கவர்ச்சியிருக்க வேண்டும், குலசீலநாதன் டேப்பை ஒரு தடவை திரும்பப் போட்டுப் பார்த்து திருத்திக் கொள்வது நல்லது.

இங்கு, பொங்கல் நடனம், பாட்டு பற்றியெல்லாம் சுட்டிக் காட்டப்பட்ட [illegible] இருந்தாலும் [illegible] எதுவித "காழ்ப்பும்" இல்லாமல் தமிழ் ஒளிபரப்புத்துறை சிறக்க வேண்டும் என்பதுதான் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1982ம் ஆண்டு

1982ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி மேலும் பல பொறியியலாளர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் திரைப்படப் பிரிவில் இருந்தும் தேசிய ரூபவாஹினிச் சேவைக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

1982ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி மாண்புமிகு ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அவர்களின் அழைப்பின்பேரில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி அதியுத்தமர் ஜே.ஆர். ஜயவர்தன அவர்கள் இலங்கை ரூபவாஹினிச் சேவையை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை தேசிய தொலைக்காட்சி ஆலோசனைச் சபையின் ஆலோசகராகக் கடமையாற்றிய கனடிய தொலைக்காட்சி நிபுணரான திரு. வோர்ணர் ரோயர் அவர்களினால் கிருலப்பனை அரச திரைப்படப் பிரிவிலே பயிற்றுவிக்கப்பட்ட பலரும், ஜய்க்கா [JICA] நிறுவனத்தின் மூலம் தொலைக்காட்சிப் பயிற்சியைப் பெற்ற பலரும் இலங்கை ரூபவாஹினிச் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். திரு.வோர்ணர் ரோயரின் பயிற்சித் திட்டத்திற்கு சிடா [CIDA] நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தது. அவர்களில் பலர் பல பிரிவுகளில் தயாரிப்பாளர்களாக இணைக்கப்பட்டனர். தமிழ்த் தயாரிப்பாளர்களான திரு. எஸ். விஸ்வநாதன், செல்வி வினோதினி அமரசிங்கம் ஆகியோர் தொலைக்காட்சியில் இணைந்து கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். செல்வி வினோதினி அமரசிங்கம் செய்திப் பிரிவிலும் திரு.எஸ்.விஸ்வநாதன் இசைப் பிரிவிலும் இணைந்து கொண்டனர்.

இக் காலப்பகுதியில் சலலிஹினியோ என்ற பறவை செய்தியொன்றை வாயில் கௌவிச் செல்வதாக வரையப்பட்ட சித்திரம் இலங்கை ரூபவாஹினி சேவையின் இலச்சினையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இலங்கை ரூபவாஹினிச் சேவையைக் கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்கு ராஜாங்க அமைச்சு நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது. 1982ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி இதற்கான சட்ட வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1982ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ம் திகதி இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கான சட்ட வரைவு பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்படி இலங்கை ரூபவாஹினிச் சேவை பெப்ரவரி மாதம் 25ம் திகதி இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க,
இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச்
சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டம்

[1982, சனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 89/80
1410

இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவையைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கெனவும், அச்சேவையை அபிவிருத்திசெய்து, விரிவாக்கஞ்செய்து, சீர்திருத்துவதற்கெனவும், இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தைத் தாபிப்பதற்கும்; அத்துடன், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய, இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பிடு செய்யப்படும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் II

### கூட்டுத்தாபனத்தின் பணிகளும், தத்துவங்களும், கடமைகளும்

7. (1) கூட்டுத்தாபனத்தின் பணிகளாவன—

(அ) இலங்கையுள் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவையொன்றைக் கொண்டுநடாத்துதல், அத்துடன், பொதுமக்கள் நலன்கருதி அச்சேவையை மேம்படுத்தல், அபிவிருத்திசெய்தல், அத்துடன் நிகழ்ச்சித் தயாரிப்பில் உயர்தராதரங்களைப் பேணுதல் ;

(ஆ) ஒளிபரப்புவதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்களைப் பதிவுசெய்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தால் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின்மீது கண்காணிப்பும் கட்டுப்பாடும் பிரயோகித்தல் ;

(ஈ) ஏற்றுமதி செய்வதற்கென தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் வெளிநாட்டைச் சேர்ந்த தொலைக்காட்சி ஆளணியினர் மீதும், வேறு தொலைக்காட்சி ஆளணியினர்மீதும் கண்காணிப்பும் கட்டுப்பாடும் பிரயோகித்தல் ;

(உ) ஒலிப்பதிவு நாடாக்களைப் பயன்படுத்துதல்மீதும், ஏற்றுமதிக்கென அத்தகைய ஒலிப்பதிவு நாடாக்களில் நிகழ்ச்சிக் கருவூலங்களைத் தயாரித்தல்மீதும், கண்காணிப்பும், கட்டுப்பாடும் பிரயோகித்தல் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதும் அதுவரை இலங்கை ரூபவாஹினிச் சேவையில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக இருந்தவர்களே கூட்டுத்தாபனத்தின் முதல் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகவும் பதவி ஏற்றுக் கொண்டனர். இதன்படி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முதல் தலைவராகவும், மா அதிகாரியாகவும் தலைசிறந்த நிர்வாகியான திரு.எம்.ஜே. பெரேரா பதவியேற்றார். திருவாளர்கள் காமினி பேதிரிஸ், திரு நிஹால் வீரதுங்க, திரு. அன்ரன் விக்ரமசிங்க, திரு. மஹிந்த ரணவீர, திரு. எவ்.எம். அனிஸ், திருமதி. நேசி நல்லையா ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகப் பதவியேற்றனர். சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் கலாநிதி அனுர குணசேகர மா அதிகாரியாகப் பதவியேற்றார்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்ததும், பல பிரிவுகள் உருவாக்கப்பட்டன. செய்தி–நடப்பு விவகாரப் பிரிவு, பொது நிகழ்ச்சிகள் பிரிவு, கல்விப் பிரிவு, பொறியியல் பிரிவு, நிதிப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, தயாரிப்புச் சேவைகள் பிரிவு என பிரிக்கப்பட்டன. பொது நிகழ்ச்சிகள் பிரிவிலே, நாடகப் பிரிவு, இசைப்பிரிவு, விளையாட்டு பிரிவு, விவரணப் பிரிவு எனப் பல பிரிவுகள் சிங்களமொழி நிகழ்ச்சிகளுக்காக ஏற்படுத்தப்பட்டன. தமிழ் மொழிக்கென தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் பொது நிகழ்ச்சிகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக இருந்தமையினால் அவரின் கீழ் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு இயங்க அனுமதிக்கப்பட்டது. அதன் முதல் உதவிப் பணிப்பாளராக திரு. பி.விக்கினேஸ்வரன் நியமிக்கப்பட்டார்.

இந்தக் காலகட்டத்தில் விவரண நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்காக திரு. இ. பாலசுப்பிரமணியமும் கல்வி நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக திரு.எஸ்.சிவசுப்பிரமணியம், எஸ். சத்தியநாதன் ஆகியோரும் ரூபவாஹினியில் இணைந்து கொண்டனர். 1982ம் ஆண்டின் ஆரம்பத்தில் 105 ஊழியர்கள் மட்டுமே கடமையாற்றினார்கள். இதன் பின்னர் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. 1982ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஊழியர்களின் எண்ணிக்கை 346 ஆக அதிகரித்தது.

1982ம் ஆண்டு தொடக்கம் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தொலைக்காட்சி அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணத்தை முழுமையாக அறவிடத் தொடங்கியது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பத்தில் கணிசமான அளவு நிதியை தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கி இருந்தது. ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம் 60 இலட்சம் ரூபாவாக இருந்தது. 1982ம் ஆண்டின் ஆரம்பத்தில் 56 ஆயிரத்து 245 தொலைக்காட்சி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. 1982 ம் ஆண்டின் இறுதியில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கியதன் மூலமும் விளம்பரங்களை ஒளிபரப்பியதன் மூலமும், திறைசேரி ஒதுக்கீடுகள் மூலமும் ரூபவாஹினி தனது நிதியை 3 கோடி 70 இலட்சமாக உயர்த்திக் கொண்டது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கையில் உள்ள தொலைக்காட்சி பயிலுனர்களைப் பயிற்றுவிப்பதற்காக 16.12.1982ல் இலங்கை மன்றக் கல்லூரி, ஜேர்மன் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தொலைக்காட்சிப் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5ந் திகதி பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. நவீன வசதிகளைக் கொண்ட மூன்றாவது கலையகம் 1986ம் ஆண்டு ஜப்பானிய அரசாங்கத்தால் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்குக் கட்டிக் கொடுக்கப்பட்டது.

முதலாவது ஆண்டிலே 55 சதவீதமான உள்நாட்டுத் தயாரிப்புக்களை ஒளிபரப்பி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் சாதனை படைத்துள்ளது. பின்னர் பல தமிழ் உதவித் தயாரிப்பாளர்கள் இந்த நிலையத்தோடு இணைந்து தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்கள். ஒளிபரப்பினார்கள். அவர்களில் பலர் வெளிநாடு சென்று விட்டனர். சிலர் உள்நாட்டில் இயங்கும் வேறு தொலைக்காட்சிச் சேவைகளில் இணைந்து கொண்டனர்.

1987ம் ஆண்டு பி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் உதவிப் பணிப்பாளராக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் விசேட ஒளிபரப்பை ஆரம்பிக்கச் சென்றபோது பொறியியலாளர் திரு. ரேணுக அத்தநாயக்கா, படத்தொகுப்பாளர் திரு.காமினி ஜயந்த, ஒளியமைப்பாளர் திரு. நிலந்த குணவர்த்தன, சாரதி எம். கருணபால, ஆகியோர் உயிரிழந்தமை ஒரு துரதிஷ்டவசமான சம்பவமாகும். 1989ம் ஆண்டில் தெற்கில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை காரணமாக தொலைக்காட்சியின் முன்னோடியும் தகவல் தொடர்பு விற்பன்னருமான திரு. தேவிஸ் குருகே, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம செய்தியாசிரியர் திரு. குலசிறி அமரதுங்க ஆங்கில செய்தி வாசிப்பாளர் றிச்சட் டி சொய்சா, சிங்கள செய்தி வாசிப்பாளர் செல்வி சாகரிகா கோமஸ், பிரபல அறிவிப்பாளர் பிரேமகீர்த்தி டி அல்விஸ் ஆகியோர் தமது உயிர்களை அர்ப்பணம் செய்ய வேண்டி ஏற்பட்டதும் தொலைக்காட்சி வரலாற்றில் மறக்க முடியாத உண்மைகளாகும்.

********

# தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்

1. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் [ENTERTAINMENT PROGRAMMES]
2. அறிவூட்டும் தகவல் நிகழ்ச்சிகள் [EDUCATION AND INFORMATION PROGRAMMES]

## பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| இசை நிகழ்ச்சிகள் | [MUSICAL PROGRAMMES] |
| நாடகம் | [DRAMA] |
| பொம்மைச் சித்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் | [CARTOON PROGRAMMES] |
| விளையாட்டு | [SPORTS] |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவூட்டும் நிகழ்ச்சிகள்

1. செய்திகள் [NEWS]
2. விவரணங்கள் [DOCUMENTARIES]
3. கல்வி நிகழ்ச்சிகள் [EDUCATIONAL PROGRAMMES]

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மேற்கூறிய வகையாகப் பிரித்தாலும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டே உள்ளன. அதாவது ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பொழுதுபோக்கு அம்சங்களும், அறிவூட்டும் அம்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக நாடகம் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக இருந்தாலும் அதில் அறிவூட்டும் அம்சங்களும் உள்ளடக்கப்படுகின்றன. இசை நிகழ்ச்சிகளில் அறிவூட்டும் பாடல்களும் சேர்க்கப்படுகின்றன. தயாரிக்கப்படும் முறையைக் கொண்டுதான் நிகழ்ச்சியின் வகைகளைப் பிரிக்க வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வர்த்தகர்களின் அனுசரணையைக் கொண்டு தயாரிக்கப்படும் போது அவை பொழுதுபோக்கை நோக்கமாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. கல்விச்சேவை நிகழ்ச்சிகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் பொழுதுபோக்கிற்காகத் தயாரிக்கப்படுவதில்லை. ஆகவே நிகழ்ச்சிகள் அனைத்தும் தயாரிக்கப்படும் மாதிரியை பொறுத்தே வகைப்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு நாட்டின் அபிவிருத்திக்கு உதவுகின்றன?

## அபிவிருத்தியை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சமூக அபிவிருத்தி [COMMUNITY DEVELOPMENT]
2. கலை, கலாசார அபிவிருத்தி [ARTS AND CULTURAL DEVELOPMENT]
3. பொருளாதார அபிவிருத்தி [ECONOMIC DEVELOPMENT]
4. கல்வி, விஞ்ஞான அபிவிருத்தி [EDUCATION AND SCIENTIFIC DEVELOPMENT]

## சமூக அபிவிருத்தி

தொலைக்காட்சிச் சேவைகள் சமூகத்தினிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். சமுதாயத்தில் அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்த, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழிவகை செய்ய வேண்டும். நாட்டிலே இன வேற்றுமைகளை மறந்த ஒரு உயர்ந்த சமுதாயத்தை உருவாக்கினால் அந்த நாட்டில் பிரச்சினைகளே இருக்காது. இதற்காக யுத்தத்தின் மூலம் ஏற்படும் பாரதூரமான நஷ்டங்களை எடுத்துக்காட்டி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கலாம். அத்தோடு யுத்தமே ஏற்படாது தடுப்பதற்கு ஏற்ற விதத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்பலாம். வன்செயல் நிகழ்ச்சிகளையே தொடர்ச்சியாக ஒளிபரப்பி வந்தால் மக்கள் மனதில் வன்செயல் உணர்வுகளே கூடிவிடும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

அதிகமாக வன்செயல், வீர தீரச் செயல் தொடர் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வரும் அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகள் தமது தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பை வேறு திசைகளுக்குத் திருப்ப ஆரம்பித்துள்ளன. இதைவிட முன்னாள் கம்யூனிச ரஷ்ய அரசு வேற்று நாடுகளின் நிகழ்ச்சி ஒளிபரப்புக்கும், தனிப்பட்ட தொலைக்காட்சி நிலையங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிப்பதற்கும் தடை விதித்திருந்தது. ஆனால் அதுவே கம்யூனிச வீழ்ச்சிக்கு அடிகோலியது. ரஷ்யா தற்போது அதற்கான தடையுத்தரவை நீக்கியுள்ளது. அதனால் இப்பொழுது பல புதிய செய்தி அறிக்கைகள் ரஷ்யாவில் பரீட்சார்த்ததமாக ஒளிபரப்பப்படுகின்றன. இதனால் ரஷ்ய மக்களுக்குத் தகவல் சுதந்திரம் கிடைத்துள்ளது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். சீனாவில் வேற்று நாட்டு ஒளிபரப்புக்களை ஒளிபரப்புவதற்கு அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. உதாரணமாக பி.பி.சி. ஒளிபரப்பான ஸ்ரார் ரி. வியைப் பார்ப்பதற்குரிய [SATELLITE DISH] சற்றிலைட் டிஷ் அதாவது செய்மதித் தொலைக்காட்சி மீள் ஒளிபரப்புக் கிண்ணங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தடைகளை விதித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

மக்கள் மத்தியிலே இவ்விதமான ஒளிபரப்புக்கள் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி மனமாற்றங்கள்ளக் கொண்டு வந்துவிடும் என்பதே இதற்குக் காரணமாகும். பலவிதமான மாற்றங்களைச் சமூகத்தில் கொண்டு வரக்கூடிய சக்தி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு உண்டு. தொலைக்காட்சி ஒரு நாட்டின் அரசியல் ஸ்திரப்பாட்டில் கூட மாற்றங்களை ஏற்படுத்தும். அதே போல தார்மீக ஆட்சியை நடத்துவதற்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்றியமையாதன வாகின்றன.

## கலை கலாசார அபிவிருத்தி

எந்த ஒரு இனமாவது தனக்கென ஒரு தனித்துவமான கலை கலாசாரத்தைக் கொண்டிருக்காவிடில் அதனை ஒரு மனித இனமாக கணிக்க முடியாது. மனித சமூகத்தின் கலை கலாசாரத்தை வளர்ப்பதில் தொலைக்காட்சியும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. உதாரணமாக இலங்கைத் தமிழர்களுடைய கலாசாரம் என்ன, அவர்களுக்குரித்தான கலை என்ன என்பனவற்றை விளக்கக்கூடிய விதத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்பினால் எதிர்காலச் சந்ததியினருக்கு எமது கலாசாரம்பற்றித் தெளிவான ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த அது உதவியாக இருக்கும். அதைவிடுத்து எமது நிகழ்ச்சிகளில் மேற்கத்தைய பாணியை அல்லது அன்றாட வாழ்க்கையோடு ஒன்றுபடாத பரத நாட்டியத்தை முழுக்க முழுக்க தயாரித்துக் காட்டினால், அல்லது வெளிநாட்டு நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும் ஒரு நிலையமாக இருந்தால் அதனால் எவ்வித பிரயோசனமும் சமூகத்திற்கு ஏற்படாது. மக்கள் மத்தியிலும் விசேடமாக வேற்று இன மக்கள் மத்தியிலும் எமது கலாசாரம் பற்றி ஒரு வித்தியாசமான அபிப்பிராயமே படிந்து விடும். இது ஒவ்வொரு நாட்டுக் கலை, கலாசார அபிவிருத்திக்கும் பொருந்தும்.

இதனைக் கருத்திற் கொண்டுதான் 1986ம் ஆண்டு இந்தியப் பிரதமராக இருந்த ரஜீவ் காந்தி அவர்கள் பங்களாதேஷில் இடம்பெற்ற சார்க் மாநாட்டில் ஒலி–ஒளி நிகழ்ச்சிப் பரிவர்த்தனையை ஆரம்பிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அது இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது சார்க் ஒலி ஒளி நிகழ்ச்சிப் பரிமாற்றம் [SAARC AUDIO VIDEO EXCHANGE] 'SAVE' என்ற தலைப்பில் இடம்பெற்று வருகின்றது. சார்க் நாடுகளின் மத்தியில் பரிமாற்றம் செய்யப்படும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் அந்தந்த நாடுகளின் கலை, கலாசாரப் பண்பாடுகளை எம்மால் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார அபிவிருத்தி

ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்த நாட்டு மக்களின் பொறுப்புணர்ச்சியிலேயே தங்கியுள்ளது. அதாவது எமது நாட்டிலுள்ள மூல வளங்களை என்ன வகையில் உபயோகப்படுத்த முடியும் என்பதில் மக்களிடையே தெளிவான அறிவிருக்க வேண்டும். அவற்றிற்குத் தேவையான அம்சங்களை உள்ளடக்கி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தால், மக்கள் மத்தியிலே பொருளாதாரம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும். நாட்டில் உற்பத்தி அதிகரிக்கும் போது அவற்றிற்கான சந்தை வாய்ப்பைக் கூட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். உதாரணமாக வெளிநாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களைத் தொலைக்காட்சியின் மூலம் பார்க்கும் எமது இளம் சமுதாயத்தினர் அதன்பால் கவரப்பட்டு இருப்பதை நாம் அனுபவ பூர்வமாக காண்கின்றோமல்லவா.

இவற்றை விட வெளிநாடுகளில் காணப்படும் உற்பத்தித் திறனுக்கான காரணங்களை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பையும், அங்கு நடைமுறையிலுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விபரங்களையும் தெரிந்து கொள்ளவும் முடிகிறது. இவற்றையெல்லாம் சாதாரணமான மக்கள் அந்தந்த நாடுகளுக்குச் சென்று பார்ப்பது முடியாத காரியம். ஆனால் வீட்டிலிருந்தவாறே தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் இவற்றைப் பார்த்துப் பயனடைய முடியும். இது பொருளாதார அபிவிருத்திக்கு தொலைக்காட்சி செய்யும் சேவையாகும்.

## கல்வி, விஞ்ஞான அபிவிருத்தி

ஒரு நாட்டில் கல்வி கற்றவர்களின் விகிதாசாரம் கூடுதலாக இருந்தால் அது அந்த நாட்டின் முக்கிய வளங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தற்போதைய காலகட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு தொலைக்காட்சியும் ஒரு முக்கிய கருவியாகக் கருதப்படுகிறது. இதை மனதில் கொண்டுதான் ஜப்பானிய அரசாங்கம் கல்வி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு இலங்கை அரசுக்கு தொலைக்காட்சி நிலையத்தை ஆரம்பிப்பதற்கான உபகரணங்களையும், கட்டிடத்தையும் அன்பளிப்பாக வழங்கியது. தற்போதைய கல்வித் திட்டத்திலும் மேல் வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான பாடவிதான நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பி, அவர்கள் பாடசாலைகளில் இருந்தே நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் இருக்கின்ற தொலைக்காட்சி நிலையங்கள் அறிஞர்களின் ஆய்வுகளை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாகத் தயாரித்து ஒளிபரப்புகின்றன.. அத்தோடு மருத்துவம், பொறியியல், கணக்கியல் போன்ற பல துறைகளில் பல்கலைக்கழக மட்டத்திற்கு இணங்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்பியும் வருகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளில் விஞ்ஞானம் பலவித விந்தைகளைப் புரிந்து வருகின்றது. அந்த வளர்ச்சியைக் கீழைத்தேசங்களில் உள்ளவர்கள் நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ள வசதிகள் இல்லை. அவற்றையெல்லாம் நிகழ்ச்சிகள் மூலம் தெரிந்து கொள்ளத் தொலைக்காட்சி வசதிகளைச் செய்து தந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் இலங்கை முழுவதும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வரும் ஸ்தாபனமாகும். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளில் அறுபது வீதமானவை உள்நாட்டுத் தயாரிப்புக்களாக இருக்க வேண்டும் என்பது கோட்பாடு. ஆனால் கூட்டுத்தாபனமாக இயங்கும் காரணத்தால் தன்னைத்தானே கொண்டு நடத்த வேண்டிய நிலையில் உள்ளதினால் விளம்பர நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை ஒரு துரதிஷ்டவசமான நிகழ்வேயாகும். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் அரசிற்கு சொந்தமான ஒரு நிறுவனமாக இயங்கி வருகின்றது. பொது மக்கள் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு கட்டணஞ் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறுவதினால் அவர்களும் அதன் பங்குதாரர்களாகி விடுகிறார்கள்.

தமிழ்மொழி பேசும் தொலைக்காட்சி ரசிகர்கள் கூட ஒரு விதத்தில் ரூபவாஹினியின் பங்குதாரர்கள்தான். ஆகவே நீங்களும் ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகள் எந்த அளவுகோலுக்குள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன என்பதை எடுத்துக்கூறும் உரிமையுள்ளவர்கள். தொலைக்காட்சி தமிழ் நிகழ்ச்சிகள் அரசின் கொள்கைகளுக்குட்பட்டுத் தயாரிப்பதற்கு அனுமதி உண்டு. ஆனால் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் யாவும் தூர நோக்குடன் தயாரிக்கப்பட வேண்டும். அப்படியில்லாமல் பக்கப் பார்வையுடன், ஒரு சிலரைத் திருப்திப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படுவனவாக இருக்கக்கூடாது. இதனால் ரூபவாஹினி தமிழ் நிகழ்ச்சிகள் யாவும் சமுதாயப் பொறுப்புடன், தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட வேண்டும்.

********

## ரூபவாஹினிச் செய்திகள்

1981ம் ஆண்டு சுயாதீனத் தொலைக்காட்சியில் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருந்த தேவிஸ் குருகே அவர்களின் உத்தரவின்பேரில் செய்தி மஞ்சரி தமிழ் மொழியிலும் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் வாரம் ஒரு செய்தி மஞ்சரியே ஒளிபரப்பானது. பின்னர் ரூபவாஹினி நிலையம் பரீட்சார்த்த ஒளிபரப்பைத் தொடங்கியதும் செய்தி மஞ்சரி என்ற நிகழ்ச்சி செய்தி அறிக்கையாக மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் கிழமைக்கு இரண்டு செய்தி அறிக்கைகள் மட்டுமே ஒளிபரப்பப்பட்டன. 1981ம் ஆண்டில் செய்திப் பிரிவில் தயாரிப்பாளர்கள் பலர் இருந்தாலும், திரு.சில்வெஸ்டர் எம். பாலசுப்பிரமணியமும் நானும் மட்டுமே தமிழ்ச் செய்திகளுக்குப் பொறுப்பாக இருந்தோம்.

ஆரம்ப காலத்தில் சந்திரா முனசிங்க அவர்கள் செய்திப் பிரிவில் பணிப்பாளராக இருந்தார். சம்பள முரண்பாடு காரணமாக அவர் அப்பொறுப்பில் இருந்து விலகி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மீண்டும் சேர்ந்து கொண்டார். பின்னர் திரு. வோர்ண்ர் ரோயரிடம் பயிற்சி பெற்று ரூபவாஹினியுடன் இணைந்து கொண்ட திரு. ரஞ்சித் சேனாரத்ன செய்திப் பிரிவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர் முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்தி ஆசிரியராக இருந்தவர். ஆங்கிலச் செய்தித் தயாரிப்பாளர்களாக செல்வி ஷாமினி சண்முகம், அர்ஜுன ரணவன, ரவிநாத் ஆரியசிங்க ஆகியோரும் சிங்கள செய்தி தயாரிப்பாளர்களாக திரு.எல்மோ பெர்னாண்டோ கே.டி.கே. தர்மவர்தன, முகமட் யகியா, எஸ்.எச்.விமலசேன ஆகியோரும் கடமையாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலச் செய்தி வாசிப்பாளர்களாக திரு. எரிக் பெர்னாண்டோ, திருமதி விஜயலட்சுமி, திருமதி நொயிலின் ஹொண்ரர், றிச்சட் டி சொய்சா, ஆகியோரும், தமிழ் செய்தி வாசிப்பாளர்களாக செல்வி கமலா தம்பிராஜா, செல்வி மனோகரி சதாசிவம், திருவாளர்கள் வி.என். மதியழகன், எஸ். விஸ்வநாதன், ரஷித் எம். ஹபீல், திருமதி ஆயிசா பைரூஸ், பி. விக்னேஸ்வரன் ஆகியோரும் இருந்தனர்.

1982ம் ஆண்டிலிருந்து செய்திகளுக்கான மூலப் பிரதிகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டன. இதனால் செய்திப் பிரிவில் கடமையாற்றும் அனைவரும் ஆங்கில மொழியில் புலமை பெற்றவர்களாக இருந்தார்கள். பத்திரிகைத்துறை, வானொலி மற்றும் வேறு பல துறைகளில் இருந்தும் செய்திப் பிரிவில் கடமையாற்ற பலர் ஒன்று சேர்ந்திருந்தார்கள். செய்திப் பிரிவில் கடமையாற்றும் போது ஒரு வெளிநாட்டுச் செய்திப் பிரிவில் வேலை செய்வது போன்ற பிரமையே ஏற்படும்.

செய்திப் பிரிவில் கடமையாற்றும் அனைவரும் செய்திகளைச் சேகரிக்கச் செல்வதும், செய்தித் தயாரிப்பில் ஈடுபடுவதும் வழக்கம். செய்தி சேகரிப்பிலும் தயாரிப்பிலும் போட்டிகள் நடத்தப்படும். ஒரு சமயம் ஆழ்கடலில் தரித்து நிற்கும் கப்பல்களில் இருந்து குதத்திற்கு எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைக்களுக்காகக் குழாய்கள் பொருத்தும் வேலைகளை செய்தியாகத் தயாரிக்கும் பொறுப்பு எனக்குக் கிடைத்தது. இந்தச் செய்தியைச் சேகரிப்பதற்காகக் கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஆழ்கடலில் 10 கடல் மைல் தூரம் வரை சென்றோம். மிகவும் சிரமத்துடன் தயாரிக்கப்பட்ட இந்தச் செய்தி 1987ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தயாரிக்கப்பட்ட சிறந்த செய்தியாக தெரிவு செய்யப்பட்டு பணப் பரிசு வழங்கப்பட்டது. அதற்குச் சான்றாகக் கிடைத்த கடிதப் பிரதி இது.

| | |
|---|---|
| ✓ Mr. Aruna Selladurai | (Producer) |
| Mr. Chandralal Manamendra | (Cameraman) |
| Mr. Raj de Silva | (Recordist) |
| Mr. Mangala Samarawickrame | (Lighting) |

BEST NEWS STORY - FEBRUARY 1987

The news item titled Pipe Line has been selected for the month of February 1987. You formed the part of the team that covered this event. Please collect your cash prize from the Finance Division.

D. N. & C.A.

CC: 1. F.M. - Please make the payments to the following officers the amount mentioned against their names.

| | |
|---|---|
| Mr. Aruna Selladurai | - Rs. 150/= |
| Mr. Chandralal Manamendra | - Rs. 150/= |
| Mr. Raj de Silva | - Rs. 100/= |
| Mr. Mangala Samarawickrame | - Rs. 100/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாடம் செய்திகளைத் தயாரித்து ஒளிபரப்பும் செய்திப் பிரிவில் கடமையாற்றிய தினால் பல சிரமங்களையும் எதிர்நோக்கினேன். இந்த அனுபவங்கள் எதிர்காலத்தில் ரூபவாஹினியில் கடமையாற்ற வரும் தயாரிப்பாளர்களுக்கு ஒரு முன்னனுபவமாக இருக்கும் என்பதினால் அவற்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

## செய்தி ஒளிபரப்புகள் இரண்டு வகைப்படும்:

1. ஒளிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்களை ஒளிபரப்புதல்
2. நேரடியாகக் கலையகத்திலிருந்து செய்திகளை ஒளிபரப்புதல்

அறிவிப்பாளரின் அறிமுகத்தையும், செய்திப் படங்களுக்குரிய பட விளக்கங்களையும் தனித்தனியாக ஒளிப்பதிவு செய்து பின்னர் படத்தொகுப்பு செய்து ஒளி நாடாக்களை ஒளிபரப்புச் செய்தல் ஒரு முறையாகும். இரண்டு அம்சங்களையும் கலையகத்தில் நேரடியாகப் படத்தொகுப்புச் செய்து ஒளிபரப்புவது மற்றைய முறையாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் நேரடி ஒளிபரப்பு முறையே இருந்து வருகிறது. மேற்கு ஜேர்மனியில் நேரடி ஒளிபரப்புக்கான பயிற்சி பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இது மிகவும் சிரமமான முறையாகும். இந்த நவீன முறையை ரூபவாஹினி தமிழ்ச் செய்தியில் அறிமுகம் செய்ய முற்பட்டபோது பல எதிர்ப்புக்களை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது.

"குரோமகி" [CHROMAKEY] என்னும் முறையைத் தமிழ்ச் செய்தியில் அறிமுகம் செய்தபோது பல சிரமங்கள் ஏற்பட்டன. சாதாரணமாக அறிவிப்பாளர் செய்தியை வாசிக்கும் போது அறிவிப்பாளரின் உருவத்திற்குப் பின்னால் வலது பக்க மூலையில் படங்களைக் காட்டும் முறை குரோமகி என அழைக்கப்படும். ஆரம்ப காலத்தில் தேவையான படங்கள் எம்மிடம் இல்லாத காரணத்தினால் மரக்கறி சம்பந்தமான செய்தியொன்றை ஒளிபரப்பும் போது தக்காளிப்பழம், மிளகாய் போன்றவற்றைப் படங்களாக வரைந்து அறிவிப்பாளரின் பின்னால் திரையில் காட்டினேன். நேரடியாகச் செய்தியை ஒளிபரப்பும் முறையை தமிழில் அறிமுகம் செய்ய முயற்சியும் செய்தேன். பணிப்பாளர் சபை உறுப்பினரிடம் படங்கள் காட்டப்பட்டது பற்றி முறைப்பாடு கூட செய்யப்பட்டது.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று இந்த ஊடகம் பற்றிய தெளிவான அறிவின்மை. அடுத்தது எமது சமூக நிலை பற்றிப் போதிய சிந்தனைத் தெளிவின்மையே ஆகும். இக் காரணங்களினால் இலங்கை ரூபவாஹினி வரலாற்றில் மூன்று முறை வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டும் உள்ளேன்.

இங்கிலாந்துப் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சர் விக்ரோரியா அணைக்கட்டை திறந்து வைப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தார். இந்த நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்புக்கான நேர்முக வர்ணனையாளராக என்னைத் தெரிவு செய்திருந்தார்கள். அந்த நிகழ்வுக்குரிய சீருடையும் ரூபவாஹினியினால் தைக்கப்பட்டு எனக்கு வழங்கப்பட்டது. தேவையான விபரங்களைச் சேகரித்து நேர்முக வர்ணனைக்குத் தயாராக இருந்த வேளையில் 1985 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் திகதி இது சம்பந்தமான கடைசி நேர ஏற்பாட்டுக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகச் சென்றபோது வேறு ஒரு தமிழ் நண்பர் முன்வரிசையில் அமர்ந்திருந்தார். மனதில் சந்தேகம் தோன்றிய காரணத்தால் கூட்டத்தில் பங்குபற்றாமல் திரும்பிவிட்டேன். சொற்ப நேரத்தில் செய்திப் பிரிவின் பணிப்பாளர் திரு. பத்திரண எனக்குத் தற்காலிக வேலை நீக்கக் கடிதத்தைக் கையளித்தார். அந்தக் கடிதத்தில் எனது ரூபவாஹினி அடையாள அட்டை உட்பட அலுவலகத்திற்கு சொந்தமான சகல பொருட்களையும் கையளித்துவிட்டுச் செல்லும்படி கேட்கப்பட்டிருந்தது. வேலையில் இருந்து ஏன் இடைநிறுத்தம் செய்யப்பட்டேன் என்ற கேள்விக்கு "ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வந்த பாதுகாப்புச் சம்பந்தமான அறிக்கையில் எனது பெயர் இருக்கவில்லை" என்று பதில் கிடைத்தது. அந்த நிகழ்விற்கான நேர்முக வர்ணனையை நண்பர் திரு.பி. விக்கினேஸ்வரன் செய்தார்.

ஆரம்பத்தில் ஆங்கில மொழியில் எழுதப்பட்டு வந்த செய்திப் பிரதிகளைச் சிங்கள மொழியில் எழுதும்படி செய்தியாளர்கள் தூண்டப்பட்டதும் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். 1989ல் தெற்கில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பினால் அநேகமான ஊழியர்கள் கடமைக்குச் சமூகம் தரப் பயந்தார்கள். எம்மோடு கடமையாற்றிய பிரதம செய்தி ஆசிரியரும், ஆங்கில மொழி விற்பன்னருமான திரு. குலசிறி அமரதுங்க 1989ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 13ம் திகதி கொலை செய்யப்பட்டார். செய்தி அறிவிப்பாளர் றிச்சர்ட் டி சொய்சா, செல்வி சாகரிகா கோமஸ் ஆகியோரையும் இழந்தோம். இதற்கு மாற்று வழியாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. விமானப்படையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இந்த நிர்வாகத்தின் கீழ் சில காலம் நாம் கடமையாற்றி வந்தோம். இதுபோன்ற சிரமமான இந்த காலங்களில் தொடர்ச்சியாகக் கடமைக்கு வந்ததற்குப் பாராட்டுக் கடிதங்களும் முன்னர் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.

---

ශ්‍රී ලංකා රූපවාහිනී සංස්ථාව
இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
SRI LANKA RŪPAVĀHINĪ CORPORATION

තැ. පෙ. / த. பெ. / P.O.Box 2204
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 7
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
Independence Square, Colombo 7, Sri Lanka

මගේ අංකය / எனது இல / My No. [illegible]/19/25
ඔබේ අංකය / உமது இல / Your No

1987 අගෝස්තු මස 31 වැනි දින.

[illegible] මගින්/
[illegible]

<u>ප්‍රශංසා කිරීම</u>

1987 ජූලි මස 29 වැනි දින සිට ඇතිවී තිබිය පැවති කාලය තුළ සංස්ථා සේවය සඳහා වාර්තා කර, එම රාජකාරී නොපිරිහෙළා ඉටු කිරීමට උපකාරී වීම සම්බන්ධයෙන් ඔබට ප්‍රශංසා කරමි.

අධ්‍යක්ෂ ජනරාල්,
<u>ශ්‍රී ලංකා රූපවාහිනී සංස්ථාව.</u>

[illegible]/31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990ல் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் செய்திப் பிரிவில் சிங்கள மொழிபெயர்ப்பாளராக இருந்தவர் பிரதம செய்தியாசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் ஒரு இடதுசாரிப் போக்குள்ளவர். இக் காலத்தில் சிங்கள மொழியில் மூலப் பிரதிகள் எழுதப்பட வேண்டும் என்ற கொள்கை தீவிரமாக்கப்பட்டது. இதன் பின்னர்தான் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவு ஓர் உள்நாட்டுச் செய்தி ஸ்தாபனமாக மாற்றியமைக்கப்பட்டது எனலாம். இந்த மொழி மாற்றத்தின் தாக்கத்தை காலப்போக்கில் தான் நாம் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். தொலைக்காட்சிச் செய்தியென்பது ஒரு சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுள்ள ஒரு நிகழ்ச்சியாகும். சர்வதேசத் தரத்தைப் பேணுவதற்குச் சர்வதேச மொழி தெரிந்தவர்கள் கூடுதலாகச் செய்திப் பிரிவில் இருக்க வேண்டியது அவசியமாகும்.

மற்றுமொரு மறக்க முடியாத சம்பவத்தை இங்கு குறித்து வைப்பது அவசியம். செய்திகள் நேரடியாக ஒளிபரப்பப்படுவதால் தவறுகள் ஏற்படுவதுண்டு. ஆனால் கூடுமான அளவு தவறுகளைத் தவிர்த்துக் கொள்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். செய்தித் தயாரிப்பில் ஏற்படும் தவறுகளை மற்றவர்கள் மீது சுமத்தித் தப்பித்துக் கொள்ளும் எண்ணம் செய்தித் தயாரிப்பாளர்களுக்கு இருக்கக் கூடாது.

தமிழ்ச் செய்தியறிக்கை மாலை 6.30க்கு ஒளிபரப்பாவது எல்லோருக்கும் தெரிந்ததே. எட்டு மணிக்கு ஒளிபரப்பாகும் பிரதான சிங்களச் செய்தியறிக்கைக்காகவே செய்திகளை ஆயத்தம் செய்வது வழக்கம். இரவு எட்டு மணிக்கு ஒளிபரப்பாக இருக்கும் செய்திகளை மாலை 6.30க்கு ஒளிபரப்புவதற்குத் தமிழ்த் தயாரிப்பாளர்களும், மொழிபெயர்ப்பாளர்களும், தட்டச்சு உதவியாளர்களும் மிகவும் சிரமப்பட்டு வேலை செய்ய வேண்டும். சில வேளைகளில் கடைசி நிமிடத்தில் வரும் செய்திகளையும் தமிழ்ச் செய்தியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

1990 ஆண்டு மார்ச் மாதம் 17ந் திகதி அன்றைய தமிழ்ச் செய்தியைத் தயாரிப்பதற்கு அவசரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். அன்றைய தினம் புத்தளப் பிரதேசத்தில் இடம்பெற்ற (கம்உதாவ) கிராம எழுச்சிக் கொண்டாட்டங்களின் படங்கள் 6.25க்கு பிரதான கலையகத்திற்கு அனுப்பப்படுவதாகவும் அது எப்படியாவது தமிழ்ச் செய்தியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் கட்டளை. அன்றைய தினம் ரஷ்ய ஜனாதிபதியினால் அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியும் ஒளிபரப்பிற்காகக் கிடைத்திருந்தது. கலையகத்திற்குச் செல்லவேண்டிய கடைசி நேரத்தில் வாழ்த்துச் செய்திக்கு ரஷ்ய ஜனாதிபதியின் படத்தைச் சேர்த்துக்கொள்ளும் நோக்கில் படங்கள் வைக்கப்பட்டிருக்கும் தட்டில் படங்களைத் தேடினேன். படம் கிடைத்தது. படத்தை எடுத்து கலையக உதவியாளரிடம் கொடுத்தேன். அவரும் படத்தைக் கொண்டு சென்று கமெரா முன் வைத்துவிட்டார்.

பிரதான கலையகத்திற்குச் சென்று கிராம எழுச்சிக் கொண்டாட்டப் படங்கள் வந்துவிட்டதா எனப் பார்த்துவிட்டுச் செய்தி ஒளிபரப்புக் கலையகத்திற்கு வந்து சேரும் போது தமிழ்ச் செய்தி நேரடி ஒளிபரப்புக்கு 30 செக்கன்கள் மட்டுமே இருந்தன. கிராம எழுச்சிக் கொண்டாட்டச் செய்தி எதுவித தவறுமின்றி ஒளிபரப்பாகியது. இரண்டாவதாக வாழ்த்துச் செய்தியும் ஒளிபரப்பப்பட்டது. நான் எடுத்துக் கொடுத்த படமும் ஒளிபரப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. செய்தி ஒளிபரப்பு முடியும் தறுவாயில் ஒரு சந்தேகம் எழுந்தது. உபயோகிக்கப்பட்டது சரியான படந்தானா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தைப் பார்த்தேன். ரஷ்ய ஜனாதிபதியின் படத்திற்குப் பதிலாக பிரான்ஸ் ஜனாதிபதியின் படத்தை உபயோகித்திருந்தமை தெரியவந்தது. இதே பிழை சிங்களச் செய்தியிலும் இடம்பெறக்கூடாது என்பதற்காக சிங்கள மொழித் தயாரிப்பாளரை அணுகி தவறை எடுத்துச் சொன்னேன். அவர் ஒரு கனிஷ்ட தயாரிப்பாளர். தான் அந்தத் தவறினை விடப்போவதில்லை என சற்று வீம்பாகவே கூறினார். ரஷ்ய ஜனாதிபதியின் படத்தைத் தான் உபயோகிக்கப் போவதில்லை எனவும், அந்த நாட்டின் தேசியக் கொடியைக் காண்பிக்கப் போவதாகவும் கூறினார்.

1 1/2 மணி நேரத்தின் பின்னர் சிங்கள மொழிச் செய்தி ஒளிபரப்பாகியது. செய்தி ஒளிபரப்பு முடிவடைந்த பின்னரே அவர் விட்ட வேறு ஒரு தவறு தெரியவந்தது. ரஷ்ய நாட்டுக் கொடிக்குப் பதிலாக அவர் அமெரிக்க நாட்டின் தேசியக் கொடியை வாழ்த்துச் செய்திக்காகச் சேர்த்திருந்தார். அடுத்த நாள் சிங்களச் செய்தி ஒளிபரப்பில் ஏற்பட்ட தவறு பற்றி விசாரணை ஆரம்பமாகியது. சிங்கள மொழித் தயாரிப்பாளர் வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார். இந்நேரம் செய்திப் பிரிவில் கடமையாற்றிய தமிழ் தெரிந்த நண்பர் ஒருவர் தமிழ்ச் செய்தியிலும் தவறிழைக்கப்பட்டிருப்பதை தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அறிவித்துவிட்டு எனக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

அடுத்தநாள் செய்தித் தயாரிப்புக்கான கடமைகளில் ஈடுபட்டிருந்தேன். பணிப்பாளர் திரு.வங்சநாத விக்ரம செய்தியில் இடம்பெற்ற தவறுக்கான விளக்கக் கோரல் கடிதத்தை என்னிடம் கையளித்தார். கடிதத்தை வாசித்துவிட்டு வைத்துக் கொண்டேன். மேலும் 1/2 மணித்தியாலம் சென்ற பின் பணிப்பாளர் என்னிடம் வந்து விளக்கக்கோரல் கடிதத்தைத் திருப்பித் தரும்படி கேட்டார். கடிதத்தைக் கொடுத்துவிட்டு எனது வேலையில் ஈடுபட்டேன். மேலும் அரை மணி நேரம் சென்றபின் தனது அலவலகத்துக்கு வரும்படி பணிப்பாளர் எனக்குச் செய்தி அனுப்பினார். பணிப்பாளரின் அலுவலகத்துக்குச் சென்றேன். உடனடியாக வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதற்கான மற்றுமொரு கடிதத்தைப் பணிப்பாளர் என்னிடம் தந்தார். கடிதத்தை வாசித்து முடித்தேன். "உடனடியாக வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளேன். இப்பொழுது செய்திப் தயாரிப்புக்காக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறேன் என்ன செய்வது" எனக் கேட்டேன். அந்தத் கடிதத்தைத் தரும்படி பணிப்பாளர் கேட்டார். கடிதத்தை வாங்கி வைத்துக் கொண்டு "நீர் போய் செய்தித் தயாரிப்பை முடித்துவிட்டு வந்து வேலை இடைநிறுத்தக் கடிதத்தைக் பெற்றுக்கொள்ளும்" எனக் கூறினார். அதன் பின்னர் நேரடியாக ஒளிபரப்பாகும் தமிழ்ச் செய்தியைத் தயாரித்து முடித்தேன். செய்தி ஒளிபரப்பு முடிந்ததும் பணிப்பாளரின் அலுவலகத்துக்குச் சென்று வேலை இடைநிறுத்தக் கடிதத்தைப் பெற்று வீடு சென்றேன்.

செய்தித் தயாரிப்பாளர் என்ற வகையில் நானே படத்தைத் தெரிவு செய்து கொடுத்தேன். கடைசி நேரச் செய்தியைத் தமிழ்ச் செய்தியில் சேர்த்துக் கொள்ள எடுத்த முயற்சியினால்தான் தவறு ஏற்பட்டது என்ற உண்மையைத் தவிர வேறு எதையும் என்னால் கூறமுடியவில்லை. உண்மையை ஒப்புக் கொண்ட காரணத்தினால் 1,295/= ரூபா தண்டமாகச் செலுத்தவேண்டி வந்தது. 23 நாட்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டும் இருந்தேன். கூட்டுத்தாபனத்தின் வரலாற்றில் ஆகக்கூடுதலாக தண்டப் பணத்தைச் செலுத்தியவன், பல முறைகள் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட தமிழ்த் தயாரிப்பாளன் என்ற பெயரையும் பெற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித் தயாரிப்பாளராக இருப்பவன் இது போன்றவற்றை மனதில் வைத்துக் கொண்டு இனி வரும் செய்திகளில் படங்களைப் பயன்படுத்தாமல் இருக்க முடியுமா? இந்த நிலை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. இந்த ஊடகங்களில் மேலதிகாரிகளாகப் பதவி ஏற்பவர்களுக்குத் தொலைக்காட்சி ஊடகத்தின் தொழில் நுட்பங்களும் நேரடி ஒளிபரப்புக்களில் ஏற்படும் தற்செயலான தவறுகள் பற்றிய அனுபவமின்மையுமே ஆகும். ஒளிபரப்பு அனுபவம் வாய்ந்தவர்கள் மேலதிகாரிகளாக நியமிக்கப்படும் வரை இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தயாரிப்பாளர்கள் முகம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும். இந்த தண்டனை பற்றி பின்னர் கடமையேற்ற மேலதிகாரிகளிடமும் மேன்முறையீடு செய்தேன். முன்னைய நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட தண்டனையை வாபஸ் பெற முடியாது எனக் கூறிவிட்டார்கள். ஆகவே தண்டனை இன்னமும் தண்டனையாகவே இருக்கிறது. இதனால் தான் அனேகமான தொலைக்காட்சித் தயாரிப்பாளர்கள் அரசியல் தொழிற்சங்கங்களில் சேர்ந்து தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள்.

சில வேளை ஏதாவது தொழிற்சங்கங்கத்தில் நான் அங்கத்தவராக இருந்திருந்தால் இதுபோன்ற தண்டனைகளில் இருந்து தப்பி கொண்டும் பதவி உயர்வுகளைப் பெற்றும் இருக்கலாம் என்று என் அடி மனம் உறுத்துவதுண்டு. ஆனால் நடு நிலை ஒளிபரப்பாளன் அரசு சார்ந்த தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கக்கூடாது என்ற ஒரு உன்னத உறுதிப்பாட்டைப் பின்பற்றி வருவதினால் எந்தத் தொழிற்சங்கத்திலும் இதுவரை அங்கத்தவனாகச் சேர்ந்ததில்லை. இனிமேலும் சேரவேண்டிய அவசியமும் எனக்கு இல்லை.

செய்திப் பிரிவிலே கடமையாற்றிய நண்பர் சில்வெஸ்ரர் எம் பாலசுப்பிரமணியம் பிரதிப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார். பின்னர் சில காரணங்களுக்காகச் செய்திப் பிரிவில் இருந்து அவர் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டார். இதன் பின்னர் தமிழ் செய்திக்காகக் கடமையாற்றும் நிரந்தர ஊழியனாக நான் மட்டுமே இருந்தேன்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஒளிபரப்பாகும் தமிழ்ச் செய்திகள் சிங்கள மொழிச் செய்தியின் மொழி பெயர்ப்பாகவே ஒளிபரப்பாகி வருகிறது. அதற்கு முக்கிய காரணம் தமிழ்ச் செய்திக்கென கடமையாற்றும் தயாரிப்பாளர்களின் தொகை மிகக்குறைவு. தமிழ் பிரதேசங்களில் இடம்பெறும் சம்பவங்களைச் செய்திகளாகத் தமிழ்ச் செய்தியில் ஒளிபரப்பினால் மட்டுமே தமிழ் ரசிகர்களைத் திருப்திப்படுத்த முடியும். இக்குறைபாடு அதிகார பீடத்தின் கவனத்துக்கு என்னால் பல முறை கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது செய்திப் பிரிவில் கடமையாற்றும் எனக்கு சிரேஷ்ட தயாரிப்பாளர் என்ற பதவி வழங்கப்பட்டுள்ளது. ரூபவாஹினி வரலாற்றில் சிரேஷ்ட தயாரிப்பாளர் பதவி ஒரு சிலருக்கே வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பதவி பெற்ற முதல் தமிழ்த் தயாரிப்பாளன் நானே ஆகும்.

செய்திப் பிரிவில் நிரந்தர மொழிபெயர்ப்பாளராக இருந்த ஜே.எம். காசிம் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார். செய்திப் பிரிவில் கடமையாற்றும் தமிழ் பேசத் தெரிந்த சில நண்பர்கள் அடிக்கடி தமிழ் செய்திக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகிறார்கள். தமிழ் செய்தி தயாரிப்புக்காகச் சமயா சமய அடிப்படையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து பலர் தமது சேவைகளை வழங்கி வந்துள்ளார்கள். ஆரம்ப காலத்தில் மொழிபெயர்ப்பாளராக ரி.ஜி. பாலேந்திரா, கே. நவரத்தினம், நடராஜன் ஐயர் ஆகியோர் கடமையாற்றினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திப் பிரிவில் தமிழ் செய்திக்காக கடமையாற்றியவர்கள்: சில்வெஸ்ரர் எம். பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்றுவிட்டார்) அருணா செல்லத்துரை, முகமட் அயூப், (செய்தி அறிவிப்பாளராக இருந்தவர் பதவி விலகிவிட்டார்) வினோதினி அமரசிங்கம் (வெளிநாடு சென்றுவிட்டார்) ஜே.எம். காசிம் (ஓய்வு பெற்றுவிட்டார்) பி. எம். முர்சுதீன் (தற்போது தயாரிப்பாளராக கடமையாற்றுகிறார்) ஜவஹார் பெர்ணாண்டோ (பகுதி நேரத் தயாரிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் கடமையாற்றுகிறார்) நௌசாட் மொகைடீன் (மொழி பெயர்ப்பாளராக இருந்து வேறு பதவி பெற்றுச் சென்றுவிட்டார்) பி. முத்தையா, பிராங் புஷ்பநாயகம், எஸ். ராசையா, (சிங்கள மொழியில் மூலப் பிரதிகள் எழுதப்படுவதனால்) திரு. மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் பகுதிநேர மொழி பெயர்ப்பாளர்களாகக் கடமையாற்றுகிறார்கள். செய்தி உதவியாளர்கள் எம்.வை. ராசிக், ஆர். தவராஜன், திருமதி எஸ். சந்திரகுமாரி, ஜே.அமலராணி, எஸ்.எச்.எம். ரிஸா ஆகியோர் பகுதிநேர ஊழியர்களாகத் தமது சேவைகளை வழங்கி வருகிறார்கள். ஆர். யோகராஜா, திரு. எஸ். தியாகராஜா ஆகியோரும் தமது சேவைகளைப் பகுதிநேர உதவியாளர்களாக வழங்கியிருந்தனர். செய்தி வாசிப்பாளர்களாக இருந்தவர்கள் கமலா தம்பிராஜா, மனோகரி சதாசிவம், வி.என். மதியழகன், திருமதி ஆயிஷா பைரூஸ், ரஷீத் எம். ஹபீல், பி. விக்னேஸ்வரன், எஸ், சண்முகரத்னம், எம்.எஸ்.எம். பெரூஸ், ரதி கிறிஸ்ரோகு, எஸ். நடேச சர்மா, நடராஜ ஐயர் ஆகியோராவர். செய்தி வாசிப்பாளர்களாக தற்போது கடமையாற்றுபவர்கள் திரு. எஸ்.விஸ்வநாதன், அருணா செல்லத்துரை, ஏ.ஆர்.எம் ஜிப்ரி, அஷ்ரப் சிஹாப்தீன், ரேலங்கி செல்வராஜா, யு.எல்.யாகூப், எம்.என்.ராஜா, உமா சிவலோகநாதன், ஜவஹர் பெர்ணாண்டோ, சாந்தினி கருணாரத்னம் ஆகியோர்.

## தொலைக்காட்சிச் செய்தி சேகரிப்பும், தயாரிப்பும், பரிவர்த்தனையும்

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுள் இலத்திரனியல் ஊடகங்களான தொலைக்காட்சியும் வானொலியும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. வெகுவிரைவில் கம்பியூட்டரின் ஊடுருவல் இன்னும் பல மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

வாய்மொழி மூலமாக, மிருகங்கள், பறவைகள், மூலமாக மற்றும் எழுத்துப் பிரதிகள் மூலமாக பரப்பப்பட்டு வந்த செய்திகள், விஞ்ஞான யுகத்தில் வேகமாகப் பரப்பப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இலத்திரனியல் சாதனங்கள் இவற்றுக்காகப் பயன்படுத்தப்படத் தொடங்கின. உள் நாடுகளில் செய்திகளைப் பரப்புவதற்குக் கம்பித் தந்தி முறைகளும், பின்னர் கம்பியில்லாத் தந்தி முறைகளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. பின்னர் கம்பியில்லாத் தந்தி முறைகளின் வளர்ச்சி வானொலியாக மாறி அந்த ஊடகத்தின் மூலம் செய்திகள் பரப்பப்பட்டன. பத்திரிகை, வானொலி போன்றவற்றின் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஊடகம் தொலைக்காட்சியாகும். ஆரம்ப காலத்தில் வானொலியோடு போட்டியிட முடியாமல் இருந்த தொலைக்காட்சி ஊடகம் விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரணமாகச் செய்மதிகள் மூலம் செய்திப் பரிவர்த்தனையை ஆரம்பித்து, தற்போது மிகவும் வளர்ச்சி கண்டுள்ள ஊடகமாக மாறியுள்ளது. பத்திரிகை, வானொலி போன்ற ஊடகங்கள் மக்களில் ஒரு சாராரை மட்டுமே திருப்திப்படுத்தக்கூடியதாக இருக்கின்றன. உதாரணமாக பத்திரிகைகள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்குரிய ஊடகமாகவே இருந்து வந்துள்ளது. வானொலி எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதவர்களுக்கும், காது கேட்பவர்களுக்கும் செய்திப் பரம்பல் செய்யும் சாதனமாக அமைந்துள்ளது. ஆனால் தொலைக்காட்சி சாதனமே அனைவருக்கும் பொருத்தமான ஒரு ஊடகமாக அமைந்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. படித்தவர்கள், படிக்காதவர்கள், பேசக்கூடியவர்கள், பேசமுடியாதவர்கள், கண்பார்வையுள்ளவர்கள், கண்பார்வையற்றவர்கள், காதுகேட்கக் கூடியவர்கள், காதுகேட்காதவர்கள், பெரியவர்கள், சிறார்கள் அனைவருமே தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களுள் அடங்குவர். காரணம் ஒலி – ஒளி இரண்டும் இந்தச் சாதனத்தின் மூலப்பொருளாக அமைந்துள்ளது. இதனால் தொலைக்காட்சியில் செய்திகளைத் தயாரிப்பவர்கள், சகலருக்கும் பொருத்தமான விதத்தில் செய்திகளைத் தயாரிக்க வேண்டிய கடமப்பாட்டுக்கு உள்ளாகிறார்கள்.

## தொலைக்காட்சிச் செய்தித் தயாரிப்பை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்

| | |
|---|---|
| 1. இலத்திரனியல் ஊடகச் செய்தி சேகரிப்பு - | [ELECTRONIC NEWS GATHERING] (ENG) |
| 2. செய்திகளைத் தொகுத்தல் | [NEWS EDITING] |
| 3. செய்திகளைத் தயாரித்தல் | [NEWS PRODUCTION] |

## இலத்திரனியல் ஊடகச் செய்தி சேகரிப்பு

பத்திரிகைத் துறையினரோ, வானொலியைச் சேர்ந்தவர்களோ செய்திகளைத் திரட்டுவதற்குச் செல்லும் போது ஒரு நிருபர் மட்டும் சென்று செய்திகள் சேகரிப்பது வழக்கம். மேலும் காத்திரமான செய்திகளைச் சேகரிக்கும் பொருட்டு பத்திரிகையாளர்கள் ஒரு நிழற்படக் காரரையும் கூட்டிச் செல்வது உண்டு. ஆனால் தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் தனியொரு நிருபரை அனுப்பிச் செய்திகளைச் சேகரித்து ஒளிபரப்ப முடியாது. ஏனெனில் இதுவொரு காட்சி ஊடகம் [VISUAL MEDIA]. அதாவது செய்திப் படங்களோடு செய்திகளைக் காட்டும் ஒரு ஊடகமாகும். ஆகவே, இலத்திரனியல் ஊடகத்திற்குச் செய்திகளை சேகரிக்கச் செல்பவர்கள் ஒரு குழுவினராகவே செல்லவேண்டியிருக்கும். அந்தக்குழுவில் பின்வருவோர் அடங்குவர்.

| | |
|---|---|
| 1. செய்தி சேகரிக்கும் நிருபர் | [NEWS REPORTER] |
| 2. படப்பிடிப்பாளர் | [CAMERAMAN] |
| 3. ஒலிப்பதிவாளர் | [RECORDIST] |
| 4. ஒளியமைப்பாளர் | [LIGHTING TECHNICIAN] |

தற்போது ஒலிப்பதிவாளர், ஒளியமைப்பாளர் போன்றோரின் சேவைகளைக் குறைப்பதற்கரக [BETA CAM] போன்ற நவீன கமெராக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. தொலைக்காட்சிக் குழுவினர் செய்தி சேகரிக்கச் செல்லும் போது இலத்திரனியல் சாதனங்களையும் எடுத்துக்கொண்டே செல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி சேகரிப்பாளர் செய்தி சேகரிக்கச் செல்ல முன்னர் அந்தச் செய்தி பற்றிய சில முன் விபரங்களைத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆகவே, செய்தி சேகரிக்கச் செல்லும் தயாரிப்பாளரோ செய்தி நிருபரோ இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. செய்தி பற்றிய முன் விபர ஆய்வு [RESEARCH]
2. செய்திக் கள மதிப்பீடு [LOCATION SURVEY]

## செய்தி பற்றிய முன் விபர ஆய்வு [RESEARCH]

செய்திகளைச் சேகரிக்கச் செல்பவர்கள் அந்தச் செய்திக்குரிய சாதக பாதகமான முன்விபரங்களைச் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் செய்தி பற்றிய தகவல்களில் நாம் பூரண தெளிவுள்ளவராக இருந்தால் மட்டுமே செய்தியில் உள்ள நெளிவு சுளிவுகளைப் பக்கச் சார்பற்ற முறையில் வெளிக்கொணர முடியும்.

## செய்திக் கள மதிப்பீடு [LOCATION SURVEY]

செய்திக்கள மதிப்பீடு இரண்டு தேவைகளுக்கு அவசியமாகின்றது. ஒன்று தொழில்நுட்ப ரீதியான காரணங்களுக்காக, அதாவது, செய்தி திரட்டப்போகும் இடத்தில் படப்பிடிப்புக்கான ஒலி–ஒளி அமைப்பு போன்ற வசதிகளைத் தெரிந்து கொள்வது அவசியமாகின்றது. குறிப்பிட்ட செய்தி இடம்பெறப்போகும் இடத்தில் தாம் திரட்டப்போகும் செய்திக்குத் தேவையான சாதக பாதகமான தகவல்களைத் தெரிந்து கொள்ளவதற்கும் செய்திக்கள மதிப்பீடு தேவையாகின்றது.

## படப்பிடிப்புக்குழுவினர்

படப்பிடிப்புக் குழுவினருடன் தயாரிப்பாளர் மிகவும் சிநேக பூர்வமாகப் பழகுதல் அவசியம். படப்பிடிப்பாளருக்கும் மற்றைய உதவியாளர்களுக்கும் நாம் சேகரிக்கப் போகும் செய்தியின் விபரத்தை முன்கூட்டியே கூறி வைக்க வேண்டும. முடியுமானால் குறிப்பிட்ட அந்தச் செய்தியை மேலும் தாக்கமானதாக்குவதற்கு என்ன வகையான படங்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற ஆலோசனையையும் அவர்களிடம் கேட்கலாம்.

## நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்னர் செல்ல வேண்டும்

எந்த வகையான செய்தியை சேகரிக்கப் போகிறீர்களோ அந்த நிகழ்வு இடம் பெறுவதற்கு முன்னதாகவே செய்தி இடம்பெறும் களத்திற்குச் செல்ல வேண்டும். இந்த முறை திட்டமிட்ட செய்தி சேகரிப்பிற்கே பொருத்தமானதாகும். அத்தோடு நிகழ்வுக்குப் பொருத்தமான வெளிப்புறக்காட்சிகள், உதாரணமாக நிகழ்ச்சியைப் பார்க்க வருபவர்கள், வாகனங்கள் போவது வருவது, செய்தி இடம்பெறும் கட்டடத்தின் தோற்றம், மற்றும் விசேட அம்சங்கள் போன்றவற்றைப் படம்பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படங்களின் அமைப்பு [FRAMING]

படங்களைப் பிடிக்கும் போது தொலைக்காட்சித் திரை எங்களுடைய மனதில் இருக்கவேண்டும். அந்தத் திரைக்குள் அடங்கக் கூடிய விதத்தில் படங்களை அமைக்க வேண்டும்.

ஒருவரை நாம் தொலைக்காட்சிக்காகப் படம் பிடிக்கும் போது அவருடைய தலைக்கும், திரையின் மேற்பகுதிக்கும் இடையில் குறிப்பிட்ட அளவு, இடைவெளி "ஹெட் றூம்" [HEAD ROOM] இருக்க வேண்டும். தொலைக்காட்சித்திரை அளவை ஆங்கிலத்தில் டொமஸ்ரிக் கட் [DOMESTIC CUT] என்று கூறுவார்கள். திரையில் உருவம் இருக்கும் போது பக்கங்களிலும் போதுமான அளவு இடைவெளி இருக்க வேண்டும்.

ஒருவரை நாம் பேட்டி காணும் போது கேள்வி கேட்பவரின் தோளுக்கு மேலாக படம் பிடிப்பதை "ஒவர் த சோல்டர் [OVER THE SHOULDER] முறை என்று கூறுவார்கள். பின்னர் கேள்வி கேட்பவரைத் தனியாக படம் பிடிக்கும் போது பதில் கூறுபவரின் பக்கம் கூடுதலான இடைவெளிவிட்டுப் படத்தை அமைக்க வேண்டும். அதேபோல பதில் சொல்பவரைத் தனியாகப் படம் பிடிக்கும் போது கேள்வி கேட்பவர் நிற்கும் பக்கம் [LOOKING SIDE] இடைவெளி விட்டுப் படத்தை அமைக்க வேண்டும். காட்சியின் முக்கியத்துவத்தைப் பொறுத்து பின்னணிக் காட்சிகளைச் சேர்த்துப் படம் பிடிக்க வேண்டும்.

மரங்கள், கதவுகள், யன்னல்கள், போன்றவற்றைப் பின்னணியாக கொண்டு படங்களை அமைக்கும் போது படத்தில் வெறுமை தென்படாது. புதிதாக தயாரிப்பாளர்களாக வர இருப்பவர்களுக்கு, தொலைக்காட்சிப் படப்பிடிப்பில் இருக்கும் பட அமைவுகளையும், கமெரா உபயோகத்தின் போது என்ன வகையில் உபயோகிப்பது போன்றவற்றையும் தேவையான படவிளக்கத்தோடு தருகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Medium close up MCU - S/P Semi profile



Long Shot - High Angle LS - H/A




Close up CU (Full Face)



Medium close up MCU L/A Low Angle



Over-Shoulder Shot



Extreme Close up (XCU)




Big close up BCU



KNEE SHOT MLS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Two Shot



Medium Long Shot MLS L/A Low Angle



Very Long Shot VLS



Medium Close up MCU




Close up- Semi Profile CU-S/P



Close up - Profille CU-P



Long Shot LS



Extreme Long Shot ELS (XLS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












ZOOM IN



ZOOM OUT




LONG SHOT or COVER SHOT




MEDIUM SHOT




TWO SHOT



THREE SHOT




FULL SHOT




(Fill the Screen with The Object)

DOLLY IN (AS Seen From above)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு செய்தியும் செய்திப் படங்களோடு சேர்த்து ஒளிபரப்பப்படுகின்றது. அவற்றிற்குத் தேவையான முன்தகவல் படங்களையும் எதிர்கால நிகழ்வுக்குரிய சாத்தியக் கூறுகளையும் குறிப்பிட்ட சொற்ப நேரத்திற்குள் அதாவது, ஒரு நிமிடம் அல்லது 30 செக்கன்கள் அல்லது 15 செக்கன்களுக்குள் தயாரிக்க வேண்டியது அவசியமாகும். செய்தி சேகரிப்பவரின் பூரண அறிவைக் கொண்டே இது சாத்தியமாகின்றது. செய்திகளையும் செய்திப் படங்களையும் சேகரித்த பின்னர் படப்பிடிப்பாளர், ஒளி, ஒலியமைப்பாளர் ஆகியோரின் கடமைகள் முடிந்து விடுகின்றன. ஆனால், வெளிநாடுகளில் செய்தி திரட்டுபவரோடு அவர்களும் சேர்ந்து தங்களது பங்களிப்பை வழங்குவது வழக்கம். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் செலவு காரணமாக அனைவரையும் ஈடுபடுத்துவது சாத்தியமாகக் கருதப்படவில்லை. ஆகவே, செய்தி சேகரிப்பாளரே எல்லாவற்றையும் செய்ய வேண்டியதாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட தகவலைச் செய்திப் படங்களோடு சேகரித்த பின்னர் இரண்டு வகையான மூலப் பொருள்கள் செய்தி சேகரித்தவர் வசம் இருக்கும்.

1. செய்தி பற்றிய தகவல்கள் [INFORMATION FOR NEWS]
2. செய்திப் படங்கள் [VISUAL FOR NEWS]

இந்த இரண்டு மூலப் பொருள்களையும் வைத்துச் செய்தியைத் தயாரிக்க வேண்டியது செய்தி திரட்டிய நிருபரின் அல்லது தயாரிப்பாளரது கடமையாகின்றது. இதைச் செய்தித் தொகுப்பு எனக் கூறலாம்.

## செய்தித் தொகுப்பு [NEWS EDITING]

திரட்டிவரப்பட்ட தகவலையும் செய்திப் படத்தையும் ஒன்றிணைப்பதற்கு இரண்டு வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

(1) பிரதி தயாரித்தல் [SCRIPTING]
(2) படத்தொகுப்பு [VISUAL EDITING]

மேற்கூறிய இரண்டு நடவடிக்கைகளுக்குமான தயாரிப்பு முறைகள் இரண்டு விதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில தொலைக்காட்சி நிருபர்கள் செய்திக்குரிய படத்தை தொகுத்துவிட்டுப் பிரதி எழுதுவார்கள். சிலர் பிரதியை எழுதிவிட்டு அதற்கேற்றபடி படத்தைத் தொகுப்பார்கள். இது அவரவர் திறமைக் கேற்றபடி நடைபெறும். ஆனால், தொழில்நுட்ப சாதனங்களின் விரயத்தைத் தடுப்பதற்குப் பிரதியை எழுதிய பின்னர் படத்தைத் தொகுத்தால் நேர விரயம் இன்றிப் படத்தைத் தொகுத்துக் கொள்ளலாம். இங்குதான் தொலைக்காட்சிச் செய்தி நிருபர்கள் நேரத்தோடு போட்டி போட வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

## பிரதித் தயாரிப்பு [SCRIPTING]

செய்திக்குரிய பிரதியை எழுது முன்னர் செய்திக்காகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ள படங்களை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். எவ்வளவு நேரத்திற்குள் அந்தச் செய்தியைத் தொகுக்க வேண்டும் என்பதையும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சிச் செய்திப் பிரதியை எழுதும்போது பின்வரும் முறைகளே பின்பற்றப்படுகின்றன. எந்தச் செய்தித் தகவலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதையே அறிவிப்பாளர் நேரடியாக தொலைக்காட்சியில் தோன்றி வாசிக்கப்போகிறார். அது கலையக அறிமுகம் [STUDIO INTRODUCTION] என்று அழைக்கப்படும். அந்த முக்கிய தகவலின் பின்னர் செய்திப் படங்களுக்கான தகவல் விபரங்களைச் சேர்த்துப் படம் தொகுக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றது. இந்தப் படத்திற்குரிய தகவல்கள் படவிளக்கம் [COMMENTARY] எனப்படும்.

## கலையக அறிமுகம் [STUDIO INTRODUCTION]

செய்தியின் முக்கிய அம்சத்தை ரத்தினச் சுருக்கமாக இரண்டு – மூன்று வசனங்களுக்குள் எழுதி முடித்துவிட வேண்டும். செய்தியைக் கேட்பவருக்கு ஆர்வத்தை உண்டு பண்ணவேண்டியதே கலையக அறிமுகத்தின் குறிக்கோளாகும். இது பத்திரிகைச் செய்திகளில் பெரிய எழுத்துக்களில் தலைப்புச் செய்தி போடப்படுவதைப்போன்றது.

## பட விளக்கம் [COMMENTARY]

செய்திப் படத்திற்குத் தகவல்களை எழுதும்போது தெரிவு செய்த படத்திற்கு ஒத்ததாகவே எழுத்துப் பிரதியும் அமைய வேண்டும். ஆகக்குறைந்தது 13 வினாடிகள் அந்தப் படத்தின் விளக்கங்களைக் கூறிய பின்னரே அந்தப் படத்திற்குரிய முன் தகவல்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது ஆய்வாளர்களின் முடிவு. ஆகவே, முதல் 13 செக்கன்களும் படத்திற்கு ஏற்ற வகையில் விளக்கம் எழுதப்பட வேண்டும். அதன் பின்னர் தேவை ஏற்படின் அந்தச் செய்தி பற்றிய முன் தகவல்களையும் பின் தகவல்களையும் சேர்த்துக் கொள்ளலாம். செய்தித் தகவல்களோடு சேர்த்துப் படங்களும் காட்டப்படுவதால் இலகுவில் விளங்கக்கூடிய விதத்திலேயே வசனங்கள் அமைக்கப்படவேண்டும். கூடியளவு பிரயோகத்தில் உள்ள சொற்களைச் சேர்த்தே செய்திகள் எழுதப்பட வேண்டியது அவசியமாகின்றது. படவிளக்கங்களை எழுதும்போது அதற்குரிய சொற்களை நேரக் கட்டுப்பாட்டின் கீழ் எழுதவேண்டியது அவசியம்.

ஒரு செக்கனில், ஆங்கிலத்தில் மூன்று சொற்களை வாசிக்கலாம். ஆனால், தமிழிலோ சிங்களத்திலோ இரண்டு சொற்கள் அல்லது ஒரு சொல் மட்டுமே வாசிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே, 30 செக்கன் உள்ள ஒரு செய்திப் படத்திற்கு 50 தொடக்கம் 60 சொற்கள் வரையே விளக்கம் எழுதலாம். உரிய படங்கள் வரும்போது அதற்குரிய சொற்களை உபயோகித்துப் படத்திற்கு விளக்கம் எழுதவேண்டும். உதாரணமாக ஜனாதிபதி என்று கூறும் போது அவருடைய உருவமே திரையில் இருக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் தொலைக்காட்சியில் தமிழில் வசனங்களை அமைக்கும் போது நாம் பல கஷ்டங்களை எதிர்நோக்கினோம்.

*உ-ம்:* *நல்ல பல அபிவிருத்தித் திட்டங்களை நாட்டில் ஆரம்பிக்க வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.*

மேலே காட்டப்பட்டுள்ள வசனத்தில் எதுவித பிழைகளும் இல்லை. ஆனால், தொலைக்காட்சியில் இந்த வசனம் ஒளிபரப்பாகும் போது ஜனாதிபதி என்று குறிப்பிடுகையில், அவரின் உருவம் திரையில் காட்டப்பட வேண்டும். சில வேளைகளில் மேலே தரப்பட்டுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனத்தில் ஜனாதிபதி என்ற சொல்லை அறிவிப்பாளர் வாசிக்கும் போது அவருடைய முகம் திரையில் வராமல் இன்னொருவருடைய முகமோ அல்லது வேறு காட்சியோ வந்துவிடலாம். ஆகவே, தொலைக்காட்சிப் படவிளக்கத்திற்காக அந்த வசனத்தை மாற்றியமைக்கும் போது பின்வருமாறு அமையும்.

*உ-+ம்: ஜனாதிபதி, நாட்டில் நல்ல பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.*

செய்தி திரட்டியபோது நாம் சேகரித்த தகவல்கள் அனைத்தையும் நாம் சேகரித்த படங்களுக்கு அமைய பிரதி எழுதுவது ஒரு கலைத் தன்மை வாய்ந்த தொழில் எனக் கூறலாம். செய்திப் பட விளக்கங்களை எழுதும்போது அதற்கென சில விதிமுறைகள் இருக்கின்றன. அதாவது, ஆரம்பப்பகுதியில் நேரம் குறிப்பிட்டு, காட்டப்படும் படத்தின் விளக்கம் எழுதப்படவேண்டும். மறு பகுதியில் படத்திற்கான விளக்கங்கள் வசனமாக எழுதப்பட வேண்டும்.

## பட விளக்கம் [COMMENTARY]

| நேரம் | காட்சி | செய்தி |
|---|---|---|
| 01–12 செக்கன் வரை | மின் விளக்கு அலங்காரம் | மின் அலங்காரம் பத்து லட்சம் ரூபா செலவில் செய்யப்பட்டிருந்தது. |
| 13–16 வரை | வாகன நெரிசல் | வாகனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் |
| 17–23 வரை | மக்கள் கூட்டம் | பெருந்தொகையானோர் இந்த வைபவத்தில் கலந்து கொள்ள வருகை தந்திருந்தனர். |

இதை ஆங்கிலத்தில் "விசுவல் சிங்கிறனைஸ்" [VISUAL SYNCHRONISE] எனக் கூறுவார்கள். நாம் தமிழில் ஒளி – ஒலி இணைப்பு எனக் கூறலாம். அல்லது பட இணைப்பு என்று கூறலாம். பிரதி எழுதி முடிந்ததும் தயாரிப்பாளர் தான் சேகரித்த படங்களோடும் பிரதியோடும் படத்தொகுப்பகத்திற்குச் செல்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செய்திப் படத் தொகுப்பு [NEWS VISUAL EDITING]

மற்றைய நிகழ்ச்சிகளைவிட செய்திப் படத்தொகுப்பு மிகவும் சிரமமானது. ஒரு குறிப்பிட்ட பத்துச் செக்கன்களுக்குள் மூன்று அல்லது நான்கு விதமான படங்களைக் காட்ட வேண்டியிருக்கும். அதாவது முதலில் எழுதிக் காட்டியிருந்தது போல பத்துச் செக்கன்களுக்குள் காட்டும் மின்விளக்கு அலங்காரத்தை முதலில் தூரப்படமாக [LONG SHOT] மூன்று செக்கன்களும், பின்னர் மத்திம தூரப்படமாக [MEDIUM LONG SHOT] மூன்று செக்கன்களும், அடுத்த மூன்று, செக்கன் கள் மத்திம அண்மைப் படமாகவும் [MEDIUM CLOSE UP] காட்டலாம். கடைசி மூன்று, மூன்று செக்கன் கள், வாகனங்கள் அல்லது பொதுமக்கள் மின் விளக்குக் கம்பத்தின் கீழ் முண்டியடித்துப் போவதைக் அண்மைப் படங்களாக [CLOSE UP] காட்டலாம்.

நான்கு விதமான படங்களை மின் விளக்கு அலங்காரத்தைப் பற்றி நாம் எழுதிய வசனத்திற்குப் பொருத்தமாகத் தொகுக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு வசனத்திற்கும் செய்தியின் படத்தைச் சேர்த்துத் தொகுப்பது மிகவும் கலைநுணுக்கம் வாய்ந்த தொழிலாகும்.

சில வேளைகளில் படப்பிடிப்பாளரினால் பிடிக்கப்பட்ட நல்ல காட்சிகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் தயாரிப்பு [NEWS PRODUCTION]


செய்தி திரட்டுபவரினால் சேகரிக்கப்பட்ட செய்திகள் அனைத்தும் அவரினாலேயே தகவல்கள் எழுதப்பட்டுப் படங்கள் தொகுக்கப்படுகின்றன. பின்னர் அவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு, கலையகத் தயாரிப்பாளரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அவர் அந்தச் செய்திப் படங்களுக்குரிய விளக்கப் படங்களைத் தெரிவு செய்வார். விளக்கப் படக் கலைஞர்களோடு கலந்துரையாடி செய்திக்கு மேலும் பல தகவல்களைத் தரக்கூடிய வரைபடங்களைச் சேர்த்துக் கொள்வார். குறிப்பிட்ட செய்தி இடம்பெற்ற இடத்தைத் தேசப்படங்களில் குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலம் அந்தச் செய்தி இடம்பெற்ற களம் எங்கே அமைந்திருக்கின்றதென்ற விடயம் பார்ப்பவருக்குத் தெளிவாக்கப்படுகின்றது. . அத்தோடு கேட்கும் சக்தி அற்றவர்களும் படத்தில் காட்டப்பட்ட இடத்தில் செய்தி இடம் பெற்றிருக்கின்றதென்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்தக் கடமைகளில் பிரதம செய்தி ஆசிரியர், அன்றாட செய்திக்குப் பொறுப்பான ஆசிரியர், ஆகியோர் கலந்து கொள்வர்.

ஒவ்வொரு செய்திக்கும் சுருக்கமான விளக்கத் தலைப்புக்களை எழுதி திரையில் எழுத்துக்களாகக் காட்டி குறிப்பிட்ட செய்தியின் முக்கியத்துவம் என்ன? என்பதையும் விளக்கிக் காட்டவேண்டும். செய்தி வாசிக்கும் அறிவிப்பாளரோடு சேர்ந்து செய்திப் பிரதியையும் படத்தையும் ஒத்திகை பார்த்து, குறை நிறைகளைத் தயாரிப்பாளர் நிவர்த்தி செய்வார். செய்தி ஒளிபரப்புச் செய்யும் போது எந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பது அன்றைய செய்திகளின் முக்கியத்துவத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. இந்த விடயத்தில் செய்திப் பிரிவுப் பணிப்பாளரின் ஆலோசனையும் சில நேரங்களில் பெற்றுக் கொள்ளப்படும். பின்னர் கலையகத்திற்குத் தேவையான நிகழ்வு நிரல்களைத் தயார் செய்து செய்தி ஒளிபரப்பப்படும் போது தொழில்நுட்பவியலாளர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதும் செய்தித் தயாரிப்பவரின் கடமையாகும். பல மொழிகளில் செய்திகள் ஒளிபரப்பாகும் நிலையங்களில் குறிப்பிட்ட ஒரு மொழியில் செய்திகள் தயாரிக்கப்பட்டுப் பின்னர் அவை மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுவது வழக்கம்.



கலையகத்தில் அறிவிப்பாளருடன் பிரதிகளை ஒப்பிடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரடிச் செய்தி ஒளிபரப்பில் கலையகக் கட்டுப்பாட்டகம்



நேரடிச் செய்தி ஒளிபரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரடி செய்தித் தயாரிப்பு



நேர்முக வர்ணனை செய்யும் ஒளிபரப்பாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி திரட்டியவர்கள் மற்றும் அனைவரின் முயற்சியையும் உழைப்பையும் ஆக்கபூர்வமாக வெளிக்கொணர்பவர்கள் அறிவிப்பாளரும், கலையகத் தயாரிப்பாளரும், அங்கு கடமைபுரியும் தொழில்நுட்பவியலாளர்களுமேயாகும். இவர்கள் அனைவருக்கும் செய்தித் தயாரிப்புக்காகப் பிரத்தியேகமான பயிற்சிகள் கொடுக்கப்படவேண்டியது அவசியம்.

## வெளிநாட்டுச் செய்திகள் [FOREIGN NEWS]

ஒவ்வொரு நாடும் உள்நாட்டுக்குள் ஒளிபரப்புச் செய்வதற்கான செய்திகளைத் தயாரிப்பதுபோல அயல் நாடுகளுக்கான செய்திகளையும் தயாரிக்கின்றது. தமது நாட்டில் இடம்பெறும் செய்திகளைத் தங்களுடைய வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப தயாரித்துப் பாரிமாறிக் கொள்கின்றன. குறிப்பிட்ட சில நாடுகள் செய்திகளைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு ஸ்தாபனங்களை அமைத்துள்ளன. ஐரோப்பிய நாடுகள் யூரோவிஷன் [EUROVISION] எனும் செய்மதி செய்திப் பரிவர்த்தனை நிறுவனத்தின் மூலமும், ஆசிய நாடுகள், ஏசியாவிஷன் [ASIA VISION] எனும் செய்திப் பரிவர்த்தனை நிறுவனத்தின் மூலமும், தங்களது செய்திகளைப் பரிமாற்றம் செய்கின்றன. அதைவிட தனிப்பட்ட நிறுவனங்களும் செய்திகளைச் சேகரித்து செய்திப் பரிவர்த்தனை செய்து கொள்கின்றன. உதாரணமாக விஸ் –நியூஸ் [VISNEWS] சி.என்.என்[C.N.N.] வேர்ள்ட் நெற் [WORLDNET] ரொயிட்டர் [REUTERS] போன்ற ஸ்தாபனங்களைக் குறிப்பிடலாம். ஏசியா விசன் செய்திப் பரிவர்த்தனையிலே ஜப்பான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், மலேசியா, இந்தோனேஷியா, ஈரான், புறுணை, சீனா போன்ற நாடுகள் நிரந்தரமாக அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த செய்திப் பரிவர்த்தனைக்கான பயிற்சிகள் மலேசியா கோலாலம்பூரில் AIBD நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படுவார்கள். இவர்களுக்கு செய்திப் பரிவர்த்தனை பற்றிய பயிற்சிகள் வழங்கப்படும்.



மலேசியாவில் 'ஏசியா விஷன்' செய்திப் பரிவர்த்தனைப் பயிற்சி முடிவடைந்து சான்றிதழ் வழங்கப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சிச் செய்திகள் [TELEVISION NEWS]

1981ல் ஜேர்மனியில் தொலைக்காட்சிப் பயிற்சி பெறும் போது எனக்குப் பயிற்சி அளித்த பி.பி.சி. தொலைக்காட்சி நிலைய வல்லுனர் ஒருவர் கூறியதை இங்கு ஞாபகப்படுத்தலாம். "தொலைக்காட்சிச் செய்தி இதுதான் என்று வரையறுத்துக் கூற முடியாது. ஆனால், தொலைக்காட்சிச் செய்தித் தயாரிப்பு என்பது கூர்மையான கத்தியின் மீது நடப்பதற்கு ஒப்பானது. ஒவ்வொரு நாட்டிற்கும் அந்த நாட்டின் கொள்கைகளுக்கும் கலாசாரத்திற்கும் ஏற்ற வகையில் செய்திகளைத் தயாரிப்பது தொலைக்காட்சிச் செய்தித் தயாரிப்பாளரின் கடமையாகும். முக்கியமாக மூன்றாம் மண்டல உலக நாடுகளில் செய்திகளைத் தயாரிப்பவர்கள் மிகவும் நிதானமாகவும் கவனமாகவும் செய்திகளைத் தயாரிக்க வேண்டும். ஏனெனில், அது அந்த நாட்டின் எதிர்காலத்தையே மாற்றிவிடும்" எனக் கூறினார்.இலங்கையைப் பொறுத்தளவில் இது எந்தளவிற்கு உண்மை என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

மேற்கு நாடுகளில் வாழ்பவர்களின் அறிவு வளர்ச்சி காரணமாக அவர்கள் எந்தச் செய்தியைச் செவிமடுத்தாலும் அதைப் பகுத்தறியும் பக்குவத்தைப் பெற்றிருக்கின்றார்கள். எந்தப் பிரச்சினையையாக இருந்தாலும் பக்கச்சார்பாகச் சிந்திக்காமல் இருபக்கச்சார்பாக அலசி ஆராய்ந்து பிரச்சினைகளுக்கு முடிவெடுத்துக் கொள்ளும் தன்மை வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். இந்தப் பக்கச்சார்பற்ற முடிவெடுக்கும் தன்மையை வளர்த்த பெருமை வெகுஜனத் தொடர்பு ஊடகங்களையே சாரும்.

ஆனால், மூன்றாம் மண்டல உலக நாடுகளில் பக்கச் சார்பான செய்திகளை ஒளிபரப்பும்படி செய்தியாளர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். அநேகமான மூன்றாம் உலக நாடுகளில் இருக்கும் தொலைக்காட்சி நிலையங்கள் யாவும் நேரடியாக அந்த நாட்டு அரசுகளின் கட்டுப்பாட்டிலோ கண்காணிப்பிலோ இருப்பதுதான் காரணமாகும். ஒரு சில நாடுகளில் இருக்கும் செய்தித் தணிக்கை முறைகளும் இதற்குக் காரணமாக அமைகின்றன.

இதனால்தான் வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் மூன்றாம் மண்டல உலக நாடுகளில் செய்திகளைச் சேகரிப்பதற்குத் தனிப்பட்ட செய்தி நிருபர்களை அனுப்பிச் செய்திகளைச் சேகரித்துத் தங்களுடைய நாட்டுத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புகின்றன. இவற்றை அண்மைக் காலங்களில் இலங்கையில் ஒளிபரப்பப்படும் பி.பி.சி.யின் ஆசிய நாடுகளுக்கான செய்தி ஒளிபரப்பை பார்ப்பவர்கள் புரிந்து கொள்வார்கள்.

மூன்றாம் மண்டல உலக நாடுகளில் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகளும் கூட தங்களுடைய நாட்டிற்குள் இடம்பெறும் சில செய்திகளை ஒளிபரப்பும் போது தணிக்கை முறைகளை கையாளுகின்றன என்பது உண்மை. ஆனால், அங்கு ஒளிபரப்பு நிலையத்தின் தனித்தன்மைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் நட்புறவு ரீதியில் செய்தித் தணிக்கை நடைமுறைக்கு இடப்படுகின்றது.

இலங்கையில் செய்தி ஒளிபரப்பு ஆரம்பித்து சுமார் 16 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. உலக நாடுகளில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. மத்திய கிழக்கு யுத்தம், சோவியத் யூனியனின் சிதைவு , யூகோஸ்லாவியா, ஹெயிற்றி, வடகொரியா – தென்கொரியா, இந்தியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனா, ஜப்பான், ஜேர்மனி, இங்கிலாந்து மற்றும் பல நாடுகளில் ஏற்படும், ஏற்பட்டுவரும் பொருளாதார, அரசியல் விஞ்ஞான, தொழில்நுட்ப மாற்றங்களை, செய்தி வடிவத்தில் உடனுக்குடன் பார்ப்பதற்கு இலத்திரனியல் ஊடகமான தொலைக்காட்சிச் சேவை உதவியுள்ளது. அதே போல உள்நாட்டுச் செய்திகளிலும் பக்க சார்பற்ற செய்திகளை ஒளிபரப்புவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதுதான் எமது செய்தி ஒளிபரப்புச் சேவையை நாம் முழுமையாக அனுபவிக்க முடியும்.

**********

## தொலைக்காட்சி நாடகங்கள்

பொழுதுபோக்கிற்காகவும், கொள்கை விளக்கங்களுக்காகவும் தகவல்களைப் பரப்புவதற்காகவும் தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது திரைப் படத்துறையின் தாக்கத்தினால் ஏற்பட்டதாகும். ஏனெனில் தொலைக்காட்சித் துறை ஆரம்பமாவதற்கு முன்னர் திரைப்படத்துறை மிகவும் முக்கிய பொழுதுபோக்கு அம்சமாக இருந்தது. பொழுதுபோக்கிற்காக ஆயிரக்கணக்கில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டமையினால் ரசிகர்கள் அதன்பால் கவரப்பட்டிருந்தார்கள்.

இதன் பின்னர் தொலைக்காட்சி ஊடகம் ஆரம்பிக்கப்பட்டதும் மக்கள் வீடுகளில் இருந்தே நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்பு வழங்கப்பட்டதினால் தொலைக்காட்சி நாடகம் இப்பொழுது ஒரு முக்கிய பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக மாறிவிட்டது. இதனால் தொலைக்காட்சி நாடக வடிவம் தொலைக்காட்சியின் பிரபல நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. உலக தொலைக்காட்சி நிலையங்கள் பல கோடிக்கணக்கான ரூபா செலவிலே தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரித்து ஒளிபரப்பி வருகின்றன.

தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காக தயாரிக்கப்படும் நாடகங்களை தொழில்நுட்ப ரீதியில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சினி நாடகம் [CINE DRAMA]
2. தொலைக்காட்சி நாடகம் [TELE DRAMA]

### சினி நாடகம்: [CINE DRAMA]

திரைப்படத் தயாரிப்பில் ஒலி,ஒளி [SOUND, VISUAL] இரண்டும் ஒன்றாகப் பதிவு செய்யப்படுவதில்லை. அங்கு படங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. இதற்கு பிலிம் சுருள்களே [FILM] பாவிக்கப்படுகின்றன. படப்பிடிப்பு முடிந்ததும் பிலிம் சுருள்கள் அமிலங்களின் சேர்வையினால் [PROCESSING] கழுவப்பட்டு, பின்னர் தேவைக்கேற்றபடி வெட்டி ஒட்டப் படுகின்றன. ஒட்டப்பட்ட பிலிம் சுருள்களில் குரல்கள் [DUBBING] பதிவு செய்யப்பட்டுப் பின்னர் இசையும் சேர்க்கப்பட்டு [RE - RECORDING] திரைப்படம் உருவாக்கப்படுகிறது. இதே தொழில் நுட்பங்கள் நாடகத்தில் கையாளப்பட்டால் அவற்றை சினி நாடகங்கள் என அழைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு உதாரணமாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்ட பெண், கையளவு மனசு போன்ற பல நாடகங்களைக் குறிப்பிடலாம். இவற்றிற்கு தொலைக்காட்சிக் கமெராக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், நடிப்பவரின் குரல் மீண்டும் ஒரு முறை பதிவு செய்யப்பட்டிருப்பதினால் தொலைக்காட்சி தொழில்நுட்பத்தின் நவீனத் தன்மை அங்கு உபயோகிக்கப்படவில்லை என்றே கூறலாம்.

## தொலைக்காட்சி நாடகங்கள் [TELE DRAMA]

திரைப்படத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியே தொலைக்காட்சி. ஒலி, ஒளி இரண்டையும் ஒரே நேரத்தில் பதிவு செய்யும் வசதிகள் உள்ளன. நாடகக் களத்தில் இடம்பெறும் இயற்கைத் தன்மையை, இயற்கை ஒலிகளோடு, கதாபாத்திரங்களின் இயற்கையான குரல் வளங்களோடு இணைத்து நாடகம் தயாரிக்கப்பட்டால் மட்டுமே தொலைக்காட்சி நாடகம் எனப்படும். பின்னர் நாடகத்தின் தேவை கருதி இசை சேர்த்துக் கொள்ளப்படுவதுண்டு. இதனால் தொலைக் காட்சிக்கென நாடகங்களில் நடிப்பவர்தள் சிறப்புப் பயிற்சிகளைப் பெற வேண்டியவர்களா கின்றார்கள். தொலைக்காட்சிக்கென விசேட முறையில் நாடகப் பிரதிகள் எழுதப்பட்டு தொலைக் காட்சிக் கமெராக்கள் மூலம் நாடாக்களில் ஒளிப்பதிவு செய்யப்பட்டுத் தயாரிக்கப்படும் நாடகங்களை மட்டுமே தொலைக்காட்சி நாடகங்கள் என அழைக்கலாம். சிலர் மேடை நாடகங்களைத் தொலைக்காட்சிக்குத் தயாரித்துவிட்டு, "தொலைக்காட்சி நாடகங்கள் தயாரித்தோம்" எனக் கூறுகிறார்கள்.

தொலைக்காட்சியில் பூரண பயிற்சி பெற்றவர்களுக்கும் மற்றைய துறைகளில் இருந்து இந்தத் துறைக்கு வந்தவர்களுக்குமிடையே பெரியதொரு இடைவெளி இருப்பதை அவதானிக்கக்கூடியதாய் இருக்கிறது. சிலர் திரைப்படத்துறை அனுபவத்தை வைத்துக்கொண்டு தொலைக்காட்சித் துறையை நோக்குவதும் உண்டு. உதாரணமாக இலங்கையின் பிரபல சிங்களத் திரைப்பட நெறியாளராக இருந்த ஒருவர் தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முற்பட்டபோது இந்த இடைவெளி தெரியவந்தது. அவரால் தொடர்ச்சியாகப் பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முடியாமல் போனது. ஆனால் சிங்களத் திரைப்பட நெறியாளர்கள் சிலர் தொலைக்காட்சித்துறையில் வெற்றிப் படைப்புக்களைத் தந்துள்ளார்கள். திரு. தர்மசேன பத்திராஜா, திரு. தர்மசிறி பண்டாரநாயக்க, திரு. ரைற்றஸ் தொட்டவத்த போன்ற நெறியாளர்களை உதாரணமாகக் கூறலாம். அதே போல தொலைக்காட்சித்துறையில் இருந்து திரைப்படத் துறைக்குச் சென்று திரைப்படங்களை நெறிப்படுத்தி, பல பரிசில்களை வென்றெடுத்த திரு. பராக்கிரம நிரியல்லவும் குறிப்பிடத்தக்கவர்.

## ரூபவாஹினியும் தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களும்


இலங்கை ரூபவாஹினி ஆரம்பித்த காலத்தில் நாடகத் தயாரிப்பாளராக திரு.பி. விக்னேஸ்வரன் கடமையாற்றினார். அவர் முதன் முதலாக திரு.க.பாலேந்திராவின் மேடை நாடகமான "கண்ணாடி வார்ப்புகள்" எனும் நாடகத்தை தொலைக்காட்சிக்காகத் தயாரித்தார். இது ஒரு மேடை நாடகமே தவிர தொலைக்காட்சி நாடகமல்ல. இதன் பின்னர் பி. விக்னேஸ்வரன் அவர்கள், நிஜங்களின் தரிசனம், உதயத்தில் ஓர் அஸ்தமனம், ஒரு நீண்ட கனவு, துணை ஒன்று, மலையோரம் வீசும் காற்று, போன்ற நாடகங்களை தொலைக்காட்சிக்காகத் தயாரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தினார். திரு. காவலூர் ராஜதுரை காலங்கள் எனும் நாடகத்தை தயாரித்தார். வரணியூரானின் மேடை நாடகமான சமூக சேவகி, திரு.ராஜசேகரன் ஹெலன்குமாரி ஆகியோரின் ஹெரி ஒன் டிரக்டர் போன்ற பல மேடை நாடகங்களும், நண்பர் எஸ். ராமதாஸ் அவர்களின் தயாரிப்பு நெறியாள்கையில் பல சமூக நாடகங்களும், நகைச்சுவை நாடகங்களும் தயாரிக்கப்பட்டன. தூரத்துக் கனவுகள், குடும்பம் ஒரு கலைக் கதம்பம், காத்திருந்தவன் போன்ற பல தொலைக்காட்சி நாடகங்களை திரு.எஸ்.விஸ்வநாதன் தயாரித்துள்ளார்.

1990ல் தொலைக்காட்சிப் பயிற்சிக்காகப் புலமைப் பரிசில் பெற்று ஜேர்மனி சென்ற திரு. பி. விக்னேஸ்வரன் நாடு திரும்பாமல் கனடா நாட்டுக்கு சென்றதும், திரு. சில்வெஸ்ரர் எம். பாலசுப்பிரமணியம் செய்திப் பிரிவிலிருந்து தமிழ்ப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டார். இந்தக் காலத்தில் கலையகத் தயாரிப்பிற்காக என்னால் எழுதப்பட்ட "வீடு" என்ற நாடகத்தைத் தயாரித்தேன். இந்த நாடகம் பரீட்சார்த்தமான முறையில் தயாரிக்கப்பட்டதாகும். மூன்று நாட்களில், இரண்டு விதமான அரங்கங்களை அமைத்து மூன்று அங்கங்களைக் கொண்ட நாடகத்தைத் தயாரிக்கலாம் என்பதை எடுத்துக் காட்டும் விதத்திலேயே இந்த நாடகம் தயாரிக்கப்பட்டது. இதற்கு இசை சேர்ப்பதற்கும், படத்தொகுப்பு போன்றவற்றிற்காகவும் நாம் செலவிட்ட நேரம் எட்டு மணித்தியாலம். சாதாரணமாக வெளிப்புறப் படப்பிடிப்பில் ஒரு அங்க நாடகத்தை தயாரிப்பதற்கு 5-6 நாட்கள் செல்லும். படத்தொகுப்பிற்கு ஆகக்குறைந்தது 10-20 மணித்தியாலங்கள் வரை செல்லும். தொகையான நாடகங்களைத் தொலைக்காட்சிக் கலையக வசதி களைக் கொண்டு தயாரிக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

வெளிப்புறப் படப்பிடிப்பில் நாடகத்தைத் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் "திருப்பங்கள்" எனும் நாடகம் தயாரிக்கப்பட்டது. என்னால் தயாரிக்கப்பட்ட இந்த நாடகத்திற்கு பலர் விமர்சனங்களை எழுதினார்கள். திருமதி யோகா பாலச்சந்திரன் அவர்கள், 17.01.1991 தினகரனில் இந்த நாடகம் பற்றி கருத்துத் தெரிவிக்கும் போது "இலங்கையில் ஒளிபரப்புத்துறை உதயமாகிய பின் பல தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும், தொலைக்காட்சி பிரதானமாக கட்புல [VISUAL] சாதனம் என்ற வகையில் பேச்சைக் குறைத்து, முகபாவங்களாலும், பொருத்தமான உடல் அசைவுகளாலும் மானுடத் தொடர்பியலை நுட்பமாகத் தெள்ளிதில் புலப்படுத்தலாம் என்ற கருத்தைச் சீராக உள்வாங்கி, தயாரிக்கப்பட்ட முதலாவது தமிழ் ரெலிவிசன் நாடகம் இது என்று நான் சொல்வேன். இதனால் திருப்பங்கள் நாடகம் ரூபவாஹினியில் ஒரு நல்ல திருப்பம்தான் என விமர்சனம் எழுதியிருந்தார்.


'திருப்பம்' - ஒரு நல்ல திருப்பம்தான்!

- யோகா பாலச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாடகம் சரியான முறையில் தயாரிக்கப்படவில்லை, நடிப்பு சரியில்லை. வேறு பல கோணங்களில் தயாரிக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். ஆனால் அந்த நாடகம் பற்றிக் குடும்பப் பெண் ஒருவர் எழுதிய விமர்சனம் இது.

0-1-41

திரு. அருணா செல்லத்துரை,

அன்புள்ள அண்ணா.

- தங்களது தயாரிப்பில் உருவான - தொலைக்காட்சி நாடகத்தை - திங்கட்கிழமை பார்த்தேன். உண்மையில் - பல காலத்திற்கு பின்னர் அருமையான தமிழ் தொலைக்காட்சி நாடகத்தை தந்ததற்கு உங்களுக்கு எனது அன்பு கலந்த வாழ்த்துக்கள்.

இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் - அங்கு ஒளிபரப்பாகும் - சில தமிழ் தொலைக்காட்சி நாடகங்களை பார்த்துவிட்டு - இலங்கை திரும்பிய போது - ரூபவாஹினி தமிழ் நாடகங்களை ஒப்பிட்டு 'நாம் எப்போது நல்ல தமிழ்த்தொலைக்காட்சி நாடகங்களை - இலங்கையில் உருவாக்கமுடியும் என்று எண்ணி' - ஏங்கியதுண்டு!

ஆனால் தங்களது நாடகம் - இலங்கை தமிழ் தொலைக்காட்சி நாடகங்கள் - தரமாக உருவாக்க முடிந்தவர்கள் - இருக்கின்றார்கள் என்பதை நிரூபித்துவிட்டது.

எனக்கு தொலைக்காட்சி நாடகத்தை - கதையமைப்பு, எடிட்டிங், கமெரா ஆங்கிள், நடிப்பு, என்று தொழில் நுட்பரீதியில் - விலாவாரியாக விமர்சனம் பண்ணத் தெரியாது.

ஆனால் ஒரு சாதாரண குடும்பப்பெண் - நாடகம் முடியும் வரை - நாடகத்தில் மூழ்காக லயித்து - நாடகம் முடிந்ததும் - 'அடபோடா அருமையான நாடகம்' என்று தனது குடும்ப கடமைகளுக்கு எழுந்து செல்கின்ற மாதிரி ஒரு நாடகத்தை தயாரித்து தந்திருக்கிறீர்கள்.' இந்த மாதிரி வருடத்திற்கு ஒன்று நாடகங்கள் போதும் - எமது தமிழ்த்தொலைக்காட்சி நாடகங்கள் வளர என்பதே எனது தாழ்மையான விமர்சனமும் - கருத்தும் - ஆசையும் ஆகும்.

உங்கள் முயற்சி மேலும் தொடர வாழ்த்துக்கள்.

அன்புடன்
தங்கை
இந்திரா

குடும்பத்தினருக்கும் உங்களுக்கும்
எனது. தைப் பொங்கல்
வாழ்த்துக்கள்

**இதுதான் தொலைக்காட்சி நாடக ரசிகர்களின் எதிர்பார்ப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி நாடகம் வளர்வதற்கு முதலில் பிரதி எழுதுவதற்கு நல்ல பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். பிரதிகளைத் தெரிவு செய்து நாடகங்களைத் தயாரிப்பதற்குத் தயாரிப்பாளர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். தயாரிப்பாளர்களின் தன்னிச்சையான போக்கும், போதிய தொழில்நுட்ப அறிவின்மையும், தொலைக்காட்சி நாடகத்துறையை வளர்க்க வேண்டும் என்ற புனிதமான சிந்தனை இல்லாமையுமே தமிழ் தொலைக்காட்சி நாடகத்துறை வளராதற்குரிய காரணங்களாகும்..

தொலைக்காட்சி நாடகப் பிரதி எழுதுவதில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு ஒரு உதாரணம்: 1987ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு நாடகப் பிரதியை எழுதித் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பிற்கு பொறுப்பாக இருந்தவரிடம் கொடுத்தேன். என்னையே அந்த நாடகத்தை நெறியாள்கை செய்து தயாரிக்கும்படி தயாரிப்பாளர் கூறினார்.

அதற்கான விபரங்களையும், கலையக அமைப்பு முறைகளையும், கலைஞர் விபரங்களையும் கேட்டார். முழு விபரங்களும் கொடுக்கப்பட்டு விட்டன. ஆனால் நாடகத் தயாரிப்பிற்கான எந்தவித ஆயத்தங்களும் செய்யப்படவில்லை. ஒரு வருடம் ஓடி மறைந்துவிட்டது. என்னிடம் இருந்த நாடகப் பிரதியில் சிறு மாற்றங்களைச் செய்து வானொலி நாடகத் தயாரிப்பாளரிடம் ஒப்படைத்தேன்.

அந்த நாடகம் 23.01.1988 வானொலியில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. இந்த ரகசியம் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளருக்குத் தெரிந்திருக்கவில்லை. சரியாக மூன்று மாதங்களின் பின்னர் நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. அந்த நாடகத்தைப் பார்த்த சிலர் என்னுடைய வானொலி நாடகத்தையே தொலைக்காட்சிக்கு எழுதிக் கொடுத்துள்ளதாக நினைத்து என்னிடம் விசாரித்தார்கள். ஏனெனில் தொலைக்காட்சி நிலையத்தில் தொழில் புரிவதினால் வேறு பெயரில் இந்த நாடகத்தை எழுதிவிட்டேன் என்ற சந்தேகம். இது சாதாரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட ஒரு சந்தேகம் தான்.

நாடகத் தயாரிப்பாளரிடம் ஒரு நாடகப் பிரதி ஒப்படைக்கப்பட்டால் அந்த நாடகப் பிரதியில் உள்ள குறை நிறைகளைக் கூறி, நாடகத் தயாரிப்புக்கு ஏற்றதா என்பதை தீர்மானிக்கும் திறமை இருக்கவேண்டும். இந்த நடைமுறையில் நேர்மையைக் கடைப்பிடித்தால் மட்டுமே தொலைக்காட்சி நாடகத்தை வளர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி நாடகமும் நானும்

தொலைக்காட்சிச் செய்திப் பிரிவில் கடமையாற்றினாலும் எனக்கும் நாடகத்திற்கும் நிறையத் தொடர்புகளுண்டு. இந்தத் துறையை வளர்ப்பதற்கு என்னாலான பங்களிப்பை செய்கின்றேன். தொலைக்காட்சி நாடகத்துறையை வளர்ப்பதற்கு ஏற்ற வகையில் பல பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றேன். இந்தப் பயிற்சிக் கருத்தரங்குகளில் வெறுமனே பேச்சுக்கள் இடம்பெறாமல் பயிற்சியே நோக்கமாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிகளில் பங்குபற்றுபவர்கள் ஆர்வம் கொண்ட துறைகளில் தங்களைச் செயல் முறையில் ஈடுபடுத்துவதற்காகவே விரிவுரைகள் குறைக்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சி நாடகத்திற்குப் பொருத்தமான கதையைத் தெரிவு செய்தல், பிரதி எழுதுதல், ஒளியமைப்பு, ஒலியமைப்பு, நெறியாள்கை, படத்தொகுப்பு போன்றவற்றில் பயிற்சிகளை மேற்கொண்டு பயிற்சியின் முடிவில் முழுமையாக 15 நிமிட தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரிப்பதே கருத்தரங்கின் உள் நோக்கமாகும்.

ஏற்கனவே கண்டியில் நடத்தப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கிலே "பேராதனைப் பல்கலைக்கழகத்தோடு சம்பந்தப்படுத்திய கரு ஒன்றை 15 நிமிட நாடகமாகவும், திருகோணமலையில் அகதிகள் சம்பந்தமான தொலைக்காட்சி நாடகத்தையும், மட்டக்களப்பிலே நடத்தப்பட்ட பயிற்சிக்கருத்தரங்கிலே மட்டக்களப்பு சொல் வழக்கிலே "தண்டனை" என்ற நாடகத்தையும், வவுனியாவில் "யாழ்தேவி" என்ற தொலைக்காட்சி நாடகத்தையும் தயாரித்தேன். இவையனைத்தும் VHS கமெராவினால் படமாக்கப்பட்டுப் படத்தொகுப்புச் செய்யப்பட்டன.

பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றியவர்கள் பயிற்சிக்காகத் தயாரிக்கப்பட்ட நாடகத்தைப் பார்த்தபோது தாங்களும் தொலைக்காட்சி நாடகத்தை எழுதலாம், நடிக்கலாம் நெறியாள்கை செய்யலாம் என்ற மனத்துணிவு பெற்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## தொலைக்காட்சி நாடகங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்

1. தொலைக்காட்சிக் குறு நாடகங்கள் [SINGLE EPISODE DRAMAS]
2. தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் [SERIAL DRAMAS]

## தொலைக்காட்சிக் குறு நாடகங்கள்

தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்பப்படும் நேரத்தைக் கொண்டே நாடக வகைகள் பிரிக்கப்படுகின்றன. ஒரே தடவையில் ஒளிபரப்பப்படும் நாடகம் தொலைக்காட்சிக் குறுநாடகம் என அழைக்கப்படுகின்றது. இந்த நாடகத்தில், ஆரம்பம் முடிவு ஆகியன ஒரே அங்கத்துள் அடக்கப்பட்டு விடும். இவை ஓரங்க நாடகம் [SINGLE EPISODE DRAMA] எனவும் அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்

ஒரு நாடகம் பல அங்கங்களாக ஒளிபரப்பப்படும்போது அது தொடர் நாடகம் என குறிப்பிடப்படும். சில தொடர் நாடகங்கள் பல வருடங்களாக ஒளிபரப்பப்பட்டு வந்திருப்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

## தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பு

தொலைக்காட்சிக்கென நாடகங்கள் இரண்டு விதமாக தயாரிக்கப்படுகின்றன.

1. கலையக நாடகத் தயாரிப்பு [STUDIO DRAMA PRODUCTION]
2. வெளிப்புற நாடகத் தயாரிப்பு [OUTDOOR DRAMA PRODUCTION]

## கலையக நாடகத் தயாரிப்பு

நாடகத்திற்குத் தேவையான களங்களைக் கலையகத்தில் அரங்கமைத்து நாடகங்களைத் தயாரிப்பது கலையக நாடகத் தயாரிப்பென அழைக்கப்படும். இதற்குக் கலையகத்தில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதைப் பிரதி எழுதுபவர்கள் ஓரளவுக்குத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். எமது கூட்டுத்தாபனத்தில் இருக்கும் கலையகங்களில் முதலாம் கலையகத்தில் மூன்று கமராக்களும், மூன்றாம் கலையகத்தில் நான்கு கமராக்களும் பொருத்தக்கூடிய வசதிகள் உள்ளன. முதலாம் கலையகத்தின் நிலப்பரப்பளவு 2,400 சதுர அடிகளாகும். ரூபவாஹினியில் உள்ள மிகப் பெரிய கலையகமான மூன்றாம் கலையகம் 4,800 சதுர அடிகள் பரப்பளவைக் கொண்டது. தொழில்நுட்பத் தேவைகளுக்காக, நாடகக் களத் தெரிவை பிரதி எழுதுபவரே தேர்ந்தெடுப்பதால் இவற்றைத் தெரிந்து வைத்துக் கொள்வது அவசியம்.

எழுதப்போகும் நாடகத்திற்கு எப்படியான அரங்கத்தை அமைக்க வேண்டும் என்பதை கற்பனையில் அமைத்துக்கொள்வது பிரதி எழுதுபவரின் கடமையாகும். எழுத்தாளரின் கற்பனையில் உருவாக்கப்பட்ட அரங்கங்களை தொழில்நுட்பத் தேவைகளுக்காக நெறியாளரும் தயாரிப்பாளரும் மாற்றியமைக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். ஆனால், பிரதி எழுதுபவரே இதற்கான முதலுருவத்தை அமைக்கிறார். மூன்று கமராக்கள் பொருத்தப்பட்டிருப்பதால் காட்சிக்குரிய வசனங்களையும் அதற்குரிய நடிப்புக்களையும் நாம் பிரதியில் எழுதவேண்டியது அவசியம். தொலைக்காட்சியில் நடிகர்கள் நேரே தோன்றி நடிப்பதால் மேடை அல்லது வானொலிக்கு எழுதுவது போன்று, வசனங்கள் மூலம் உணர்ச்சிகளைக் காட்டத் தேவையில்லை. நடிகர்கள் ஒவ்வொரு அங்க அசைவுகளைக் கொண்டும் உணர்ச்சிகளை வெளிக்கொணர முடியும். இதனால் பிரதி எழுதுபவர்கள் வசனங்களைக் குறைத்து நடிப்புக்கே முக்கிய இடத்தைக் கொடுக்க வேண்டும். அதேபோல் காட்சி மாற்றங்களுக்காகப் பலவிதமான அரங்கங்களைக் கலையகத்தில் அமைக்க முடியாததினால் கூடியளவு வெளிப்புறக் காட்சிகளைத் தவிர்த்து அமைக்கப்பட்டிருக்கும் அரங்கத்தினுள்ளேயே சுவைபட நாடக அம்சங்களைச் சேர்த்துக் கொண்டால் நாடகம் சிறப்பாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிப்புற நாடகத் தயாரிப்பு

நாடகத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட கதை இடம்பெறும் களத்தைத் தெரிவு செய்து அதுபோன்ற ஓர் இடத்தில் நாடகத் தயாரிப்பை நடத்துதல் வெளிப்புற நாடகத் தயாரிப்பு என அழைக்கப்படும். வெளிப்புற நாடகத் தயாரிப்பின்போது அநேகமாக யதார்த்தமாக நடக்கும் சம்பவங்களை அப்படியே படம்பிடித்துக் கொள்ளலாம். அதனால் பிரதி எழுதுபவர்கள் தங்களுடைய நாடகக் கருவுக்கு வலுவூட்டக்கூடிய விதத்தில் காட்சிகளைப் பிரதிகளில் சேர்த்துக் கொண்டால் அவற்றை நாடகத் தயாரிப்பின்போது சேர்த்துக் கொள்ளலாம். பிரமாண்டமான வெளிப்புறத் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்புக்களின்போது களங்களில் பெரிய அரங்கங்களை அமைத்தும் இரண்டு – மூன்று கமராக்களை உபயோகித்தும் நாடகக் காட்சிகள் படமாக்கப்படுவதுண்டு. ஆனால், இலங்கையில் தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரிக்கும் போது ஓரளவு செலவைக் குறைத்துத் தயாரித்தால் விளம்பரதாரர்களைப் பெற்றுக் கொள்ள முடியும். பிரதி எழுதுபவர்கள் இவற்றை மனதில் வைத்துக் கொண்டால்தான் நாடகக் கதையின் சம்பவங்களைப் படமாக்குவதில் ஏற்படும் செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

## தொலைக்காட்சி நாடகப் பிரதி

தொலைக்காட்சி நாடகங்களை எழுதுபவர்கள் முதலில் நல்ல கதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். நாடகத்திற்குரிய கதையைத் தெரிந்தெடுத்தபின் அநேகமானோர் எடுத்த எடுப்பிலேயே நாடக வடிவம் கொடுத்து வசனங்களை எழுதத் தொடங்கிவிடுவார்கள். அது பிழையான முறையாகும். முடியுமானால் நாடகத் தயாரிப்பாளருடனோ அல்லது நெறியாளருடனோ நாடகக் கதையின் தன்மைகளை, கதாபாத்திரங்களின் உணர்வுகளை கலந்துரையாடித் திருத்தங்களைச் செய்த பின்னரே நாடகத்தை எழுதத் தொடங்க வேண்டும். நெறியாளரை நேரடியாகச் சந்திக்க முடியாதவர்கள் தனியாகவோ குழுக்களாகவோ சேர்ந்து நாடகக் கதையின் நெளிவு சுளிவுகளை விமர்சித்து விவாதித்த பின்னரே திருத்தங்களுடன் நாடகத்திற்கான வசனங்களை எழுதத்தொடங்கவேண்டும். சிறந்த நெறியாளர்கள் தாங்கள் தெரிவு செய்யும் நாடகக் கதையை அக்குவேறு ஆணிவேறாக விமர்சனம் செய்த பின்னரே நாடகப் பிரதியை எழுத அனுமதிப்பார்கள். நாடகப் பிரதி எழுதப்பட்ட பின்னரும் மீண்டும் விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டவற்றை கருத்திற்கொண்டு அதன் பின்னரே முழுமையான தொலைக்காட்சி நாடகப் பிரதி தயாரிக்கப்படுகின்றது.

நாடகத்திற்கான கதையை விமர்சனத்திற்கு விட முன்னர் காட்சிகளாகப் பிரித்து, பின்னர் அங்கங்களாகப் பிரித்து அதன் பின்னரே நெறியாளருடன் அல்லது கதை விமர்சனக் குழுவுடன் கலந்தாலோசிக்க வேண்டும். தொலைக்காட்சி நாடகங்கள் பெருந்தொகைப் பணத்தை செலவு செய்து தயாரிக்கப்படுவதால் நாடகத்தைத் தயாரிப்பதற்கு முன்னரே விமர்சனக் கண்ணோட்டத்தோடு பார்த்து அதன் குறைபாடுகளைத் தெரிந்து கொள்வதால் ஏற்படப்போகும் பெரும் செலவுகளையும், நாடகம் எழுதுவதற்கு ஏற்படும் நேர விரயத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம். தொலைக்காட்சி நாடகப் பிரதியை எழுதும்போது சில எழுத்தாளர்கள் கமரா எந்தக் கோணத்தில் வைக்கப்பட வேண்டும் என்றும், கமரா எப்படி படத்தைப் பிடிக்க வேண்டும் என்பதையும் மட்டுமே தங்களுடைய பிரதிகளில் எழுதியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இது ஒரு நெறியாளர் செய்ய வேண்டிய கடமையாகும். நாடகப்பிரதி எழுதுபவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையின்படி கதாபாத்திரங்களின் உணர்வுகளையும் கதபாத்திரங்களின் நடமாட்டங்களையுமே எழுதவேண்டும். ஒட்டுமொத்தமாக கதாசிரியரின் கற்பனையில் கதாபாத்திரங்கள் எப்படி நடமாடுகின்றன என்பதை எழுதிக் கொடுத்தால் அது நாடகம் வெற்றியாக அமைவதற்கு ஊன்றுகோலாக இருக்கும். அந்தப்பிரதியை அடிப்படையாக வைத்து நெறியாளர் படப்பிடிப்புக் கோணங்களையும் படம்பிடிக்க வேண்டிய அளவுகளையும் தீர்மானித்து அதற்கான பிரதியைத் தயாரித்துக் கொள்வார். தொலைக்காட்சி நாடகம் ஒரு தனிப்பட்ட மனிதனின் வெற்றியல்ல. ஒரு குழுவின் வெற்றியாகும். தொலைக்காட்சி நாடகப் பிரதி எழுதும்போது பிரதியின் முன்னரைவாசி பக்கத்தில் கதாபாத்திரங்களின் நடவடிக்கைகளையும், நடிப்புக்குரிய விளக்கங்களையும், பிரதியின் மறுபகுதியில் கதாபாத்திரங்கள் பேசவேண்டிய வசனங்களையும், எழுதவேண்டும். நடிகர்களுக்கு கூடியளவு நடிப்பதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும். நடிகர்கள் நடிப்பதற்கு வசதியாக வசனங்கள் குறைக்கப்பட வேண்டும். நாடகத்தின் முழுக்கதையையும் கதாபாத்திரங்கள் வசனங்கள் மூலம் வெளிப்படுத்தாமல் சம்பவங்கள் மூலமும், காட்சி அமைப்பு மூலமும் வெளிப்படுத்துவதற்கு மூலகாரணமாக இருப்பது கதாசிரியரின் கற்பனையாகும். இதற்கு நாம் முன்னர் கூறியது போன்று கதை காட்சிகளாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்ட பின்னர் அதை வைத்துக்கொண்டு நாடக வசனங்களை எழுதினால் நல்ல பல நாடகங்களை உருவாக்க முடியும். தரமான தொலைக்காட்சி நாடகப்பிரதிகளைப் பலரும் எழுத முன்வந்தால் கிழமைக்கொரு தொலைக்காட்சி நாடகத்தைத் தயாரிப்பது இலகுவாகும். வெளிக்களத் தயாரிப்பாக இல்லாமல் கலையகத்திலாவது பரீட்சார்த்த தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

**பிரதித் தயாரிப்புக்கு உதாரணமாக "திருப்பங்கள்" என்ற நாடகப் பிரதி எவ்வாறு எழுதப்பட்டது என்பதை இங்கு தருகிறேன்.**

"திருப்பங்கள்" நாடகத்தின் மூலக்கதையை நானே தயார் செய்து வைத்திருந்தேன்.

பத்மநாதன் கொழும்பில் சாதாரண உத்தியோகம் பார்க்கும் ஒருவர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். ஒன்று ஆண், மற்றையது பெண். கொழும்பில் ஒரு அறையுடன் கூடிய பகுதியை வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வருகிறார். பத்மநாதனுடைய உறவினர் பலர் நாட்டுப் பிரச்சினை காரணமாக ஏஜன்சி மூலம் வெளிநாடு செல்கின்றனர். கனகசபை யாழ்ப்பாணத்திலிருந்து தன்னுடைய மகனுடன் கொழும்புக்கு வருகிறார். பத்மநாதனின் உதவியுடன் அவருடைய மகன் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகிறான். பத்மநாதனுடைய பிள்ளைகள் இருவரும் உறவுப் பிள்ளையின் பிறந்த தினக் கொண்டாட்டத்திற்குச் சென்று திரும்பி வருகிறார்கள். தாங்கள் சென்ற வீட்டில் இருப்பவர்களுடைய பகட்டான வாழ்க்கையைப்பற்றிப் பேசி, தாங்களும் பணக்காரர்களாக வர வேண்டும் என்ற விருப்பத்தை பெற்றோருக்குத் தெரிவிக்கின்றனர். பத்மநாதன் வெளிநாடு செல்லத் தீர்மானிக்கிறார். வெளிநாடு சென்ற பத்மநாதன், மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கிறார். அவர்களுடைய வீட்டு நிலைமையும் வாழ்க்கை முறையும் மாறுகிறது. பத்மநாதனுடைய மனைவி தாலி உட்பட நகைகள் அனைத்தும் வாங்கிப் போடுகிறாள். கடுமையான உழைப்பின் காரணமாக திடீரென சுகவீனமுற்ற பத்மநாதன் வெளிநாட்டில் காலமாகிறார். அவர்களுடைய வாழ்க்கை தடுமாறி நிற்கிறது. பணந்தான் வாழ்க்கையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாடகத்தின் மூலக்கதையை நானும் திரு.கே.எஸ். பாலச்சந்திரனும் கலந்து பேசினோம். பின்னர் காட்சிகளாகப் பிரித்தோம்.

முதலாம் காட்சி: அந்நியோன்னியமான சாதாரண குடும்பம் மகன் தன்னுடைய தேவையை நிறைவேற்றக் கடிதம் எழுதி தபால் பெட்டியில் போட்டு விடுகிறான். கடிதம் வாசிக்கப்படுகிறது.

காட்சி இரண்டு: யாழ்ப்பாணத்திலிருந்து கனகசபையும் மகனும் கொழும்பு வருகிறார்கள்.

காட்சி மூன்று: கனகசபையும் மகனும் பத்மநாதனின் வீட்டிற்கு வரல். கனகசபை தங்களுடைய உண்மையான நிலையைக் கூறாமல் மறைத்தல். அத்தோடு தன்னுடைய மகனை அனுப்புவதற்கு உதவி செய்யும்படி கேட்டல். பத்மநாதனும் இணங்கல்.

காட்சி நான்கு: விமானம் போகும் இசையுடன் காட்சியை மாற்றி, விமான நிலையத்தில் இருந்து திரும்பி வந்த பத்மநாதன் மனைவியுடன் உரையாடல்.

காட்சி ஐந்து: பிள்ளைகள் இருவரும் பிறந்த தினக் கொண்டாட்டத்திற்குச் சென்று திரும்பிவரல். கொண்டாட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை விபரித்தல். பத்மநாதனையும் வெளிநாடு சென்று உழைக்கும்படி கூறுதல்.

காட்சி ஆறு: கணவனும் மனைவியும் கலந்துரையாடல். கணவன் வெளிநாடு செல்லத் தீர்மானித்தல்.

காட்சி ஏழு: கணவன் வெளிநாடு சென்று உழைப்பதைக் காட்டுவதற்காக அவர்களுடைய வீட்டின் நிலை மாற்றப்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கை முறையிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மனைவி தாலிக்கொடி செய்து போடல்.

காட்சி எட்டு: பிள்ளைகள் நண்பர்களுடன் வெளியே சென்று திரும்பல்.

காட்சி ஒன்பது: வீட்டுக்குள் வருகிறார்கள். கதவு திறந்திருக்கிறது. தாயைத் தேடி போகிறார்கள். படுக்கையறையுள் தாய் மிகவும் கவலையுடன் இருக்கிறாள். பிள்ளைகள் விசாரிக்கிறார்கள். பத்மநாதன் வெளிநாட்டில் காலமானதைத் தெரிவிக்கிறாள்.

காட்சி பத்து: பணத்தாசையினால் வந்த விபரீதத்தைக் காட்டுவதற்குக் காட்சிகள் பின்னோக்கிக் காட்டப்படுகின்றன.

காட்சிகளாகப் பிரித்து எழுதி முடிப்பதற்கு எனக்கும் பாலச்சந்திரனுக்கும் சுமார் நான்கு மணித்தியாலங்கள் சென்றன. இரவு பத்து மணிக்கு இந்த விபரங்களுடன் வீடு சென்ற பாலச்சந்திரன் அடுத்த நாள் காலை எட்டரை மணிக்கு என்னிடம் தொலைக்காட்சி நாடகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதியைக் கையளித்தார். மிகவும் இலகுவாகப் பிரதியை எழுத முடிந்தது என்று அவர் தெரிவித்தார்.

பின்னர் அந்தப் பிரதியில் சில மாற்றங்களைச் செய்து பிரதிகள் தயாரித்தோம். அந்த நாடகப் பிரதியின் முதல் காட்சி நாடகப் பிரதிகளை எழுத முன்வருவோருக்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

## "திருப்பங்கள்" தொலைக்காட்சி நாடகம்

### காட்சி 1

ஒரு சாதாரண நடுத்தர வீட்டின் முன் அறை. முன்மேசையில் மகள் உமா படித்துக் கொண் டிருக்கிறாள்.மகன் சேகர் ஹோல் கதிரை இருந்து அக்கறையாக வாசித்துக் கொண்டிருக்கிறான். திடீரென அவன் முகம் நிமிர்கிறது. யாரையோ கண்டுவிட்ட சந்தோஷத் தில் முகம் மலர்கிறது. எழுந்து ஓடுகிறான்.

MLS/LS

சேக : அப்பா....

வீட்டு வாசலில் பத்மநாதன் சேகரை அணைத்து முத்தமிடுகிறார். மகள் பொய்க்கோபத்துடன் எழுந்து நிற்கிறாள் அவளைநோக்கி பத்மநாதன் கையை நீட்டுகிறார். உமா சென்றதும் அணைத்து உச்சியில் முத்தம் இடுகிறார்.

M S

சேக : அவவுக்குமா..அப்ப எனக்கு இன்னுமொன்று

பத்மநாதன் சிரித்தபடியே மகனை மீண்டும் முத்தமிட்ட வண்ணம் கதிரையில் அமர்கிறார். மகள் நிலத்தில் இருந்து தகப்பனின் சப்பாத்து லேஸ்களைக் அவிழ்த்து விடுகிறாள். மனைவி சீதா குசினியிலிருந்து வெளியே வந்து கதிரையில் அமர்ந்த வண்ணம்:

L S / MS / CU

சீதா: வந்திட்டீங்களா.. ரீ. போட்டுக் கொண்டு வரட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| M S | பத்ம: | வேண்டாம். பச்சைத்தண்ணி..... செம்புக்கை கொண்டு வாம்மா... |
| | உமா: | நான் கொண்டு வாறன் அப்பா |
| உமா எழுந்து உள்ளே போகிறாள் LS | பத்ம: | கடிதம் ஏதாவது வந்ததே? |
| இல்லையென்று தலையசைக்கிறாள் சீதா MCU / CU | சேக: | வடிவாகப் பாத்தனீங்களே அம்மா. கடிதம் ஒண்டு வந்திருக்கவேணும். |
| | சீதா: | நான் பார்த்தனான். இருக்கயில்லை. |
| | சேக: | கட்டாயம் இருக்கவேணும். |
| மகள் தண்ணீர் செம்பைக் கொண்டு வந்து தகப்பனிடம் கொடுத்துவிட்டு | | |
| MCU / CU | உமா: | லெற்றர் பொக்ஸுக்குள்ளை நான் பார்த்துக்கொண்டு வாறன். |
| மகன் மெதுவாக எழுந்து அறைக்குள் செல்கிறான். சீதா அதைக் கவனித்துவிட்டு பத்மநாதனுக்கு கண்ஜாடை காட்டுகிறாள். பத்மநாதன் கூப்பிட முயல, மகள் வருகிறாள். | | |
| CU / TWO SHOT | உமா: | ஓமப்பா உங்களுக்குத்தான் ஒரு லெற்றர் வந்திருக்குது. |
| | சீதா: | நான் வடிவாகப் பார்த்தனான்.. |
| தகப்பன் கடிதத்தை வாங்கி உடைத்தவர் அப்படியே சிறிது திகைத்து நின்று பிறகு மெதுவாக சிரிக்கிறார். மகள் தகப்பனின் முதுகுக்கு மேலாக எட்டிப் பார்க்கிறாள். | | |
| CU/ TWO SHOT | உமா: | தம்பியின்ரை படம்.. தம்பி தான் எழுதியிருக்கிறான். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியிடம் கடிதத்தைக்
காட்டுகிறான். கடிதம் குளோசப்பில் காட்டப்படுகிறது.
மகனின் படத்துடன் கடிதம்
எழுதப்பட்டிருக்கிறது. பத்மநாதன்
வாசிக்கிறார்.

CU

அன்பின் அப்பா
நான் உங்களிடம் பலமுறை கேட்டும்
இன்னும் நீங்கள் எனக்குக் கிரிக்கெட் பற்
வாங்கித் தரவில்லை. அதனால் தயவு
செய்யு கூடிய விரைவில்
வாங்கித் தரவும்.

(சீதா சிரித்து)

CU | சீதா: | அப்பாவை வளைக்க அவன் எடுத்த மூளையைப் பாத்தீங்களே...

பத்மநாதனும் மெதுவாகச்
சிரிக்கிறார். மெதுவாகச்
சப்பாத்தைக் கால்களில் மீண்டும்
போடத் தொடங்குகிறார்.

MS/CU | சீதா: | துலைக்கோ

CU | பத்ம: | பம்பலப்பிட்டிக் கடை ஒண்டிலை கண்டனான்..போய் வாங்கிக்கொண்டு வாறன்.

MCU | சீதா: | இப்ப போகப் போறிங்களே.. காசிருக்கே

பத்மநாதன் காசு இருப்பதாகத்
தலையாட்டுகிறார். / CU

CU | சீதா: | நாளைக்கு ஒப்பீஸால வரயிக்கை வேண்டிக்கொண்டு வாங்கோவன்.

மகன் அறைக் கதவின் ஊடாக
எட்டிப் பார்த்து
LS | சேக: | ஒமப்பா நாளைக்கு வேண்டிக் கொண்டு வந்தால் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலைக்கேட்டு பத்மநாதன்
சீதா, மகள் மூவரும் திரும்ப
அசட்டுச் சிரிப்புடன் மகன்
வெளியே வருகிறான்.

| | | |
|---|---|---|
| MCU | *சீதா:* | நல்லாய்ச் செல்லம் குடுங்கோ |
| CU | பத்ம: | அண்டைக்கு ஒரு பிரண்ட் சொன்னான். ஆசைக்கு ஒண்டும் ஆஸ்திக்கு ஒண்டுமாய் பெத்து வைச்சிருக்கிறீங்கள் எண்டு. நான் சொன்னன் என்னட்டை ஆஸ்தி இல்லை. இரண்டையும் ஆசைக்காகத்தான் பெத்து வைச்சிருக்கிறன் எண்டு... |

மகன் வந்து தாயின் அருகில் இருக்கிறான்.
பத்மநாதனின் பக்கம் சீதா முகம் திருப்ப,
சேகர் கையால் மற்றப் பக்கம்
திருப்புகிறான். அவள் அவன் கையை
மெதுவாகத் தட்டுகிறாள். பத்மநாதன்
மகளைப் பார்த்து

| | | |
|---|---|---|
| MCU | பத்ம: | பிள்ளைக்கு ஒண்டும் வேண்டாமே |

அவள் ஆம் என்று தலையசைக்கிறாள்

சேகர் எழுந்து

| | | |
|---|---|---|
| MCU | சேக: | உனக்கு என்னக்கா வேணும். |
| CU | உமா: | சங்கர் சித்தப்பாவின்ரை அர்ஜுன். அவற்றை பேர்த்டேக்கு கொண்டு போறதுக்கு பிரசென்ட் வாங்க வேணுமெல்லை அப்பா. |
| CU | பத்ம: | சனிக்கிழமை என்ன... அதுக்க முதல்லை வேண்டுவம். |
| CU | *சீதா:* | என்ன வேண்டுறது காசாய் ஒரு 100/= ரூபாவை வைச்சுக் குடுக்கலாம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| CU | பத்ம: | அவங்களிட்டை இல்லாத காசே. ஏதாவது சின்னனாய் 100/= ரூபாய்க் குள்ளே வாங்கிக் குடுப்பம். |
| TWO SHOT | சேக: | நான் எந்த உடுப்பைப் போட்டுக் கொண்டு போறது. |
| CU | உமா: | அந்த சுப்பர்மேன் படம் போட்ட நீல ரீ சேர்ட்டையும் கடைசியாத் தைச்ச காற்சட்டையையும் நீர் போட்டுக்கொண்டுவாரும். |
| CU | சேக: | அந்த ரீ சேர்ட் சித்தப்பா தான் எடுத்துத் தந்தவர். |
| MCU | சீதா: | அதிலை என்னப்பு... அவை எடுத்துத் தந்தால் அவையின்ரை வீட்டை போட்டுக்கொண்டு போகக்கூடாதே... |

மகன் "மாட்டான்" என தலை அசைக்கிறான். CU

–

| | | |
|---|---|---|
| MCU | பத்ம: | ஏன் |
| CU | சேக: | அவை நினைப்பினம் தாங்கள் எடுத்துத் தந்ததுதான் என்னட்டை இருக்கிற பெஸ்ட் உடுப்பெண்டு. அப்பா எனக்கு வேண்டித் தாறதில்லை எண்டு நினைப்பினம். |
| CU | சீதா: | அப்ப... |
| TWO SHOT | சேக: | அந்த ரீ சேர்ட் போடுறதெண்டால் நான் போகமாட்டன். |
| CU | உமா: | அப்பிடியெண்டால் அப்பா வேண்டித் தந்த சாம்பல் நிற சேட்டைப் போட்டுக்கொண்டு வாவன். |

மகன் ஓம் என்று தலையசைக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன் கண்கலங்குகிறார்... மெதுவாக மறுபக்கம் திரும்பி கண்ணைத்துடைத்துக் கொண்டு இருக்கிறான். CU

MS

உமா: அப்பா

பத்ம: என்ன பிள்ளை

உமா: நீங்கள் தானே சித்தப்பாவை
முதல் முதல்லை சவூதிக்கு
அனுப்பினனீங்கள்..

CU

பத்ம: நான் அனுப்ப இல்லை. போறதுக்கு
உதவி செய்துவிட்டனான்.

CU

சீதா: ஊரிலை இருந்து முன்னை
பின்னை கொழும்பு பாத்திராத
எத்தனையோ பேர் இங்கை
வந்து நிண்டு வெளிநாடு
போயிருக்கினம்.

CU

உமா: அவை எல்லாரும் இப்ப நல்ல
காசுக்காரர் ஆயிட்டினம்

தகப்பன் சிரிக்கிறார்.
சிரித்துக்கொண்டே:

MCU

பத்ம: அதுக்கென்ன பிள்ளை எங்கடை
ஆக்கள் நல்லாய் இருந்தால் நல்லது
தானே. அதுசரி.. பத்து லட்சம்
தாறம் அப்பாவைத் தாருங்கோ
எண்டால் நீ என்ன செய்வாய்?
காசோ நானோ உனக்கு வேணும்...

மகள் தகப்பனை நோக்கிக் கையைக்காட்டுகிறாள். பத்மநாதன் சீதாவைப் பார்த்துச் சிரிக்கிறார்.

CU

சீதா: இந்த வயசிலை உங்களை ஆர்
10 இலட்சம் தந்து
வேண்டப் போகினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பன் மகனைப் பார்த்து

CU    பத்ம:    தம்பி உனக்கு

மகன் சிறிது தாமதிக்கிறான்.
சீதா சிரிக்கிறாள்.
தாமதத்தின் பின் மகன்
சொல்கிறான்.

CU    சேக:    எனக்கு அப்பாவும் வேணும் காகம் வேணும்.

MCU    சீதா:    நல்ல மூளையடா உனக்கு

எல்லாரும் சிரிக்கிறார்கள். ஒளி குறைந்து
காட்சி மறைகிறது.

## தொலைக்காட்சி நாடக நடிப்பு

சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களைப் போல் ஏன் உங்களால் தமிழ் நாடகங்களைத் தயாரிக்க முடியவில்லை என்று பலரும் கேட்பதை நான் கேட்டிருக்கின்றேன். எமது நாடக வடிவங்களுக்கு ஒரு வரலாறு உண்டு. அது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும். தெருக்கூத்து, அண்ணாவி மரபு நாடகம், நாட்டுக்கூத்து, ராசா–ராணி நாடகங்கள், யதார்த்தமற்ற வசனங்கள் நிறைந்த மேடை நாடகங்கள், தற்போதையது போன்று யதார்த்தமான வானொலி – மேடை நாடகங்கள் என எமது நாடகங்களை வகைப்படுத்தலாம்.

இந்தப் படிமுறைகளிலேயே நடிகர்கள் நடிப்புப் பாணியைப் பின்பற்றி வந்துள்ளார்கள். அதனால் அனேகருடைய நடிப்புப் பாணி இவற்றுள் ஒன்றைச் சார்ந்ததாகவே அமைந்திருக்கின்றது.அநேகமான நடிகர்கள் வானொலி – மேடை நடிகர்களாக இருந்து வந்ததினால் வசனங்களை மனனம் செய்துவிட்டு இடைவெளியேயில்லாமல் அப்படியே ஒப்படைக்கும் நடிகர்களாக இருக்கின்றார்கள் என்பதை இதுவரை வெளிவந்த தொலைக்காட்சி நாடகங்களில் கவனிக்கக்கூடியதாக இருக்கின்றது. வசனமேயில்லாமல் முகபாவத்தை மட்டும் கொண்ட கதாபாத்திரங்கள் இதுவரை தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களில் வந்ததே கிடையாது. வசனம் பேசி முடிந்ததும் அதற்குப் பதில்கூறும் அடுத்த கதாபாத்திரம் எந்தவித முகபாவமும் இன்றி பாடமாக்கிய வசனத்தை ஒப்பித்தால் அதுவொரு வானொலி நாடக நடிப்பேயொழிய தொலைக்காட்சி நாடக நடிப்பு எனக் கூற முடியாது.

தொலைக்காட்சி நாடக நடிப்புக்காகக் கடினப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். நடிகர்கள் அனைவரும் மேடை, வானொலி நாடக நடிப்புப் பாணியைப் பின்பற்றாமல் யதார்த்தமாக நடிக்கப் பழக வேண்டும். இதற்கு தொகையான தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். வெளிக்கள நாடகங்களாக இருக்காமல் கலையகத்திலே பரீட்சார்த்த தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்பட்டு நடிகர்கள் முகபாவத்தின் மூலம் நடிப்பதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

# தொலைக்காட்சியில் இசை நிகழ்ச்சிகள்

ரூபவாஹினியில் பலவிதமான இசை நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தவில் நாதஸ்வரக் கச்சேரிகள், கர்நாடக இசைக் கச்சேரிகள், பரத நாட்டிய நிகழ்ச்சிகள், நாட்டிய நாடகங்கள் வாத்திய விருந்து போன்றன இசை நிகழ்ச்சிகளாக ஒளிபரப்பப்பட்டுள்ளன. கலையரங்கம், ராக பாவம், உதய கீதம், ஒளித்தென்றல் போன்ற தலைப்புக்களில் இசை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. ஒளிபரப்பாகும் இசை நிகழ்ச்சிகள் யாவும், பெரும்பான்மையான ரசிகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனவா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

## கர்நாடக இசையும் பரதநாட்டியமும்

அதி உயர்ந்த தரமுள்ள கர்நாடக சங்கீதக் கச்சேரியோ, பரத நாட்டிய நிகழ்ச்சியோ பெரும்பான்மையான தொலைக்காட்சி ரசிகர்களால் ரசிக்க முடிவதில்லை. அதனால் அந்தக் கலைகள் யாவும் தரமற்றவை என்பது அர்த்தமல்ல. அதற்காக ரசிகர்கள் தரமற்றவர்கள் என்பதும் சரியல்ல. இந்தக் கலைகள் யாவும் தெய்வீகக் கலைகள். அவற்றை ரசிப்பதற்குப் பொறுமை மிகவும் அவசியம். அத்தோடு கர்நாடக இசை ஞானம் உள்ளவர்களால் மட்டுமே தொலைக்காட்சியில் இந்த நிகழ்ச்சிகளை ரசித்துப் பார்க்க முடியும். தொலைக்காட்சி அசையும் காட்சிகளைக் கொண்ட ஒரு ஊடகம். அதன் ரசிகர்கள் பல தரப்பட்டவர்கள். ஆகவே குறிப்பிட்ட ஒரு சிலரால் மட்டும் ரசிக்கக்கூடிய கர்நாடக இசைக் கச்சேரிகளையோ, பரத நாட்டிய நிகழ்ச்சிகளையோ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாக ஒளிபரப்பினால் பெரும்பான்மையான ரசிகர்களை நாம் இழந்தவர்களாகி விடுவோம்.

இந்த நிகழ்ச்சிகளை நன்றாகத் திட்டமிட்டு, குறுகிய நேர நிகழ்ச்சிகளாக ஒளிபரப்பினால் தொலைக்காட்சி ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஒரே வகையான பாடல்களையும், ஒரே மாதிரியான பாடல்களுக்கு நாட்டியங்களை அமைத்தும் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவது ரசிப்புத் தன்மையை குறைப்பதற்கான காரணங்களாகும். காலத்துக்கு ஏற்றவாறு கர்நாடக இசைக்கச்சேரிகளும், புதிய கருக்களைக் கொண்ட பரத நாட்டிய நாடக நிகழ்ச்சிகளும் அமைக்கப்படுமானால் கர்நாடக இசைக்கச்சேரிகளும் பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் பெரும் பான்மையான ரசிகர்களை கவரும். இது கர்நாடக இசையுலகில், பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் ஒரு புதிய யுகத்தைத் தொலைக்காட்சியில் ஏற்படுத்தும்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் இசை நிகழ்ச்சிகளை அருணா செல்லத்துரை, பி. விக்கினேஸ்வரன், எஸ். விஸ்வநாதன் போன்றோர் தயாரித்துள்ளனர். பின்னர் ஆர். ரவீந்திரன், எம்.என்.ராஜா, எம். கேசவன் மற்றும் எம். வரதராஜன் போன்றோர் இசை நிகழ்ச்சிகளை தயாரித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிசை

ரூபவாஹினியில் முதல் மெல்லிசை நிகழ்ச்சி 18.11.1981ல் என்னால் தயாரிக்கப்பட்ட விபரத்தைக் கூறியிருந்தேன். ஆரம்ப காலத்தில் இலங்கையில் இருக்கும் உள்நாட்டுக் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பல மெல்லிசைப் பாடல்கள், கலையரங்கம் நிகழ்ச்சியின் ஊடாகத் தயாரித்து ஒளிபரப்பப்பட்டன.

புதிய மெல்லிசைக் கலைஞர்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் உதய கீதம் எனும் நிகழ்ச்சி பி.விக்னேஸ்வரன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட சில ஆண்டுகளின் பின்னர் இந்த நிகழ்ச்சித் தொகுப்பாளராக பல ஆண்டுகள் இருந்தேன். இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளராக இருந்ததின் வெளிப்பாடு தான் 'ஒளித்தென்றல்' மெல்லிசை நிகழ்ச்சியை ஆரம்பிக்கத் தூண்டியது. வழக்கமாக மெல்லிசைக் கலைஞர்களை உதய கீதம் நிகழ்ச்சியில் அறிமுகஞ் செய்து விட்டு நிறுத்திக் கொள்வது வழக்கம். அந்தக் கலைஞர்களின் திறமையை மேலும் வளர்த்துக் கொள்வதற்கும் அவர்களுக்குத் தொடர்ச்சியாகச் சந்தர்ப்பம் வழங்குவதற்குமாகவே "ஒளித்தென்றல்" மெல்லிசை நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

"உதய கீதம் நிகழ்ச்சியில் பாடியவர்களுக்குத் தொடர்ச்சியாக சந்தர்ப்பங்களை வழங்குங்கள்" என்று நான் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டே வந்தது. அக் காலத்தில் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட "ஒலி ஒளி" நிகழ்ச்சி மிகவும் பிரபல்யம் வாய்ந்த நிகழ்ச்சியாக ஒளிபரப்பப்பட்டு வந்தது. இதனால் உள்நாட்டு மெல்லிசை நிகழ்ச்சியைத் தொடராகத் தயாரிக்கத் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவினர் தயக்கம் காட்டினர்.

1989ம் ஆண்டின் முற்பகுதியில் நிர்வாகத் திறமை வாய்ந்த திரு.குமார் அபேயசிங்க அவர்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தமிழ் நிகழ்ச்சிகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார். என்னையும் அந்தக் கூட்டத்திற்கு அழைத்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பமாகியது. தமிழ் நிகழ்ச்சிகள்பற்றி எல்லோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தேன். அக் காலத்தில் மிகவும் பிரபல்யமாக இருந்த "ஒலி ஒளி" நிகழ்ச்சி பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தேன். தலைவர் என்னைப் பார்த்தார். நான் அதற்கான காரணங்களைத் தெரிவித்தேன்.

ஒலி ஒளி நிகழ்ச்சியை ஒளிபரப்புவதால் எமது கலைஞர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது. அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுவதால் ரூபவாஹினியின் மீது மெல்லிசைக் கலைஞர்கள் வெறுப்புக் கொள்ளவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று கூறினேன். எனது கருத்தை தலைவர் ஏற்றுக் கொண்டார். ஒலி ஒளி போன்ற நிகழ்ச்சியைத் தயாரிக்க முடியுமா என தலைவர் குமார் அபயசிங்க கேட்டார். தயாரிக்க முடியும் எனத் தெரிவித்தேன். இவ்வேளையில் மெல்லிசை நிகழ்ச்சியைத் தயாரிக்க முடியாமைக்கு பலவித காரணங்களை தமிழ் நிகழ்ச்சிப் பிரிவினர் தெரிவித்தனர். கைவசம் இருக்கும் வளங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு மெல்லிசை நிகழ்ச்சி தயாரிக்க முடியும் என மீண்டும் தெரிவித்தேன். உடனடியாக மெல்லிசை நிகழ்ச்சித் தயாரிப்பை ஆரம்பிக்கும்படி குமார் அபேசிங்க அவர்கள் கட்டளையிட்டார்.

மெல்லிசை நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்தேன். திரு.எம்.எஸ். செல்வராஜா அவர்களை இசையமைப்பதற்காகத் தெரிவு செய்தேன். உதயகீதம் நிகழ்ச்சியில் பாடிய பாடகர்களை இசைப் பரிசோதனைக்கு அழைத்தோம். அதன் மூலம் ஒளித்தென்றல் நிகழ்ச்சிக்கான பாடகர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

எம்.எஸ். செல்வராஜா அவர்களைக் கொண்டு நூறுபாடல்களை இசையமைத்து ஒளிபரப்ப வேண்டும் எனத் தீர்மானித்தேன். அதன் பின்னர் மற்ற இசையமைப்பாளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப் போவதாகவும் தெரிவித்தேன். பிரபல்யமான பாடகர்கள் கூட இந்த நிகழ்ச்சியில் பாடுவதற்காக இசைப் பரிசோதனைக்குச் சமூகம் கொடுத்ததையும் எம்மால் மறக்க முடியாது. ஒளித்தென்றல் நிகழ்ச்சியில் பங்குபற்றக் கிடைத்தமை தமக்கு கிடைத்த பெரும் பாக்கியம் என்று தெரிவித்தமையை இன்றும் நினைவுகூர்ந்து பார்க்கிறேன். தொடர்ச்சியாக 56 பாடல்கள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டன.



இசையமைப்பாளர் எம். எஸ். செல்வராஜா
ஒளித்தென்றல் நிகழ்ச்சிக்கான பாடலை இசையமைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இசைக் கருவிகளுடன் ஒத்திகை




பாடல் ஒலிப்பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னுடைய மாபெரும் இசை நிகழ்ச்சி எப்போது ஆரம்பிக்கப்படப் போகிறது" என தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் என்னைக் கேட்டதை என்னால் மறக்க முடியாது. நிகழ்ச்சிக்கு உதவித் தயாரிப்பாளராக ஆர். ரவீந்திரன் நியமிக்கப்பட்டார். முதல்நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்யப்பட்டு 28.06.1989ல் ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சி பற்றி சிந்தாமணிப் பத்திரிகையில் வெளிவந்த விமர்சனம்.



"அந்தி வானம் சிந்த பாடும்" மொறின் ஜெனத்தையே இங்கு காண்கிறீர்கள்!

"வான் வெளியில் ஊர்வலம்" போகும் நீதிராஜசர்மா பாடும் காட்சி காணீர்!

## அருணாவின் தயாரிப்பு அருமையான ஒளிபரப்பு

கடந்த புதன்கிழமை (28-6-89) உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிக்கும் "ஒளித்தென்றல்" என்ற மற்றுமொரு புதிய இசை நிகழ்ச்சி ரூபவாஹினியில் ஒளிபரப்பாகி டிவி ரசிகர்களைக் களிப்பிலாழ்த்தியது!

அருணா செல்லத்துரையின் முதல் தயாரிப்பே முதல் தரமானதாக இருந்தது என்று பாராட்டத்தக்க விதத்தில் இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது! அவருக்கு எமது பாராட்டுக்கள்!

எம். எஸ். செல்வராஜாவின் இசையமைப்பிலான ஐந்து பாடல்களும் செவிக்கினிமையாகின!

"அன்னை பூமி இலங்கை என்று சொன்ன போதிலே — இன்பகீதம் ஒன்று வந்த தன்னுள் நெஞ்சிலே" என்ற பாடலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது!

டி. சுந்தரலிங்கத்தின் அர்த்தமுள்ள இயற்றலிலே அருமையாகப் பாடினார் கே. மஹிந்தகுமார்!

சஞ்சீவி சிவகுமாரின் பாடலை டி. எஸ். முருகேஷ் என்பவர் "விடிந்தெழு இளைஞனே விடியட்டும் இரவுகள் — ஒழித்திடு மடமையை ஓங்கட்டும் உறவுகள்" எனப் பாடி இரண்டாவது பாடல் மூலமாகவே இசை நிகழ்ச்சியை ஆர்வத்தோடு ரசிக்கும் ஆவலைத் தூண்டினார்!

இப்பாடல் அன்றைய நிகழ்ச்சிப் பார்வையாளர்களை நிச்சயம் கவர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

"அந்தி வானம் சிந்த பாடும்— எந்தன் கண்கள் உன்னைத்தேடும்" என்ற கோவிலூரில் செல்வராஜின் பாடலை மொறின் ஜெனற்றம் —

"இளங்காற்று வீசும் இனிய மாலை நேரம்" எனும் எஸ். லலிதாவின் பாடலை சிபெட்டா சோஸாவும் இனிமையாகப் பண்பாடிய பெண் குரலுக்குரியவரானார்கள்!

கடைசியாக இசை நிகழ்ச்சியில் ஒரு விசை எதிர்பார்ப்பை ஏற்படுத்திய நீதிராஜசர்மா - தானே இயற்றிய "வான் வெளியில் ஊர்வலமோ" எனும் பாடலைத் தனக்கேயுரிய பாணியில் பாடி நிகழ்ச்சியை மகிழ்ச்சிகரமாக முடித்து வைத்தார்!

மொத்தத்தில் இந்நிகழ்ச்சி தொடர்ந்து இதே மாதிரி இன்னும் சிறப்பாக அமையுமானால் ஒளித்தென்றலை எதிர்பார்க்கும் ரசிகர்கள் அருணாவின் படைப்புக்களை பார்க்க நிச்சயம் விரும்புவார்களென்றே எண்ணலாம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் புலமைப் பரிசில்பெற்று வெளிநாடு சென்ற பி.விக்னேஸ்வரனுக்குப் பதிலாக. திரு. சில்வெஸ்ரர் எம். பாலசுப்பிரமணியம் தமிழ்ப்பிரிவுக்குப் பிரதிப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நிகழ்ச்சி தொடர்ந்து ஒளிபரப்பாகியது.

ஒலி ஒளி உருவம்

RUPAVAHINI



பாட்டும்...

# துஷியின் பாடலும் குஷியான ஆடலும்

அருணா செல்லத்துரையின் தயாரிப்பிலும் எம். எஸ் செல்வராஜாவின் இசையமைப்பிலும் மாதமொருமுறை வாஹினியில் வலம் வரும் "ஒளித் தென்றல்" நிகழ்ச்சி நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி மகிழ்ச்சி அளிப்பதாகவே வளர்ச்சி அடைந்து வருவதன் முயற்சி பாராட்டத்தக்க உயர்ச்சியாகும்!

ஆர். — எம். எஸ் செல்வராஜாவின் இசையமைப்பிலான "ஒளித்தென்றல்" பாடல்கள் ஒவ்வொன்றும் சுழத்த மெல்லிசையின் நல்லிசையாகிக் கவரும் தாரணத்தால் தான் "ஒளித்தென்றல்" நிகழ்ச்சியை ஒவ்வொரு மாதமும் டிவி ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது!

கடந்த 30-11-89 வியாழக்கிழமை ஒளிபரப்பான "ஒளித்தென்றல்" நிகழ்ச்சி — செல்வி துஷிதா அரியரெட்ணராஜாவின் பாட்டும் பரதத்துடன் ஆரம்பமாகி அனைவரையும் ஆட்கொள்ளும் வகையில் அமைந்தது!

"ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலேதான் சுகம் சுகம்" என்பதற்கேற்பவே அருணா செல்லத்துரையின் இயற்றலிலான "கதிரைமலைக் காற்றே கந்தனிடம் சொல்லாயோ?" என்ற பாடலை துஷிதா பாடி குஷியுடன் ஆடிய விதமும் பிரமாதம்!

இளையதலைமுறை பொன்று கலைத்துறையில் தலைதூக்குவதை கண்டு களிப்படைகிறோம்!

இரண்டாவதாக ஏற்கனவே இலங்கை இசை ரசிகர்களுக்கு நன்கு அறிமுகமான ராணி ஜொய்ஸ்டோ இனிமையான குரலில் "வண்ண நிலவு வானில் வண்ண நிலவு" என்று பாடி அனைவரையும் கவர்ந்தார்! இதற்கான பாடலை மல்லிகா பத்மநாதன் இயற்றியிருந்தார்! ராணி - பாட்டிலும் ராணியாகவே திகழ்ந்தார்!

மூன்றாவதாக எஸ் கிரஹரி இயற்றிய முத்தமிழே முத்தமிழே உந்தன் இல்லம் நாடி வந்தேன்" என்ற பாடலை எஸ் ஜெயவிஜய சுரேஷ் —

நான்காவதாக என் சேகர் இயற்றிய "என் தோட்டப் பூவின் ரோசாவே" என்ற பாடலை சந்திரிகா அழகக்கோனும் அழகாகவும் அருமையாகவும் பாடினார்கள்!

கடைசியாகப் பாடிய நிரோராஜ சர்மா - அருணா செல்லத்துரை



பரதமும்...

இயற்றிய "எட்டி எட்டி அடி வைக்கும் எந்தன் செல்வமகளே" என்ற பாடலைப் பாடிய விதம் - பிரபல தென்னிந்தியப் பாடகர் ஜேசுதாஸையே ஞாபகப்படுத்தியது!

குரலில் மட்டுமின்றிக் கோலத்திலும் கூட ஜேசுதாஸ் போன்றே காட்சியளித்த சர்மாவின் மெல்லிசை அபாரம் போட வைத்தது!

எம் எஸ் செல்வராஜாவின் இசையமைப்பில் "ஒளித்தென்றல்" இசையுள்ளங்களை வருடியவிதம் திருப்தி தரும் வகையில் சுகமாகவே இருந்தது!

டிய நிலையும் ஏற்படுவதைது!

அறிவிப்பாளர்களின் தனித்துவமான ஆற்றல்களை வெளிப்படுத்தும் அருமையான இந்நிகழ்ச்சியில் மும்மொழி அறிவிப்பாளர்களும் தத்தமது மொழிக்கேற்ற உச்சரிப்புப் பாவங்களுடன் அறிவிக்கும் அழகே ஒரு தனி அலாதிதான்!

இந்நிகழ்ச்சியைக் கேட்கும் பொழுது வழக்கமான சேவைகளின் அறிவிப்பை விட வித்தியாசமான பாணியில் ரசிகர்களுடன் நேருக்கு நேர் அறிவிப்பாளர்கள் சந்திப்பது போன்ற பிரமை ஏற்படுகின்றது!

ராஜன் வைரவநாதனும் கிருஷ்ணா வைரவநாதனும் [illegible]



ஒளித்தென்றலின் ஒலிப்பில் ராணியின் களிப்பு!!

தயாரிப்பு: சஞ்ஜயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்வெஸ்ரர் எம். பாலசுப்பிரமணியம் ஓய்வு பெற்றுச் சென்றார். தமிழ்ப் பிரிவில் ஏற்பட்ட நிர்வாக மாற்றம் காரணமாக ஒளித்தென்றல் தயாரிப்பு கைமாற்றம் செய்யப்பட்டது. சில நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் ஒளித்தென்றல் நிகழ்ச்சி தானாகவே நின்றுவிட்டது. இது உள்நாட்டு மெல்லிசைக் கலைஞர்களுக்குப் பெரிய இழப்பாகும். அதன் பின்னர் உள்நாட்டு மெல்லிசைக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக நிகழ்ச்சிகள் எதுவும் ரூபவாஹினியில் தயாரிக்கப்பட வில்லையென்றே கூறலாம்.

இப்பொழுது தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் உள்நாட்டு மெல்லிசைக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக இசை நிகழ்ச்சிகள் தயாரிப்பதைப் பாராட்டத்தான் வேண்டும். திரு.கே.ரி. பிரசாத், திரு. இரா நீதிராஜசர்மா ஆகியோர் இந்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒளித்தென்றல் நிகழ்ச்சியைத் தயாரித்ததினால் ஏற்பட்ட அனுபவம் மெல்லிசை நிகழ்ச்சியை எவ்வாறு பிரபல்யப்படுத்தலாம் என்பதில் ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளது.

## தொலைக்காட்சி மெல்லிசை நிகழ்ச்சிக்கு முக்கியமான நான்கு அம்சங்கள்


1. தொலைக்காட்சி மெல்லிசைக்கான பாடல்கள்
2. தொலைக்காட்சிக்கான இசையமைப்பு
3. பாடலுக்கான காட்சிகள்
4. பாடகர்கள்

## தொலைக்காட்சி மெல்லிசைக்கான பிரதி

மெல்லிசைப் பாடல்கள் எழுதுவோர் எல்லோரும் யாப்பிலக்கணம் படித்தவர்களல்ல. சிலர் ஓசை நயத்திற்கு பாடல்கள் எழுதுவதும் உண்டு. எது எப்படி இருந்தாலும் பாடல், காட்சிகளின் விரிவாக்கமாகவே இருக்க வேண்டியது அவசியம். பாடலின் கருப்பொருள் ஒரு சிறுகதையைச் சுருக்கியதைப் போன்றோ, ஒரே கருப்பொருளை அடியொட்டியதாகவோ இருந்தால் தொலைக்காட்சியில் பாடல், காட்சியோடு ஒளிபரப்பாகும் போது மக்கள் மனதில் பதியக்கூடியதாக இருக்கும்.அநேகமாக மெல்லிசைப் பாடல்களை எழுதுவோர் மனிதக் காதலையே கருப் பொருளாகக் கொண்டு எழுதுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தனிமனித உணர்வுகளைப் பாடல்களாக்கும் போது பாடலாசிரியரின் உணர்வுகள் பாடலைப் பார்ப்போர் மனதிலும் விரியும் வண்ணமாகப் பாடல்வரிகள் அமைந்திருத்தல் வேண்டும். தொலைக்காட்சியில் பாடல் வரிகளோடு இணைத்துக் காட்சிகளைப் பார்ப்பார்கள். அந்தக் காட்சிகள் அவர்கள் மனதில் இலகுவாக இடம் பிடித்துக் கொள்ளும். அதனால் பாடல்களை எழுதுவோர் சில விதி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

**பாடல்களுக்கான காட்சியை முதலே தீர்மானித்துக் கொள்ளல் நல்லது. அப்படி எழுதப்பட்ட பாடல் ஒன்றைத் தருகிறேன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| காட்சிகள் | விளக்கம் | பாடல் |
| --- | --- | --- |
| ஆரம்ப இசைக்கான காட்சிகள் | | |
| | பூமியில் இருந்து செய்மதி ஏவுகலம் ஏவப்படுகிறது. | |
|  | ஏவுகலமும் செய்மதியும் பிரிக்கப்பட்டு செய்மதி ஆய்வு கூடத்தில் ஆய்வாளர்கள் மிதந்து திரிகிறார்கள் | |
| | | "விண்ணில் மனிதன் பறக்கின்றான்.<br>விந்தை பலவும் புரிகின்றான்<br>பறக்கத் தெரிந்த மனிதனுக்கு<br>இறப்பைத் தடுக்கத் தெரியவில்லை.<br>(விண்ணில்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகள் | விளக்கம் | பாடல்

இடை இசைக்கான



காட்சிகள்
செய்மதிகள்
வான்வெளியில்
பறந்து திரிகின்றன.
ஆய்வாளர்கள் வானில்
வலம் வந்து திருத்த
வேலைகள்
மேற்கொள்ளுகின்றனர்.

செய்மதி விதம் விதம்
செய்துள்ளான்
தன்மதி இழந்து
தவிக்கின்றான்

யுத்த களத்தில் குண்டுகள்
வெடித்தல். மனிதர்களின்
உயிரிழப்பு

உயிரை அணுவினால்
அழிக்கின்றான்
உயிரூட்ட முடியாமல்
நிற்கின்றான்
(விண்ணில்)

இடையிசைக்கான காட்சிகள்
யுத்த தாங்கிகள் குண்டுமாரி
பொழிகின்றன.மேலைநாட்டு
யுத்தக் கப்பல்களில் இருந்த
விமானங்கள் பறக்கின்றன.
மனிதர்கள் அங்குமிங்கும்
ஓடுகின்றார்கள். வெண்
புறாக்கள் பறக்கின்றன.

விஞ்ஞானம் வளருது
மேற்கினிலே
அஞ்ஞானம் போவது
அழிவினிலே
அமைதிக்குத் தூது
விடுவோமே
ஆண்டவன் பாதம்
பணிவோமே
(விண்ணில்......)

இசையமைப்பு : எம். எஸ். செல்வராஜா
பாடியவர் : எஸ். குலசேகரம்
நிகழ்ச்சி : ஒலித்தென்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சிகள் தீர்மானிக்கப்பட்ட பின்னர் எழுதப்பட்ட இன்னொரு பாடல்.**

| காட்சி | விளக்கம் | பாடல் |
|---|---|---|
| கடற்கரை | கடற்கரையில் சிறுவர்கள் மணல் வீடு கட்டி விளையாடுகிறார்கள். சிலர் கைகோத்து "மழை வா வெயில் போ" பாடி ஆடுகிறார்கள். கடலுக்குப்போன தனது கணவனை எதிர்பார்த்துக் கடலையே பார்த்த வண்ணம் இளம் பெண் இருக்கிறாள். அவளுடைய பார்வையில் பிள்ளைகள் மழை வா வெயில் போ என விளையாடுவது தெரிகிறது. அவள் சிந்தனை விரிவுபடுவதாகக் காட்சி | |
| | | மழை வா வெயில் போ<br>மழை வா வெயில் போ<br>(மழை வா...) |
| படகில் நின்று வலை வீசி மீன் பிடித்தல் | தனது கணவன் கடலுக்குப் போன படகில் உள்ள பாயைச் சுருக்கிவைத்து விட்டு மீன்பிடிப்பது தெரிகிறது. அவன் திரும்பவும் பாயை விரித்தால்தான் கரைக்கு வரமுடியும். அப்படி கரைக்கு வந்தால்தான் தன்வீட்டில் தான் பாய் விரித்து நிம்மதியாக நித்திரை கொள்ள முடியும். | |
| | | படகினிலே போன மச்சான்<br>பாய்விரிக்க மழை வா<br>(மழை வா......) |
| கடற்கரையில் கால் வைத்துப் பார்க்கிறான். மணல் கொதிக்கிறது. | | |
| | கடும் வெயில் கடலில் அவள் கணவன் மீன்பிடிக்க வலைபோடுவது மனக்கண்ணில் தெரிகிறது. சூரியன் உச்சிக்கு வருகிறான். | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| காட்சி | விளக்கம் | பாடல் |
|---|---|---|
| | | பொழுது மேலே கிளம்பி<br>பூமி இந்தச் சூடுசுட்டால்<br>கடலினிலே வலைவீசும்<br>கைகள் என்னபாடுபடும்<br>(மழை வா....) |
| பொங்கும் அலைகள் | அவளது மனதில் ஏக்கம். கடல் தெரிகிறது. மழை வந்தால் நல்லது. பொங்கும் அலை அவள் மனதில் காட்சியாக மாறுகிறது | |
| | | கடலுக்குப் போன மச்சான்<br>கடும் மழைக்கு வந்திடுவார்<br>கொந்தளிக்கும் என்னுள்ளம்<br>குளிராதோ மழை வந்தால்<br>(மழை வா... வெயில்போ....) |

இசையமைப்பு : எம். எஸ். செல்வராஜா
பாடியவர் : ராணி ஜோசப்
நிகழ்ச்சி : ஒளித்தென்றல்

காட்சிகளை மனதில் வைத்துப் பாடலை எழுதினால் படப்பிடிப்புக்கு இலகுவாக இருக்கும். இதனால் தொலைக்காட்சிக்கு மெல்லிசைப் பாடல்களை எழுதுபவர்கள் காட்சிகளையும், களத்தையும் மனதில் விரித்து பாடல்களை எழுத வேண்டியது அவசியம். கவிஞர்கள் பலர் பாடல்களை வெறுமனே யாத்து தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு அனுப்பினால் அவற்றிற்குப் பொருத்தமாக காட்சிகளைத் தேடுவது கஷ்டம். உதாரணமாக "கங்கை நதிபோல் அவள் கண்களில் கண்ணீர் வடிந்தது." என்று எழுதினால் பொருத்தமான காட்சிக்கு எங்கே போவது. அதனால் தொலைக்காட்சி மெல்லிசைப் பாடல் நிகழ்ச்சிக்குப் பிரதி எழுதுவதாக இருந்தால் காட்சிகளை மனதில் வைத்துக்கொண்டு எழுத வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சிப் பாடலுக்கான இசையமைப்பு

தொலைக்காட்சியில் பாடல்கள் காட்சியாக காட்டப்படுவதினால் இசையமைப்பாளரும் காட்சிகளை தெரிந்து வைத்துக் கொண்டு இசையமைத்தால் பாடல் ரசிகர்களை மிகவும் இலகுவாக சென்றடையும். பாடல் கடற்கரையைப் பற்றியதாக இருக்கும் போது இசையமைப்பாளர் பொருத்தமில்லாத வகையில் இசையமைத்திருந்தால் அந்தக் காட்சியும் இசையும் ஒன்றோடொன்று பொருந்தாமல் தனித்தனியாகச் சென்றுகொண்டிருக்கும்.

அத்தோடு இசையமைப்பாளர்கள், பாடலுக்கும் இடைஇசைக்கும் தேவையான இசைச் சுரங்களை முன்னரே எழுதி வைத்துக் கொண்டால் இசைக்கலைஞர்கள் கூடிய நேரம் பயிற்சி செய்து பாடலை நல்ல முறையில் ஒலிப்பதிவு செய்யக்கூடியதாக இருக்கும்.

## பாடல் காட்சிகள்

மெல்லிசைப் பாடலுக்குக் காட்சிகளைத் தொகுக்கும் போது பாடலின் தாள லயத்திற்கு ஏற்ப காட்சிகளைத் தொகுக்க வேண்டும். வயலைப் பற்றி பாடல் சித்தரிக்கும் போது மலைக் காட்சிகளைக் காட்டினால் ரசிகர்கள் மலைக் காட்சியை ரசிப்பதா? அல்லது பாடல் வரிகளை ரசிப்பதா? எனத் திண்டாட வேண்டிய நிலை ஏற்படும். மெல்லிசைப் பாடல்களுக்கு வெறுமனே வாத்திய கருவிகளையும், வாத்தியம் இசைப்பவர்களையும் காட்டுவதினால் பாடலின் உணர்வுகள் வெளிப்படாமல் போய்விடும். மேடை நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சிக்காக ஒளிப்பதிவு செய்யும் போது இந்த விதி முறைகளைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை.

## பாடகர்கள்

பாடகர்கள் பாடலைப் பாடும்போது மிகவும் இலகுவாகப்பாடுவது போன்ற முக பாவனை செய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இதற்குப் பாடலை நன்றாக மனனம் செய்து வைத்திருக்க வேண்டும்.

பாடகர்கள் சுருதி, தாளம் போன்றவற்றில் கவனம் செலுத்துதல் போல தமிழ் உச்சரிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். "எங்கள் மலைநாடு எங்கும் கலைக்காட்சி" என்ற பாடலை "எங்கள் மழை நாடு. எங்கும் களைக்காட்சி" என்று பாடினால் பாடலின் அர்த்தமே வேறுபட்டுவிடும். தொலைக்காட்சியில் மட்டும் பாடல் ஒளிபரப்பாகி மெல்லிசை பிரபல்யம் பெற்று விடும் என்பது சரியான கூற்றல்ல. பாடகர்களும் மெல்லிசைப் பாடல்களை மேடையில் பாடி பிரபல்யம் அடையச் செய்ய வேண்டும்.

பாடகர்கள் தாங்கள் பாடிய மெல்லிசைப் பாடல்களை மேடைகளிலும், கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் பாடும் துணிவுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

மேற்கூறியவற்றில் புனிதமான சிந்தனையுடன் பாடகர்களும் இசையமைப்பாளர்களும் தயாரிப்பாளர்களும் ஒன்று சேர்ந்து உழைத்தால் எமக்கென்று மெல்லிசைப் பாடல்கள் உருவாகும் காலம் வெகு தூரத்திலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சேவை

இலங்கையில் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்படும் போது கல்விச்சேவை நிகழ்ச்சி ஒளிபரப்புக்கு மட்டும் உபயோகிப்பதற்காக இரண்டு ஒளிப்பதிவுக் கலையகங்களும், ஒரு பிரதான ஒளிபரப்புக் கலையகமும் அடங்கிய ரூபவாகினி ஜப்பானிய அரசாங்கத்தால் கட்டப்பட்டு அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில் மாலை 6 மணி தொடக்கம் இரவு பத்தரை மணிவரையும் கல்விச்சேவை நிகழ்ச்சிகளே ஒளிபரப்பப்படும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருந்தது. ஆனால் பின்னர் உள்ளூர் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

ரூபவாஹினியின் ஆரம்ப காலத்திலிருந்தே திருமதி இந்திராணி குணரத்ன கல்விச்சேவைக்குப் பொறுப்பாக இருந்தார். அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கல்விச் சேவையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய பின்னர், தொலைக்காட்சிக்கு மாற்றம் பெற்றவர். அவர் தொலைக்காட்சியில் கல்விச் சேவை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வத்துடன் இருந்தார்.

இரவு நேரத்தில் மட்டும் ஒளிபரப்பை நடத்தி வந்த ரூபவாஹினி திருமதி இந்திராணி குணரத்ன எடுத்த முயற்சியினால் பகல் நேரத்திலும் மாணவர்களுக்காக ஒளிபரப்பை ஆரம்பித்தது. இதற்காக, பரீட்சார்த்த ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது. இது மிகவும் திட்டமிடப்பட்ட ஒளிபரப்பாகவே அமைந்திருந்தது. இந்த ஒளிபரப்பிலே எனக்கும் அறிவிப்பாளராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கான நிகழ்ச்சித் தொடரேடு தயாரிக்கப்பட்டது. திரு. எஸ். சிவசுப்பிரமணியம், திரு. எஸ். சத்தியநாதன் ஆகியோர் தமிழ்க் கல்விச் சேவைத் தயாரிப்பாளர்களாகக் கடமையாற்றினர்.

கல்விச் சேவை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்ட போது எவ்வாறு திட்டமிட்டு தயாரிக்கப்பட்டது என்பதற்கு அடையாளமாக தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பிற்காகத் தயாரிக்கபபட்ட நிகழ்ச்சித் தொடரேட்டை புதிய தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் பார்ப்பதற்காக இங்கே தரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ரூபவாஹினி கல்விச்சேவை - இரண்டாவது பரீட்சார்த்த
ஒளிபரப்பு, 1982 - நிகழ்ச்சித் தொடர்.
நாள்: செவ்வாய்க்கிழமை, 1982 ஒக்டோபர் 26ந் திகதி.

| Starting Time | Duration | Source | ஒளி- Image | ஒலி - Audio |
|---|---|---|---|---|
| 9.50 | 5' | FSS/C | Logo Rupavahini | Music |
| 9.55 | 3' | VCR/30/109<br>Cut 1 | National Flag<br>R-V Logo | Telecast Tape<br>National Anthem<br>Music recorded |
| 9.58 | | C1 | ரூபவாஹினி கல்வி<br>சேவை பரீட்சார்த்த<br>ஒளிபரப்பு | Music on background<br>Tape No: |
| | | C 2<br><br>CSS/Super<br><br><br><br><br><br><br>FSS | Announcer on Vision<br><br>Announcer's name<br><br>ON CAMERA<br><br><br><br><br>இன்றைய நிகழ்ச்சிகள் | அன்புள்ள மாணவர்களே, ஆசிரியர்களே, உங்கள் அனைவருக்கும் காலை வணக்கம். இரண்டாவது பரீட்சார்த்த ஒளிபரப்பின் மூன்றாவது வாரம், முதல்நாள் உங்களைச் சந்திக்கின்றோம். எமது ஒளிபரப்பு நேற்று சில நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகி இன்று தொடர்ந்து நவம்பர் மாதம் 12ம் திகதி வரை நடைபெறவிருப்பதை, தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.<br>இந்தப் பரீட்சார்த்த ஒளிபரப்பு — பற்றிய, நேர அட்டவணை, ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூலும், ஏற்கனவே கிடைத்திருக்கும் என நம்புகிறோம். இனி இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் எவை என்று பார்ப்போம்.<br>(FSS) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலைகள்

கல்விச் சேவையில் முறைசாராக் கல்வி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டு தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புக்குத் தயார் செய்யப்பட்ட சமயம் திரு. சிவசுப்பிரமணியம் தமிழ்க் கல்வி ஒளிபரப்புக்கு நிகழ்ச்சிகள் தயாரித்துத் தரும்படி கேட்டார். "ஆயகலைகள்" என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியை ஆரம்பித்தேன். இந்த நிகழ்ச்சியின் மூலம் இரண்டு மாபெரும் கலைஞர்களை அறிமுகம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

களி மண்ணைக் கொண்டு அழகிய சிலைகள் செய்யும் புல்லுமலை நல்லரத்தினம் அவர்கள் சரஸ்வதி சிலைகளைச் செய்து கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்கும், முக்கிய இந்து நிலையங்களுக்கும் இலவசமாகக் கொடுத்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அவர் செய்த சிலைகள் இப்போதும் சில இடங்களில் சாட்சி பகர்ந்த வண்ணம் இருக்கின்றன. இதனால் உந்தப்பட்ட நான் அவரை அணுகி சிலைகள் செய்யும் விதத்தைத் தொலைக் காட்சி நிகழ்ச்சியாகத் தயாரிக்க இருப்பதாக கூறினேன். சிலை செய்யும் விடயத்தில் மிகவும் மனம் சோர்ந்திருந்த திரு. புல்லுமலை நல்லரத்தினம் அவர்கள் மிகவும் மனமுவர்ந்து முன்வந்தார். நிகழ்ச்சித் தயாரிப்பு ஆரம்பமாகியது.

அவர் செய்த அந்தோனியார் சிலையொன்று மிகப் பெரியது என்று குறிப்பிட்டார். அந்தச் சிலை செய்யப்பட்டு கொட்டாஞ்சேனையில் உள்ள பாடசாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிலையை படம் பிடிக்கச் சென்ற அனைவரும் திகைத்து விட்டோம். ரோமாபுரியில் இருக்கும் சிலைகளுக்கு ஒத்ததாக மிகவும் அழகாக இருந்தது. "அந்தச் சிலை கொழும்பு அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் வைப்பதற்காகச் செய்யப்பட்டது. ஏதோ ஒரு காரணத்தால் உரிய இடத்தில் வைப்பதற்கு முடியவில்லை" எனவும் தெரிவித்தார். இரண்டு நிகழ்ச்சிகளைத் தயாரித்து முடித்தேன்.

நிகழ்ச்சி ஒளிபரப்பின் பின் சிங்கள மொழிபேசும் பலர் என்னிடம் வந்து புல்லுமலை நல்லரத்தினத்தின் விலாசத்தைக் கேட்டனர். ஏனெனில் அவரிடம் சென்று இந்த அபூர்வக் கலையைக் கற்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். அத்தோடு அந்தோனியார் சிலையை தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பார்த்த பின்னர் அதற்குரியவர்கள் உடனடியாகச் செயலில் இறங்கியதால் கொழும்பு அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் அந்தச் சிலை நிறுவப்பட்டது. இதன் பின்னர் புல்லுமலை நல்லரத்தினம் அவர்கள் என்னைச் சந்தித்தபோது "புனித அந்தோனியாரின் ஆசீர்வாதம் உங்களுக்கு என்றும் உண்டு" என்று தெரிவித்ததை என்னால் மறக்கமுடியாது.

அடுத்த நிகழ்ச்சியில் அறிமுகம் செய்யப்பட்ட கலைஞர் கலாசூரி லயநாத சிகாமணி ரி. இரத்தினம் அவர்கள். இவர் இசையுலகில் பெறுமதி மிக்க பொக்கிஷம். அவரை அணுகி தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றைத் தயாரிக்க இருப்பதாக கூறியதும் மிகவும் சந்தோச மடைந்தார். மிருதங்கம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்ற விபரத்தையும், அதிலிருந்து எவ்வாறு இனிய நாதம் பெறப்படுகிறது என்பதையும் அவர் விளக்கிய விதம் இசையுலகில் இருக்கும் அனைவருக்கும் மிகவும் பிரயோசனமான விடயங்களாகும். அத்தோடு மிருதங்கம் பழகுவதற்குத் தேவையான சகல விபரங்களையும் இதிலடக்கியதோடு அல்லாமல், அவருடைய மாணவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஒரு தாளலய இசை நிகழ்ச்சியையும் தயாரித்து ஒளிபரப்பினேன். நிகழ்ச்சி ஒளிபரப்பைப் பார்த்த திரு. இரத்தினம் மாஸ்டர் அவர்கள் வாழ்வின் இலட்சியத்தை தாம் அடைந்து விட்டதாகக் கூறி பெருமைப்பட்டதை என்னால் மறக்க முடியாது.

திடீரென திரு. சிவசுப்பிரமணியமும், இ.பாலசுப்பிரமணியமும் இணைந்து இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து தாங்கள் தயாரிக்கப் போவதாக கூறினார்கள். நிகழ்ச்சி கைமாறியது மட்டும் தான் மிச்சம். நிகழ்சியைத் தொடர்ந்து அவர்களால் தயாரிக்க முடியவில்லை. இப்பொழுது இருவரும் கனடா நாட்டில் வாசம் செய்கிறார்கள். லயநாத சிகாமணி கலாசூரி இரத்தினம் அவர்கள் மறைந்தபோது அவரின் ஞாபகமாக இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பலாம் என்ற எண்ணத்தில் ஒளிநாடாக்களைத் தேடியபோது நாடாக் களஞ்சியத்தில் அந்த நாடாக்களின் ஒளிப்பதிவு அழிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மிகவும் கவலைப்பட்டேன். இந்த மாபெரும் கலைஞன் வாழ்க்கை வரலாற்றை பதிவு செய்த வேறு எந்த நிகழ்ச்சிகளும் எம்மிடம் இல்லை. இனிமேல் இவரைப் போன்றவர்கள் பிறக்கவா போகின்றனர்.

தற்போது கல்விச் சேவையில் கே. ஞானசேகரன் அவர்களும், திருமதி சியமா யாக்கூப் அவர்களும் தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வருகிறார்கள்.

## முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவு

1993ம் ஆண்டு வரை முஸ்லிம் நிகழ்ச்சிகள் யாவும் கல்விச் சேவையின் கீழ் சிறுவர், விவரண நிகழ்ச்சிப் பிரிவு பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பாகி வந்தன. 1993ம் ஆண்டு அப்பிரிவின் தயாரிப்பாளராக இருந்த ஜனாப் ரஷிட் எம் ஹபீல் அவர்களின் முயற்சியினால் முஸ்லிம் நிகழ்ச்சிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் உதவிப் பணிப்பாளராக ஜனாப் ரஷிட் எம் ஹபீல் அவர்களே நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப்பிரிவு இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்பி வருகிறது. இந்தப் பிரிவினால் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் யாவும் உள்நாட்டுக் கலைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரிவில் தற்போது தயாரிப்பாளர் ஜனாப் எம். கே. யூனுஸ், தயாரிப்பு உதவியாளர் ஜனாப் மவாஹிர் மௌலானா, அஸாரியா பேகம் ஆகியோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகிறார்கள்.

## விசேட நிகழ்ச்சிப் பிரிவு

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சிப் பிரிவின் ஊடாக ஜனாப் யு.எல். யாக்கூப் தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகிறார். இவர் முன்னர் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு, செய்திப் பிரிவு, முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவு ஆகியவற்றில் கடமையாற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சித் தயாரிப்பில் பங்காற்றுவோர்

தற்போது திரு.ஆர்.சி. செல்வமோகன் தொழில்நுட்பப் பராமரிப்புப் பகுதியிலும், கலையகத் தொழில் நுட்பவியலாளர்களாக திரு.எல். கணேஷ், ஜனாப் ஏ.எஸ். முஸம்மில் ஆகியோரும், பிரதான கலையக தொழில்நுட்பவியலாளராக ஜனாப் எம்.ஐ. சியாமுடீன் அவர்களும், தயாரிப்பு சேவைப் பிரிவில் ஜனாப். ஏ. எஸ். எம். கஸாலி, மின்தொழில் நுட்பவியலாளராக திரு. ஜே.ஆர்.எஸ். சிவசாந்தகுமார், ஒளிநாடா வைப்பகத்தில் ஜனாப் எஸ்.எச்.எம். றியாள், வரைபு உயிர்ப்புப் பகுதியில் ஜனாப் இர்ஷாட் கமால்தீன், ஜனாப் யு.எல்.எம். றபீக் ஆகியோரும் தமது பங்களிப்புக்களை தமிழ் நிகழ்ச்சிகளுக்கு வழங்கி வருகிறார்கள்.

இவர்கள் அனைவரும் தமிழ் மொழி தெரிந்து தமிழ் நிகழ்ச்சிகளுக்கு உதவுபவர்கள். கூடுதலான பங்களிப்பைச் சிங்கள மொழி பேசும் தொழில்நுட்பவயிலாளர்கள் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்புகளுக்கு வழங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1982ம் ஆண்டிலிருந்து இலங்கை ரூபாவஹினிக் கூட்டுத்தாபனத்தில் தலைவர்களாகப் பதவி வகித்தோர்

திரு. எம்.ஜே.பெரேரா — தலைவர் / மா அதிகாரி
திரு. காமினி பேதிரிஸ்
திரு. அசேல நவரத்ன
எயர் கொமடோர் ஆனந்த சமரக்கோன் — (தகுதி வாய்ந்த அதிகாரி)
பேராசிரியர் திஸ்ஸ காரியவசம்
திரு. பீற்றர் அபேசேகர
திரு. லயனல் பெர்னாண்டோ
திரு. எல். வசந்தராஜா
திரு. டியு குணசேகர — (தற்போது பதவி வகிப்பவர் 1997)

## மா அதிகாரிகளாகக் கடமையாற்றியோர்

கலாநிதி அனுர குணசேகர
திரு. ஷேர்லி பெரேரா
திரு. அசோக மாலிமகே
திரு. சுனில் சரத் பெரேரா
திரு. வை.ஆர்.டி. சில்வா
திரு. டபிள்யு. டி. ஜயசிங்க — (தற்போது பதவி வகிப்பவர் 1997)

## பணிப்பாளர் சபையில் தமிழ்பேசும் உறுப்பினர்களாகப் பதவி வகித்தோர்

திருமதி நேசி நல்லையா
ஜனாப் எவ்.எம். அனிஸ்
டொக்டர் எஸ்.பி. சபாபதி
ஜனாப் ஜெகான் காசிம்
திருமதி. செல்வி திருச்சந்திரன்
கலாநிதி எம்.ஏ. நுகுமான்
திருமதி. ஜெயந்தி விநோதன் — (தற்போது பதவி வகிப்போர் 1997)
ஜனாப் நஸீர் அகமட் — " "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது நிகழ்ச்சிப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தோர்

**"பிரதிப் பணிப்பாளர் நாயகம்"**

திரு. எச்.எம். குணசேகர
திரு. ஹென்றி ஜயசேன
திரு. பியசிறி குணரட்ண
திரு. பியதாச ரட்ணசிங்க
திரு. ஏ. சேனாதீர
திரு. லூசியன் புலத் சிங்கள
திரு. சுதத் வட்டகெதர (தற்போது)

## தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்தோர்

| | |
|---|---|
| திருமதி. ஞானம் இரத்தினம் | (பிரதிப் பணிப்பாளர் பொது நிகழ்ச்சிகள்) |
| திரு. பி. விக்னேஸ்வரன் | (உதவிப் பணிப்பாளர்) |
| திரு. சில்வெஸ்ரர் எம். பாலசுப்பிரமணியம் | (பிரதிப் பணிப்பாளர்/தமிழ் நிகழ்ச்சிகள்) |
| திரு. எஸ். விஸ்வநாதன் | (உதவிப் பணிப்பாளர்/தற்போது) |
| திரு. எஸ். வன்னியகுலம் | (பணிப்பாளர் 97/தற்போது) |

## செய்திப் பிரிவு

| | |
|---|---|
| ஜே.பி. பத்திரன | (பணிப்பாளர்) |
| திரு. வக்சநாத விக்கிரம் | (பணிப்பாளர்) |
| திரு. யோகான் சமரநாயக்க | (பிரதிப் பணிப்பாளர் நாயகம்) |
| சில்வெஸ்டர் எம். பாலசுப்பிரமணியம் | (பிரதிப் பணிப்பாளர்/ஓய்வு பெற்றுவிட்டார்) |
| திரு. தேவப்பிரிய அபயசிங்க | (பிரதிப்பணிப்பாளர் நாயகம்/தற்போது) |
| அருணா செல்லத்துரை | (சிரேஷ்ட தயாரிப்பாளர்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சிச் சொற் களஞ்சியம்

**TELECASTING SYSTEM: தொலைக்காட்சி ஒளிபரப்பு வகை**

| | |
|---|---|
| PAL SYSTEM | இலங்கையில் இருக்கும் ஒளிபரப்பு வகை |
| SECAM | ஐரோப்பிய நாடுகள் ஒளிபரப்பும் வகை |
| N T S C | அமெரிக்க நாட்டு ஒளிபரப்பு வகை |

**CAMERAS** **கமெரா வகைகள்**

V H S CAMERA
S V H S CAMERA
U- MATIC CAMERA (THREE TUBE CAMERA)
BETA CAM

**RECORDING MACHINES** **ஒளிப்பதிவுக் கருவிகள்**

V H S RECORDER
S V H S RECORDER
U-MATIC HIGH BAND RECORDER
U- MATIC LOW BAND RECORDER
BETA RECORDER

**VIDEO CASSETTES** **ஒளிப்பதிவு நாடாக்கள்**

V H S CASSETTE
HIGH BAND CASSETTE
BETA TAPE
S - BETA TAPE
ONE INCH TAPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **AUDIO RECORDING CHANNEL** | **ஒலிப்பதிவு செய்யப்படும் வகை** |
| CHANNEL ONE | |
| CHANNEL TWO | |
| **(FRAMING)** | **பட அமைப்பு முறைகள்** |
| EXTREME LONG SHOT (ELS) | அதி கூடிய தூரப்படம் |
| LONG SHOT (L/S) | தூரப் படம் |
| MEDIUM LONG SHOT (MLS) | மத்திம தூரப்படம் |
| MEDIUM CLOSE UP (MCU) | அண்மைத்தூரப் படம் |
| CLOSE UP (CU) | அண்மைப் படம் |
| MID - CLOSE UP | மத்திம அண்மைப்படம் |
| OVER SHOULDER SHOT (OSS) | தோளுக்கு மேலாக |
| EXTREME CLOSE UP (XCU) | மிக மிக அண்மைப்படம் |
| EXTREME LONG SHOT (ELS) | மிக மிகத் தூரப்படம் |
| KNEE SHOT | முழங்காலுக்கு மேல் |
| VERY LONG SHOT (VLS) | மிகத் தூரப் படம் |
| TWO SHOT | இருவர் படம் |
| THREE SHOT | மூவர் படம் |
| TILT UP | கீழிருந்து மேலாக (கமெரா) |
| TILT DOWN | மேலிருந்து கீழாக |
| COVER SHOT | முழு உருவமும் திரையில் |
| FULL SHOT | திரையில் முழுமையாக |
| AUDIO | ஒலி |
| ANIMATION UNIT | உயிர்ப்புப் பகுதி |
| AUDIO FADE | ஒலியைக் குறைத்தல் |
| CAMERAMAN | படப்பிடிப்பாளர் |
| COMMENTARY | படவிளக்கம் |
| CLIP ON MIKE | பொருத்தும் ஒலிவாங்கி |
| CONTROL ROOM | கட்டுப்பாட்டகம் |
| CUT | நிறுத்துக |
| CUE | தொடக்கக்குறி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| DIRECTION | நெறியாள்கை |
| DIRECTOR | நெறியாளர் |
| DUBBING | ஒலிச்சேர்க்கை |
| DUBBING STUDIO | ஒலிச்சேர்க்கையகம் |
| EDITING | தொகுப்பு |
| EDITOR | படத்தொகுப்பாளர் |
| EARTH STATION | செய்மதித் தொடர்பு நிலையம் |
| FAST FORWARD | வேகமாகப் படத்தை ஓட்டு |
| FADE TO BLACK | ஒளி மங்கச் செய் |
| GRAPHICS DIVISION | வரைபுப் பகுதி |
| INSERT MODE | இடைச்செருகல் முறை |
| MAIN CONTRAL ROOM | பிரதான கட்டுப்பாட்டகம் |
| NEWS | செய்திகள் |
| NEWS CASTER | செய்தி வாசிப்பாளர் |
| NATURAL SOUND | இயற்கை ஒலி |
| OMNI DIRECTION MIKE | பலபக்க ஒலி வாங்கி |
| LIVE TELECAST | நேரடி ஒளிபரப்பு |
| LIGHTING TECHNICIAN | ஒளியமைப்பாளர் |
| LINE UP | ஒளிபரப்பு நிரல் |
| PAN LEFT | இடதுபக்கமாக திருப்பிக் கொண்டு செல் |
| PAN RIGHT | வலது பக்கமாக திருப்பிக் கொண்டு செல் |
| PRODUCTION | தயாரிப்பு |
| PRODUCER | தயாரிப்பாளர் |
| PREVIEW | மாதிரிப் படம் பார்த்தல் |
| PLAY | படத்தை ஓட்டுதல் |
| PAUSE | இடைவெளி |
| PROGRAMME PRESENTATION | நிகழ்ச்சி நிரற்படுத்தல் |
| PRESENTER | தொகுப்பாளர் |
| RECORDING | ஒளிப்பதிவு |
| RECORDER | ஒளிப்பதிவுக் கருவி |
| REWIND | பின்னோக்கிப் படம் ஓட்டல் |
| ROLL | ஒளிப்பதிவு ஆரம்பி |
| STUDIO | கலையகம் |
| STUDIO INTRODUCTION | கலையக அறிமுகம் |
| SHOT LIST | படநிரல் |
| SATELLITE | செய்மதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| SUB CONTRAL ROOM | கலையக கட்டுப்பாட்டகம் |
| SCRIPT | எழுத்துப் பிரதி |
| STAND BY | ஆயத்தமாயிரு |
| TELEVISION | தொலைக்காட்சி |
| TRIPOD | கமெரா தாங்கி |
| TRACK | கமெரா நகர்த்தும் தளம் |
| TRACK SHOT | கமெரா நகர்த்திப் படமெடுத்தல் |
| TELE PROMPTER | எழுத்துத் திரை |
| TELEVISION MONITOR | தொலைக்காட்சிப் பெட்டி |
| TELECAST | ஒளிபரப்பு |
| TALK BACK | கட்டுப்பாட்டகத்துடன் பேசும் கருவி |
| VIDEO | காட்சி |
| VISUAL | காட்சி |
| VISION MIXING | காட்சித் தொகுப்பு |
| VISION MIXER | காட்சித் தொகுப்பாளர் |
| VIDEO EDITING | படத்தொகுப்பு |
| VIDEO EDITOR | படத்தொகுப்பாளர் |
| UP SOUND | ஒலிமேலெழுப்பு |
| UNDER VOICE | ஒலியைக் குறை |
| ZOOM | குறிப்பிட்டுக் காட்டு |
| ZOOM IN | குறிப்பிட்டு முன்னோக்கு படம் பிடித்தல் |
| ZOOM OUT | குறிப்பிட்டு பின்னோக்கிப் படம் பிடித்தல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | TELEVISION IN SRI LANKA |
| Language | : | Tamil |
| Subject | : | Television |
| Written by | : | Aruna Selladurai |
| Copyright | : | Author |
| Published by | : | Aruna Veliyettaham *[Aruna Publication]* |
| First Edition | : | December 1997 |
| Types used | : | 10 Point |
| Number of Pages | : | 100 |
| Number of Copies | : | 1000 |
| Computer Type Setting | : | V. Sadagopan, R. Yogathasan, R. Thavarajan |
| Printed at | : | Ranco Printers & Publishers Ltd. |
| Price | : | Rs. 125/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினுள் உதிரமாய்

உள்ளத்துள் உரமாய்

உள்நின்று ஊக்குவிக்கும்

என் தந்தை

கதிரவேலு அருணாசலத்திற்கும்

என் அன்பு அன்னை

அன்னம்மாவிற்கும்

பத்தாம்பளையான

வற்றாப்பளை உறையும்

பெத்தாச்சி


கண்ணகை அம்மனுக்கும்

காணிக்கையாகும் என்படைப்புக்கள்

அருணா செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் தொலைக்காட்சி

*வரலாற்றுச் சுவடி*

அருணா செல்லத்துரை

# Television in Sri Lanka

by

Aruna Selladurai

நாடகங்களை எழுதியும், மேடையேற்றியும் பல பரிசுகளைப் பெற்றவர் அருணா செல்லத்துரை. பல நாடுகளுக்கும் சென்று இத்துறையிலே கற்று வந்தவர் அவர். பல காரணங்களின் மூலமாக பல துணைகளோடு, பல வழிகளில் முயன்று பிற நாடுகளுக்குச் சென்று, இத்துறையிலே பயின்று வந்தவர்கள் பலர் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் கற்று வந்தவர்கள்தான், கற்று உவந்தவர்களா என்பது சந்தேகத்துக்குரியது. அந்தத் துறையை வெறுமனே போய்க் கற்று வந்தோம் என சான்றிதழோடு வந்தவர்கள் காணப்படுகிறார்கள். உண்மையில் அருணா செல்லத்துரையைப் பார்த்த போது, அவருடைய படைப்புக்களைப் பார்த்த போது, வாசித்துப் பார்த்த போது, மேடையில் பார்த்த போது, தொலைக்காட்சியில் பார்த்த போது, வானொலியில் கேட்டபோது, அவர் அங்கு சென்று வெறுமனே கற்று வந்தவர் அல்லர், அவற்றைக் கற்று உவந்தவர் என்கிற எண்ணமே மனதில் ஏற்பட்டது.

*பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராஜன்*
*(20.09.93 அருணா செல்லத்துரையின் **வீடு** நாடக நூல்வெளியீட்டு விழாவில்)*

தொலைக்காட்சி ஊடகத்தின் சக்தியை உணர்ந்து சமூகப் பொறுப்புடன் இதில் சம்பந்தப்பட்டவர்கள் நடந்து கொள்ள வேண்டியது மிகமிக இன்றியமையாதது. இதனைச் சரியானபடி சமூக – மனித மேம்பாட்டிற்குப் பயன்படுத்த முடியும். அதிலும் தொலைக்காட்சி நாடகம் மிக மிக ஆழமாக விரும்பி உள்வாங்கப் படக்கூடியது. நல்லதைக் கொடுத்தால் நல்லது உருவாகும். இதற்கு இவற்றினைக் கொடுப்பவர்களும் தமது சமூக உணர்வையும், அறிவையும் மனதையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். இந்த ஒரு சிந்தனைக்குக் களமான நண்பர் அருணாவிற்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

*கலாநிதி. என். சண்முகலிங்கன்*
*(20.09.93 அருணா செல்லத்துரையின் **வீடு** நாடக நூல்வெளியீட்டு விழாவில்)*

ISBN 955-96159-1-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org